மஞ்சரி

5-6-
4

கர - ஆவணி

மதம் பிடித்த யானை

நீர் காட்டும் குச்சி

நவீன பஞ்சபாண்டவர்

குழந்தை வளர்க்கும் ஆண்

சாப விமோசனம் (சிறுகதை)

பாரம்பரியம் (புத்தகச் சுருக்கம்)

SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY
THE TANJORE ✣ TANJORE

-6-

ஆற்றல் தரும் ஞானம்

'உலகம் அனைத்தும் ஓர் உயிர்; நான் அதில் ஓர் உறுப்பு' என்ற ஞானம் அடைந்து, அதற்கிசைய ஒருவன் வாழ்ந்தால், என்ன நேரிட்டாலும் அதற்குத் தக்கபடி நடந்து கொள்ள அவனுக்கு ஆற்றல் உண்டாகிவிடுகிறது.

—மார்க்கஸ் அவுரேலியஸ்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்!

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
'குமுதினி'
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
கௌரி அம்மாள்
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுசி.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள்சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 4] [இதழ் 9

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY

ஊரும் உலகமும்

★

காஷ்மீரில் முதலில் சட்ட விரோதமாகப் புகுந்து பலாத்காரம் செய்தது பாகிஸ்தான். பிறகு ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டது. சட்ட பூர்வமாக அதை அடித்து விரட்ட இந்தியாவுக்குப் பூர்ண உரிமை உண்டு. இருந்தும் இந்தியா அதை விட்டு மக்களின் வோட்டெடுத்து விஷயத்தை முடிவு செய்ய இசைந்தது. ஐ. நா. சங்கம் கொரியாவுக்கு ஒரு நீதியும் காஷ்மீருக்கு ஒரு நீதியும் வழங்குவதால் விவகாரம் முற்றியது. இப்போது பாகிஸ்தான் இந்தியாமீது படையெடுக்கத் துடிக்கிறது; 'குதிரை தள்ளியதும் அல்லாமல் குழியும் பறித்ததாம்' என்பது போல, "இந்தியா என்னை அடிக்கப் பார்க்கிறதே" என்று பாசாங்கு செய்கிறது. என்ன வேடிக்கை!

*　　*　　*

"**எ**ங்கள் அபிப்பிராய உரிமையை நிலை நாட்டுகிற வரைக்கும் ஓயமாட்டோம்" என்று ஓயாமல் கர்ஜிக்கின்றன சில தினசரிப் பத்திரிகைகள். மிக நியாயம். ஆனால், அந்த உரிமைய்யை நிலை நாட்ட 'நியூஸ் பிரிண்ட்' என்ற பத்திரிகைக் காகிதம் மெத்த அவசியம். அந்தக் காகிதந்தான் வெகு குறைவாயிருக்கிறது. பத்திரிகைகளெல்லாம் உருவில் மெலிகின்றன. அபிப்பிராயத்தை கஜக்கோலால் அளந்து வெளியிடும் தேவை ஏற்பட்டிருக்கிறது. இதை நிவர்த்திக்க அல்லவா முதலில் முயலவேண்டும்!

*　　*　　*

காங்கிரஸிலிருந்தும் இந்திய மந்திரி சபையிலிருந்தும் கித்வாய், ஏ. பி. ஜைன் இந்த இரண்டு மந்திரிகளும் ராஜீநாமாச் செய்தார்கள். 'இவர்கள் போனது நல்லதாச்சு' என்பதுபோல் காங்கிரஸ் தலைவர் டண்டன் மகிழ்ந்தார். ஆனால், நேரு வருத்தப்பட்டார். இரண்டு பேரும் மந்திரி பதவியை மட்டும் திரும்ப ஏற்றார்கள். இதோடு விடவில்லை கித்வாய். டண்டனைக் குறையும் கூறினார். அவரும் உறுமிக் கொண்டிருக்கிறார். கட்சித் தலைவர் வேறே, கட்சி அமைக்கும் மந்திரி சபைத் தலைவர் வேறே என்ற முறையை இனியும் காங்கிரஸ் கடைப்பிடிப்பது அசட்டுத்தனம் என்பதையே இதெல்லாம் காட்டுகிறது.

*　　*　　*

ஜோர்டான் அரசர் அப்துல்லாவை ஒரு முஸ்லிம் வாலிபன் சுட்டுக் கொன்றுவிட்டான். அவர்

பிரிட்டிஷாருக்கு இங்கித நண்பர். இஸ்ரேலுடன் சமாதானமாய்ப் போக விரும்பியவர். ஜோர்டான், ஸிரியா, இராக் மூன்றும் ஒன்று சேர்ந்து மகா ஸிரியா ராஜ்யம் ஸ்தாபிக்க விரும்பியவர். அவர் போனதால் மத்தியக் கிழக்கு நாடுகளிலெல்லாம் கொந்தளிப்பு நேருமோ என்று பிரிட்டனும் அமெரிக்காவும் அஞ்சுகின்றன. ஸிரியரோ, 'இனி எங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிடும்' என்று எண்ணுகிறார்கள். எது எப்படியானாலும், இந்த அரசியல் கொலைகள் மட்டும் மிக மிக வெறுக்கத்தக்கவை.

* * *

தீர புருஷர்களைப்பற்றிய மதிப்புத்தான் எப்படியெல்லாம் மாறுகிறது! இரண்டாவது உலக யுத்தத்தில், இனி எதிர்த்தால் அடியோடு நாசம் என்ற நிலை பெல்ஜியத்துக்கு ஏற்பட்டது. அதன் சேனைத்தலைவரும் மன்னரும் என்ற முறையில் ஹிட்லரிடம் சரணடைந்தார் லியோபால்டு. அவரை இன்று பெல்ஜிய மக்களுக்குப் பிடிக்கவில்லை. அவர் பட்டம் துறந்தார். அதே யுத்த ஆரம்பத்திலே பிரிட்டனின் உதவி கிடைக்காமல் தன்னந் தனியாகப் போரிட்ட பிரான்ஸ் பாதி அழிந்தது. அப்போது பிரெஞ்சுப் பிரதம மந்திரியாகி ஹிட்லரிடம் சரணடைந்தார் மார்ஷல் பதான். அவர் யுத்தக் குற்றவாளியாகிப் பிரெஞ்சுச் சிறையிலே தமது தள்ளாத 95 வயதில் இப்போது காலமானார். இரண்டும் மகா சோகமான நிகழ்ச்சிகள்.

* * *

காங்கிரஸின் தேர்தல் அறிக்கை வெளியாகியிருக்கிறது. நேருதான் அதைத் தயாரித்தாராம். சுமார் நாலாயிரம் வார்த்தைகள் கொண்டது அந்த அறிக்கை. பொதுவான கொள்கைகள் சம்பந்தப்பட்ட மட்டில் அறிக்கை நன்றாய்த்தான் இருக்கிறது! ஆனால் உடனடியாக இன்ன இன்ன காரியங்கள் செய்யப் போகிறோம் என்று திட்டமாக அதில் குறித்திருக்கவில்லை. காந்திஜி எப்போது இயக்கம் தொடங்கினாலும், சர்வஜனங்களுக்கும் புரியக்கூடிய இரண்டு மூன்று காரியங்களைச் சொல்வார். அது அவர்களின் மனத்தைக் கவரும். இந்த முறையைக் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை கைப்பற்றியிருந்தால் மேலாயிருக்கும்.

* * *

டீ என்பது என்ன? இலை என்றுதான் நம்மில் பெரும்பாலோரும் நினைத்துக்கொண்டிருக்கிறோம். இலையோடு காம்பும் சேர்ந்ததே டீ என்று சில கம்பெனியார் நினைக்கிறார்கள். அவர்களுடைய பொட்டலங்களில் டீ இலையும் காம்பும் சேர்ந்தே விற்பனைக்கு வருகின்றன. கல்கத்தா முனிஸிபாலிட்டியார், இந்தக் கம்பெனியார் சிலர் மீது வழக்குத் தொடுத்தார்கள். அவர்களை மாஜிஸ்டிரேட் தண்டித்தார். ஆனால், இப்போது வங்க முதல் மந்திரி பி. ஸி. ராய், "டீ என்றால் என்ன என்று விசாரித்துக்கொண்டிருக்கிறோம். அது முடிவாகுமட்டும் இனி இந்த மாதிரி வழக்குத் தொடரவேண்டாம்" என்று உத்தரவிட்டிருக்கிறார். டீ என்றால் என்ன? இலையா? இலையும் காம்புமா? அல்லது முற்றும் காம்பேதானா? ஆராய்வது மெத்த அவசியம்!

நாடு கொழிக்கும் திட்டம்

★

இந்தியச் செல்வ நிலையை உயர்த்துவதுபற்றிய ஐந்து வருஷத் திட்டம் ஒன்றைச் சமீபத்தில் இந்திய சர்க்கார் வெளியிட்டது. அதைத் தயாரித்த கமிட்டியின் தலைவர் பிரதமர் நேரு. இந்தத் திட்டத்துக்கு மூலம், போன வருஷம் தயாரான ஆறு வருஷக் கொழும்புத் திட்டந்தான். அதிலிருந்து மிகச் சில மாறுதல்களே புதிய திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. மாறுதல் இல்லாத முக்கிய அம்சங்களே, இங்கே தந்துள்ள கொழும்புத் திட்டத்தின் சாராம்சத்தில் பெரிதும் அடங்கியிருக்கின்றன.

இந்தியாவில் 35 கோடி மக்கள் இருக்கிறார்கள். 10 தொழிலாளரில் 7 பேர் நிலத்தில் உழைத்து ஜீவிக்கிறார்கள். மிகப் பெரிய தொழிற்சாலைகள் சில இருக்கின்றன. 10 தொழிலாளரில் ஒருவருக்குத்தான் அவைகளில் வேலை கிடைக்கிறது. பஞ்சாலைகள் மிக முக்கியமானவை. அவைகளில் பெரும்பாலானவை பம்பாய், அகமதாபாது இரண்டிலுமே இருக்கின்றன. கல்கத்தாவில் சணல் ஆலைகளும், கங்கைப் பிரதேச நகரங்களில் கரும்பாலைகளும் இருக்கின்றன. உலகிலேயே மிகப் பெரிய இரும்பாலைகளில் ஒன்றான டாட்டா வொர்க்ஸ் டாட்டா நகரில் இருக்கிறது. ஸிமெண்ட், தீப்பெட்டி இவைகளையும் ஓரளவு பெரிய தொழிற்சாலைகள் தயாரிக்கின்றன. இவ்வளவுதான். இவைகளில் உழைக்கும் 10-இல் ஒரு தொழிலாளர் போக மீதி 9-இல் 2-பேர் சிறு சிறு தொழிற்சாலைகள், வியாபார ஸ்தாபனங்கள், சர்க்கார் ஆபீஸ்கள் இவற்றில் வேலை பார்க்கிறார்கள்.

இந்தியாவில் வருஷம் ஒன்றுக்கு 3 கோடி டன் நிலக்கரி கிடைக்கிறது. பிஹார், மேற்கு வங்காளம் இரண்டையும் சேர்ந்த ஒரே ஒரு பிரதேசத்திலிருந்தே இத்தனை நிலக்கரியையும் எடுக்கிறார்கள். இந்த நிலக்கரியை, நாட்டின் மீதி இடங்களுக்கெல்லாம் அதிகச் செலவு செய்து வண்டிகளில் எற்றி அனுப்பவேண்டி யிருக்கிறது. எண்ணெய்க் கிணறுகள் இந்தியாவில் மிகவும் குறைவு. ஆனால், பிரமாண்டமான ஆறுகள் அநேகம் இருக்கின்றன. அவைகளைக் கொண்டு, ஏராளமாய் நீர் விசை மின்சார சக்தி (Hydro-electric power) உற்பத்தி செய்துகொள்ள முடியும். அப்படிச் செய்வதில் இன்னொரு லாபமும் இருக்கிறது. இந்த ஆறுகளில் வருஷம் முழுவதும் ஒரே அளவாய் நீர் ஓடுவதில்லை. காலத்துக்குக் காலம் மாறுபடுகிறது. திடீர் திடீர் என்று

மூலம்: நியூ ஹொரைஸன் (ஆங்கிலம்: 1950), காமன்வெல்த் கன்ஸல்டிங் கமிட்டி, ஹிஸ் மெஜஸ்டிஸ் ஸ்டேஷனரி ஆபீஸ், லண்டன்.

வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அதனால் நிலவள அழிவு (Soil-erosion) நேர்கிறது. நீரோட்டத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்காக ஓடச் செய்வதால் மின்சார சக்தி உற்பத்தி செய்யலாம்; தவிர, நாட்டின் இயற்கைச் செல்வமான நிலவளம் பெருவாரியாக இப்படி அழியாமலும் பாதுகாக்கலாம்.

இதனால்தான் இந்திய சர்க்கார், ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் (River valley) அபிவிருத்தித் திட்டங்களில் விசேஷ கவனம் செலுத்துகிறார்கள். ஏழு திட்டங்களை இப்போதே தொடங்கியிருக்கிறார்கள். தாமோதர் பள்ளத்தாக்கில் எட்டு இடங்களில் அணை கட்டி, நீர்விசை மின்சார யந்திரங்களை அமைத்து வருகிறார்கள். இவைகளால் 2,40,000 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தியாகும். இந்தியாவிலேயே கனிப்பொருள் (mineral) வளம் மிகவும் கொழித்திருக்கும் இடம் இந்தப் பிரதேசம். இங்கே சுரங்கங்கள் தோண்டி வேலை செய்ய, இந்த மின்சார உற்பத்தி பெரிதும் உதவும். தவிர, இந்த அணைக்கட்டுகளால் ஏராளமான பயிர் நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும். இந்தத் திட்டம் பூர்த்தியாக 50 கோடி ரூபாய் செலவாகும். 1948-இல் தாமோதர் நதியின் முதல் அணைக்கட்டைத் தொடங்கினார்கள். அது 1953-இல் பூர்த்தியாகும். ஸட்லஜ் நதியில் அணை கட்டுவது மற்றொரு திட்டம். அதனால் புது டில்லிக்கும், வட நாட்டின் வேறு நகரங்களுக்கும் மின்சார சக்தி கிடைக்கும்; வறண்டு கிடக்கும் பல இடங்களில் நீர்ப்பாசனம் ஏற்படுமாகையால், இடம் பெயர்ந்த மக்கள் பலரை அவைகளில் குடியேற்றுவிக்கலாம். ஸட்லஜ் நதி அணைக்கட்டுகளில் ஒன்று, ஐக்கிய அமெரிக்காவின் உலகப் பிரசித்தியான பூல்டர் டாம் என்ற அணைக்கட்டைப் போல் அவ்வளவு பெரிதாயிருக்கும்.

நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள மகாநதிக்குக் குறுக்கே 150 அடி உயரமும் 15,000 அடி அகலமும் உள்ள ஓர் அணைக்கட்டைக் கட்டப்போகிறார்கள். அதிலும் நீர்விசை மின்சார சக்தி உற்பத்தி செய்யும் இரண்டு யந்திரங்களை அமைப்பார்கள். அவற்றால் 32,100 கிலோ வாட் மின்சார சக்தி கிடைக்கும்.

இந்த மூன்று நதிகளிலும் கட்டப் போகும் அணைகளால் மட்டுமே 1957-ஆம் வருஷத்தில் 60 லட்சம் ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள பயிர் நிலங்களுக்குப் புதிதாய்ப் பாசன வசதி கிடைத்துவிடும்; தவிர, 7 லட்சம் கிலோவாட் மின்சார சக்தியும் புதிதாய்க் கிடைக்கும். இப்போது இந்தியாவில் உற்பத்தியாகும் மின்சார சக்தி மொத்தம் 14 லட்சம் கிலோவாட்.

இந்த ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களைத் தவிர, அங்கங்கே பற்பல நீர்ப்பாசன வசதித் திட்டங்களையும் சர்க்கார் கைக்கொண்டிருக்கிறார்கள். நவீன முறைகளில் விவசாயம் செய்யக் குடியானவர்களுக்குப் போதித்து வருகிறார்கள். நல்ல விதைகளையும் உரங்களையும் அவர்களுக்கு விநியோகித்து வருகிறார்கள். விவசாய ஆராய்ச்சி புரியவும், விவசாயக் கல்வி பயிற்றுவிக்கவும் 14 புதிய ஸ்தாபனங்களை அமைத்து வருகிறார்கள். இந்த மாதிரி பல காரியங்களால் தானியம், பஞ்சு, சணல், எண்ணெய் வித்துக்கள் முதலியவைகளின் விளைச்சலை



1. ஸட்லஜ் நதி: பாக்ரா - நங்கல் ப்ராஜக்ட்; **2.** சம்பல் நதி: சம்பல் ப்ராஜக்ட்; **3.** கோஸி நதி: கோஸி ப்ராஜக்ட்; **4.** தாமோதர் ப்ராஜக்ட்: மோர் ப்ராஜக்ட்; **5.** மகாநதி ப்ராஜக்ட்; **6.** துங்கபத்ரா ப்ராஜக்ட்.

அடுத்த ஆறு வருஷத்துக்குள் ஏராளமாய்ப் பெருக்கிவிடலாம் என்று இந்திய சர்க்கார் நம்புகிறார்கள். இப்படி விளைச்சல் அதிகரித்துவிட்டால், அயல் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு உணவுப் பொருள் தருவிக்கும் தேவையே இராது. அன்றியும், மூலப் பொருள்களையும் கைத்தொழிற் பண்டங்களையும் இந்தியாவிலிருந்து அதிகமாய் ஏற்றுமதி செய்யமுடியும்.

இந்திய அபிவிருத்தித் திட்டங்களுக்காக உத்தேசித்திருக்கும் மொத்தப் பணத்தில் மூன்றில் ஒரு பங்கை, இந்த ஆறுகளின் அணைக்கட்டு, விவசாய அபிவிருத்தி இரண்டு காரியங்களிலுமே இந்திய சர்க்கார் செலவிடப் போகிறார்கள். ஐந்தில் இரண்டு பங்கு பணத்தைப் போக்குவரத்து வசதிகளை விஸ்தரிப்பதில் செலவிடுவார்கள். 36 புதிய ரெயில் பாதைகள் போட

எண்ணியிருக்கிறார்கள். ரெயில்வே எஞ்சின்களும், வண்டிகளும் அமைப்பதில் ஏராளமான பணம் செலவிடுவார்கள். எஞ்சின், பாயிலர் இரண்டும் கட்டுவதற்காகக் கல்கத்தாவுக்கு அருகே நவீன வசதிகள் உள்ள தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறார்கள். நீண்ட ரஸ்தாக்கள் (Trunk Road) பலவற்றைப் புதிதாக அமைப்பதோடு, இப்போது உள்ளவற்றையும் சீர்திருத்துவார்கள். மேலக்கடற்கரையில் காண்ட்லா என்னும் இடத்தில் ஏற்றுமதி இறக்குமதிகள் நடக்கக்கூடிய பெருந்துறைமுகம் (Port) ஒன்று அமையப்போகிறது. அதற்குப் பக்கத்திலே விக்கா, பாவ்நகர் என்ற இரண்டு இடங்களிலும் கப்பல்கள் தங்கக்கூடிய சிறு துறைமுகங்கள் (Harbours) இருக்கின்றன; அவைகளையும் சீர்திருத்தப் போகிறார்கள். சென்னை, பம்பாய், கொச்சி இந்த இடங்களில் உள்ள பெருந் துறைமுகங்களில் நவீன வசதிகளையெல்லாம் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

கைத்தொழில்களின் அபிவிருத்திக்குச் செலவிடப்போகும் தொகை இன்னும் குறைவு. மொத்தப் பணத்தில் பத்தில் ஒரு பங்குதான் அதில் செலவிடுவார்கள். இந்தத் திட்டத்தில் மிக முக்கியமாக இரும்பு, எஃகு உற்பத்தி, எஞ்சினீரிங் சாமான்கள் செய்வது இவைகளைக் கவனிப்பார்கள். டாட்டா நகரிலும் கல்கத்தாவிலும் உள்ள இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி வருகிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் முற்றும் புதிய எஃகுத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பார்கள். பிஹாரில் ஸிந்திரி என்னுமிடத்தில் ஸிமெண்ட் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாய் அமைக்கும் வேலை தொடங்கியிருக்கிறது. பங்களூரில் விமானம் கட்டும் தொழிற்சாலை ஒன்றும், வேறு இடங்களில் யந்திரக் கருவிகள், அலுமினியம், வேறு பொருள்கள் இவைகளை உற்பத்தி செய்யும் சில தொழிற்சாலைகளும் அமைந்து வருகின்றன. உரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைக்கும் வேலை இந்தியாவிலேயே முதல் முதலாகத் திருவாங்கூரில் 1945-இல் பூர்த்தியடைந்தது. இப்போது ஸிந்திரியில் இரண்டாவது உர உற்பத்திச் சாலை அமைந்து பூர்த்தியாகும் நிலையில் இருக்கிறது. இதில் வருஷம் ஒன்றுக்கு 3,50,000 டன் உரம் தயாராகும்.

இந்தத் திட்டங்களால் இந்தியாவின் பொதுஜனங்களுக்கு என்ன லாபம்? இப்போது உணவுத் தானியம் நாள் ஒன்றுக்குப் பல இடங்களில் 12 அவுன்ஸ் ரேஷனே அளிக்கிறார்கள். இந்தத் திட்டங்களின் பலனாக 1957-இல் 16 அவுன்ஸாக அது உயரும். இப்போது வருஷத்தில் ஒருவருக்குச் சுமார் 10 கஜம் விகிதந்தான் துணி கிடைக்கிறது. 1957-இல் அது 15 கஜம் கிடைக்கும். கல்வி போதனை, இடம் பெயர்ந்தோருக்கு உதவி முதலிய சேவைகளால் பல லட்சக்கணக்கான மக்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். அபிவிருத்தித் திட்டங்களுக்காக உத்தேசித்திருக்கும் மொத்தப் பணத்தில் ஆறில் ஒரு பங்கை இந்தச் சேவைகளில் செலவிடப்போகிறார்கள். ஆஸ்பத்திரிகள், மருந்துச் சாலைகள், வீடுகள், சேரிகளைச் சுத்தப்படுத்துவது இந்த வேலைகளுக்குச் செலவிட மிகவும் சொற்பத் தொகைகளையே இந்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள்.



இந்தியாவில் சாகுபடியாகும் நிலப்பரப்பைவிட ஆறில் ஒரு பங்குதான் அதிகம் ஐக்கிய அமெரிக்காவின் சாகுபடி நிலப்பரப்பு. ஆனால், அது இந்தியாவைப் போல் 60 மடங்கு உரம் உபயோகிக்கிறது. வருஷம் ஒன்றுக்கு இந்தியா உபயோகிக்கும் உரம் 2 லட்சம் டன்; ஐக்கிய அமெரிக்கா உபயோகிப்பது ஒரு கோடியே 30 லட்சம் டன். இந்தியாவில் இருக்கும் டிராக்டர்கள் 10 ஆயிரம்; ஐக்கிய அமெரிக்காவில் இருப்பவை 25 லட்சம்.

க்விஸ்

[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 14-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. தேரை, தவளை, மரப்பல்லி இந்த மூன்றில், எந்த ஜந்துவால் தோட்டத்துக்கு மிகவும் நன்மை?

2. 'வெள்ளி மடந்தை' என்ற வார்த்தை (அ) அரிச்சந்திர புராணத்தில் வரும் ஒரு பெண், (ஆ) ஒரு செடி இந்த இரண்டில் எதைக் குறிக்கிறது?

3. "இது யானைத் தந்தச் சீப்பு" என்று ஒரு பண்டிதர் சொன்னார். உடனே மற்றொரு பண்டிதர், "தந்தச் சீப்பு என்றாலே போதுமே. யானைத் தந்தமல்லாத வேறு தந்தமும் உண்டோ?" என்றார், இரண்டாவது பண்டிதர் சொன்னது சரியா, தவறா?

4. ஸினிமாவைத் திரையிடும் புரொஜெக்டர் என்ற யந்திரத்தில் ஐந்து நிமிஷ நேரத்தில் எத்தனை அடி நீளம் பிலிம் ஓடுகிறது?

5. நேர்க்கோண முக்கோணம் எதுவானாலும் சரி; அதில் நேர்க்கோணத்தை ஒட்டிய இரண்டு பக்கங்களின் சதுரங்களை ஒன்று கூட்டினால், நேர்க்கோணத்தின் எதிர்ப்பக்கத்தின் சதுரத்துக்குச் சமமாயிருக்கும். இதற்குப் 'பைதாகரஸ் தியரம்' என்று பெயர். இதை முதலில் கண்டுபிடித்தவர் பைதாகரஸ்தானா, இல்லையா?

6. வானவெளிக் கப்பல் (Space Ship) வெகு சீக்கிரம் வரப்போவதாகச் சொல்லுகிறார்கள். அது வந்துவிட்டதாகவும் நீங்கள் அதில் பிரயாணம் செய்வதாகவும் வைத்துக்கொள்ளுங்கள். அப்போது நல்ல வேளையாக ஏதோ ஒரு கிரகத்தின் குளிர்ந்த பக்கத்தில் நீங்கள் போய் இறங்கிவிடுகிறீர்கள். மறு பக்கத்திலோ தாங்கமுடியாத சூடாக இருக்கும். ஏனென்றால், அந்தப் பக்கம் சமீபத்தில் இருக்கும் சூரியனையே எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கும். இது என்ன கிரகம்?

7. உணவு என்றால், அது தேக வளர்ச்சிக்கு உதவும் இயல்பு படைத்திருக்க வேண்டும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். இந்தப் பொருளில் தண்ணீர் ஓர் உணவா, இல்லையா?

8. இரண்டு வட்டவடிவக் காசுகள் இருக்கின்றன. இரண்டின் குறுக்களவும் சமம். ஒரு காசைக் கீழே வைத்து, அசையாமல் கெட்டியாகப் பிடித்துக்கொள்வோம். இரண்டாவது காசை முதல் காசோடு ஒட்டிப் பக்கத்தில் வைப்போம். முதல் காசு சிறிதும் அசையவோ சுழலவோ கூடாது. இரண்டாவது காசை மெல்ல மெல்லச் சுற்றி முதல் காசைப் பிரதட்சிணம் செய்ய விடுவோம். அப்போது இரண்டாவது காசு எத்தனை தடவை கீழ் மேலாகச் சுற்றும்?

சரளா பேன்

மகாத்மாவின் ஐரோப்பியச் சிஷ்யைகளில் ஒருவர் சரளா பேன். இவரைப்பற்றி அதிகமாக யாருக்கும் தெரியாது. சிறு வயதில் இவர் இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருந்தபோது அநேக இந்திய மாணவர்களும் மாணவிகளும் இவருக்குப் பழக்கமானார்கள். அவர்களிடம் இந்தியாவைப்பற்றிப் பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். 1930-31 - இல் சத்தியாக்கிரக இயக்கம் மும்முரமாக நடந்தபோது அந்த விவரங்களையெல்லாம் கேட்கக் கேட்க உடனே இந்தியாவுக்குப் புறப்பட வேண்டுமென்று துடித்தார். கடைசியில் 1932-இல் இந்தியாவுக்கு வந்து மகாத்மாவின் ஆசிரமத்தில் சேர்ந்தார். அப்போது அவர்தான் இவருக்கு இப்படிப் பெயர் வைத்தார். கிராமசேவையில் அதிகமாக ஈடுபட்டதால் இவருடைய உடல்நிலை சீர்குலைந்தது. 1942-இல் மகாத்மா இவரை இமாலயச் சாரலிலுள்ள கசௌலி என்ற கிராமத்துக்குப் போய்த் தங்கி உடம்பைத் தேற்றிக்கொள்ளும்படி சொன்னார். உடம்பு குணமாயிற்று. ஆனால் அங்கே வசித்து வந்த பூடியா போன்ற பழங்குடிகளின் வறுமையைக் கண்டதும் அவர்களை விட்டுப் போகவே இவருக்கு மனம் வரவில்லை. அதுமுதல் மகாத்மாவின் பூரண சம்மதம் பெற்று அவர்களுக்காகவே உழைத்து வருகிறார். முதலில் அவர்களைப் பற்றிய முழுவிவரமும் தெரிந்துகொள்ளக் குமாவூன் பிரதேசத்தில் ஒரு முறை சுற்றுப் பிரயாணம் செய்தார். அப்போதுதான் 1942 - ஆகஸ்ட் இயக்கம் தொடங்கியது. மகாத்மாவின் சிஷ்யை ஆனதால் இவர் ஏதோ புரட்சிப் பிரசாரம் செய்யத்தான் இப்படிச் சுற்றுகிறார் என்று ஆங்கிலச் சர்க்காருக்குத் தோன்றிவிட்டது. பாதியில் இவரைக் கைது செய்தார்கள். இவரை இரண்டு தடவை விசாரணையின்றிச் சிறையில் அடைத்தார்கள். குளிர் நடுக்கும் சமயத்தில் இமாலயச் சாரலிலுள்ள ஆல்மோடா சிறையிலும் கடுங்கோடையில் லக்னௌ சிறையிலும் போட்டு வதைத்தார்கள்! எல்லாக் கஷ்டத்தையும் சிரித்த முகத்தோடு இவர் சகித்துக்கொண்டார்.

இமாலயத்தில் வைத்தியநாதம் என்ற பிரபல க்ஷேத்திரத்துக்குப் போகும் வழியிலே 1946-இல் இவர் ஓர் ஆசிரமம் ஸ்தாபித்தார். இதில் பூடியாக்களின் குழந்தைகளுக்கு உணவு, உடை முதலிய வசதிகளோடு கல்வி போதித்து வருகிறார். தன்னந் தனியாக இவர் இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார்; பெரும் பொருளுதவி தேவையாக இருந்தது. சமீபத்தில் உத்தரப் பிரதேச சர்க்கார் இவருக்கு உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள்.

—மனோரஞ்சன் ஸேன், 'பாரத வர்ஷ'.

பரதனும் ராமனும்



தசரதன் இறந்தபிறகு வசிஷ்டர் முதலியவர்கள் பரதனை அழைத்து வரும்படி கேகய தேசத்துக்குத் தூதனை அனுப்பினார்கள். பரதன் தூதன் வருவதற்கு முன்பே கெட்ட கனவுகளைக் கண்டு மனம் கலங்கியிருந்தான்; பிறகு தூதனுடன் அயோத்தி போய்ச் சேர்ந்தான்; ராமன் காடு சென்றதையும் அதன் விளைவாகத் தசரதன் உயிர் துறந்ததையும் இவைகளுக்கெல்லாம் தன் தாய் கைகேயிதான் காரணம் என்பதையும் உணர்ந்து மிகவும் வருந்தினான். கைகேயியை வாய் கொண்ட மட்டும் இகழ்ந்து பேசினான். கூனியைக் கடிந்து கொண்டான். ராமன் காட்டுக்குப் போனதற்குத் தான் எந்த விதத்திலும் காரணமில்லை என்று கௌசல்யையிடம் பல முறை சத்தியம் செய்தான்.

தந்தையின் ஈமக்கிரியைகளைச் செய்து முடித்ததும் மந்திரிகள் அனைவரும் பரதனுக்குப் பட்டம் கட்டப்போவதாகத் தெரிவித்தார்கள். ஆனால் பரதன், தான் காட்டுக்குப் போய் ராமனை அழைத்து வந்து அவனுக்கே பட்டம் சூட்டப்போவதாகச் சொல்லிவிட்டான்; தாய்மாரும் மந்திரிகளும் நகரப் பிரமுகர்களும் சேனைகளும் தொடரக் காட்டுக்குப் புறப்பட்டான். சுமந்திரன் தேர் ஓட்ட அதில் பரதன் ஏறிக் கங்கைக் கரையை அடைந்தான்; அங்கே குகனைச் சந்தித்தான்; ராமன் தங்கிப் படுத்த இடங்களைப் பார்த்து வருந்தினான். மறுநாள் குகனின் ஓடத்தில் ஏறிக் கங்கையைக் கடந்து பரத்துவாஜரின் ஆசிரமத்துக்குச் சென்றான். அங்கே ஓர் இரவு தங்கி

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.



மறுநாள் ராமனைக் காணச் சித்திர கூடத்துக்குப் புறப்பட்டான்.

அன்று ராமன் சீதையோடு மலைச்சாரலில் அமர்ந்து அங்கே உள்ள காட்சிகளை அவளுக்குக் காட்டி மகிழ்ந்தபடி இருந்தான். அப்பொழுது பரதனுடைய படை எழுப்பும் புழுதியும் ஆரவாரமும் உயரக் கிளம்பின. காட்டு விலங்குகள் பயந்து ஓடத் தொடங்கின. இதைக் கண்டு ராமன், "லட்சுமணா, யாராவது அரசனோ அரசகுமாரனோ வேட்டையாட வருகிறானா? வேறு ஏதாவது கொடிய விலங்குதான் இவைகளை விரட்டுகிறதா? சீக்கிரம் போய்ப் பார்த்து வா" என்றான்.

லட்சுமணன் உடனே உயரமான ஒரு தேக்குமரத்தில் ஏறி நாற்புறமும் கவனித்தான். வடக்கிலிருந்து யானை, குதிரைகளுடன் பெரிய சேனை ஒன்று வருவதைக் கண்டான். உடனே ராமனை நோக்கி, "அண்ணா, ஓம அக்கினியைப் பானையில் அடைத்து வையுங்கள். சீதை குகைக்குள் மறைந்து கொள்ளட்டும். நீங்கள் கவசத்தை அணிந்துகொண்டு வில்லோடு தயாராக இருங்கள்" என்றான். ராமன், "யாருடைய படை அது?" என்று கேட்டான். லட்சுமணன் கோபத்தோடு, "கைகேயியின் மகன் பரதன், ராஜ்யத்தைக் கைவசமாக்கிக்கொண்டு நம்மைக் கொல்ல வருகிறான்! மலை உச்சியில் ஏறிக்கொள்வோம். பரதன் என் கையில் மட்டும் சிக்கட்டும்; அவனைக் கொன்றுவிடுகிறேன், பாருங்கள். அவன் நமக்குச் சத்துரு. அவனைக் கொல்வது தவறில்லை. அவன் இறந்ததும் நீங்கள் இந்தப் பூமி முழுவதையும் ஆளலாம்" என்றான்.

அதற்கு ராமன், "பரதனே சிறந்த வில்லாளி. அப்படிப்பட்டவன் நேரில் வந்தால் நம் வில்லோ வாளோ எதுதான் பயன் படப்போகிறது? அதோடு பதினாலு வருஷம் காட்டில் வசிப்பதாக வாக்களித்துவிட்டுப் பரதனை நான் கொன்றுவிட்டால் எனக்கு ராஜ்யத்தால் என்ன பயன்? அதர்மத்தால் இந்திர பதவி வருவதாக இருந்தாலும் அது எனக்கு வேண்டாம். பரதன், சத்துருச்னன், நீ - மூன்று பேரும் இல்லாமல் எனக்குச் சுக போகம் எதற்கு? மூத்த மகனுக்கே ராஜ்யம் சேரவேண்டும் என்ற குல தர்மத்தை எண்ணித்தான் பரதன் என்னைக் காண இங்கே வந்திருக்கிறான். உனக்கு ராஜ்யம் வேண்டுமானால் சொல். நான் பரதனிடம் சொல்லி உனக்குக் கொடுக்கச் செய்கிறேன். அவனும் மறுக்காமல் உனக்குக் கொடுப்பான், பார்" என்றான். இதைக் கேட்டதும் லட்சுமணன் வெட்கி உடல் குன்றி நின்றான். பிறகு ராமனை நோக்கி, "தசரத மகாராஜா உங்களைப் பார்த்துப் போக வருகிறார்போல் இருக்கிறது" என்றான்.

"ஆமாம், தந்தைதான் நம்மைக் காண வந்திருக்கிறார். நம்மைப் பார்த்துவிட்டுச் சீதையினால் காட்டில் வசிக்க முடியாதே என்று அவளைத் தம்முடன் அழைத்துச் செல்ல வந்திருப்பார். அதோ அவருடைய இரண்டு குதிரைகளும் யானையும் தெரிகின்றன. அவருடைய வெண் கொற்றக் குடை காணவில்லையே! லட்சுமணா, நீ கீழே இறங்கி நான் சொல்வதுபோல் செய்" என்றான். லட்சுமணன் உடனே கீழே இறங்கி ராமனின் அருகில் கை கட்டி நின்றான்.

பரதன், ராமனுடைய ஆசிரமத்தில் கூட்டம் வேண்டாம் என்று எண்ணிப் படைகளைச் சற்றுத் தள்ளி இருக்கச் சொல்லி உத்தரவிட்டான். குகன் முதலியவர்களிடம் ராமன் எங்கே இருக்கிறான் என்று தேடும்படி சொல்லிவிட்டுத் தானும் மந்திரிகளுமாகக் காலால் நடந்து சித்திரகூட வனத்தைச் சுற்றிவந்தான். மலர்கள் அடர்ந்த ஒரு தேக்கு மரத்தடியில் வந்தவுடன் ஆசிரமத்தில் இருக்கும் அக்கினியிலிருந்து வரும் புகையைக் கண்டான். போகும் வழியில் மரஞ் செடி கொடிகள் வெட்டுண்டிருப்பதையும் அங்கங்கே மரக்கிளையில் மர உரி முதலியவை கட்டியிருப்பதையும் கண்டு ராமனுடைய ஆசிரமம் அருகில் இருப்பதாகத் தீர்மானித்தான். பர்ணசாலை தெரிந்தது. அதில் சீதையோடும் லட்சுமணனோடும் ராமன் அக்கினிபோல் ஒளிர்வதைக் கண்டான். அழுதுகொண்டே தன்னை இகழ்ந்தபடி ராமனுடைய காலில் விழுந்தான். "அண்ணா" என்று அழைத்து மேலே வார்த்தை எழாமல் இருந்தான். சத்துருச்னனும் அழுதுகொண்டே ராமனை வணங்கினான். ராமன் இருவரையும் அணைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தான். பிறகு தன் தந்தையைப்பற்றி விசாரித்தான்.

தந்தை இறந்ததாகப் பரதன் சொன்னதும் ராமன் நினைவிழந்தான். சிறிது நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து பலவாறு புலம்பினான்; காட்டில் கிடைத்த பொருள்களைக் கொண்டு தந்தைக்குச் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தான்.

கௌசல்யை முதலிய ராணிமாரை அழைத்துக்கொண்டு வசிஷ்டர் ராமனுடைய ஆசிரமத்துக்கு

வந்தார். ராமனும் சீதையும் லட்சுமணனும் அவர்களை வணங்கினார்கள். ராமனைக் கண்டு வருத்தத்தை அடக்க முடியாமல் அவர்கள் கண்ணீர் சிந்தினார்கள். பரதன் ராமன் அருகில் அமர்ந்தான். வந்திருந்த எல்லாரும் ராமனிடம் அவன் என்ன சொல்லப் போகிறான் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள்.

ராமன் பரதனைப் பார்த்து, "பரதா, நீ எதற்காக மரவுரியை உடுத்துக்கொண்டு ராஜ்யத்தை விட்டுவிட்டுக் காட்டுக்கு வந்திருக்கிறாய்? அதைச் சொல்" என்று கேட்டான். பரதன் கைகூப்பி, "என் தாய் நரகத்துக்குத்தான் போகப்போகிறாள். அவளால்தானே இப்பேர்ப்பட்ட பாவச்செயலை என் தந்தை செய்தார்! இனிமேல் தாங்கள் தயை செய்து ராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொல்லித் தன் தலையால் ராமன் காலைத் தொட்டு வணங்கினான்.

ராமன் பரதனை அணைத்துக் கொண்டு கூறுவான்: "உன்மேல் ஒரு தவறும் இல்லை என்று எனக்குத் தெரியும். அறியாத்தனமாகத் தாயை இகழாதே! மகாராஜாவுக்கு எப்படி வேண்டுமானாலும் உத்தர விட அதிகாரம் உண்டு. தாய் சொல்லுக்கும் மதிப்பு வைக்க வேண்டியது அவசியம். அவர்கள் இருவரும் சேர்ந்து காட்டுக்குப் போகும்படி உத்தரவிட்டிருக்கும் போது அதை நான் எப்படிப் புறக்கணிப்பது? பதினாலு வருஷம் காட்டில் வாழ்ந்து பிறகு ராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொள்வேன்."

இதைக் கேட்டு எல்லாரும் வருத்தமுற்றார்கள். இப்படி அன்று இரவு கழிந்தது. மறுநாள் காலையில் எல்லாரும் கங்கையில் ஸ்நானம் செய்து கடன்களை முடித்துக்கொண்டு ராமனைச் சூழ்ந்து அமர்ந்தார்கள்.

பரதன், "என் தாய்க்குத் திருப்தியாகிவிட்டது. ராஜ்யத்தைத் திருப்பி உனக்குக் கொடுத்து விடுகிறேன். பெருவெள்ளத்தை உடைந்த அணையினால் தடுத்து நிறுத்த முடியுமா? கோசல ராஜ்யத்தை உன்னைத் தவிர வேறு யாராலும் பாதுகாக்கவே முடியாது" என்றான். அங்கே கூடியிருந்த நகர மக்கள் பரதனுடைய குணத்தை மெச்சினார்கள். ஆனால் பரதன் எவ்வளவு சொல்லியும் ராமன் அதற்குத் தகுந்த பதில் அளித்து ராஜ்யபாரத்தை ஏற்க மறுத்துவிட்டான். அப்போது ஜாபாலி என்ற அந்தணர், "ராமா, ஏன் இப்படிப் பயனற்ற பேச்செல்லாம் பேசுகிறாய்? போய்ப் பட்டாபிஷேகம் செய்துகொள். அங்கே உன்னைத்தான் எல்லாரும் எதிர்பார்க்கிறார்கள். தசரதர் உனக்கு யார்? நீ அவருக்கு யார்? அவர் ஓர் அரசர். நீயும் ஓர் அரசன். அந்த அரசர், போகவேண்டிய இடத்துக்குப் போய்விட்டார். இப்போது நீ கண்ணெதிரில் காண்பதுதான் சத்தியம். தானம், தவம், விரதம் இவையெல்லாம் வெறும் சூழ்ச்சி. ஆகவே, உன்னைத் தேடி வரும் ராஜ்யத்தை வீணாக மறுக்காதே" என்றார்.

அப்படியும் ராமன் தன் நிலையினின்று திரியவில்லை. "தாங்கள் என் சொந்த நன்மைக்காகச் செய்யத் தகாத சில காரியங்களைச் செய்யும்படி சொல்லுகிறீர்கள். உலக நியதியைக் கடந்து பாவம் செய்தால் உலகம் நம்மை மதியாது. நான் என் புலன்களைமட்டும் திருப்தி

செய்து வாழ்வது சரியல்ல. அக்கினி, வாயு, சந்திரன் போன்றவர்களும் தாம் செய்த வினையின் பயனை அநுபவித்துத்தான் வருகிறார்கள். நூறு யாகங்களைச் செய்து இந்திரன் தேவருக்கு அரசனானான். முனிவர் அனைவரும் கடுந்தவம் செய்து தேவ லோகம் சென்றார்கள். தங்கள் முன்னோர்களும் நல்வினை செய் திருக்கிறார்கள்; பிறகு பிறந்த வரும் செய்து வருகிறார்கள். அவர் கள் இந்த உலகத்தைக் கடந்து சிறந்த மேலுலகத்தை அடைந் திருக்கிறார்கள். தர்மத்தில் ஈடு பட்டவர்களைத்தான் பெரியோர்கள் கொண்டாடுவார்கள்'' என்றான்.

அதற்கு ஜாபாலி, ''நான் நாஸ்திக வாதம் பேசுவதாக எண் ணாதே; உன்னைத் திருப்பவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இப் படிச் சொன்னேன்'' என்றார்.

பிரகு வசிஷ்டர், ''ராமா, ஜாபாலி முனிவர் தர்மத்தை உணர்ந்தவர் தான். நீ இந்த உலக இயல்பை அறிந்துகொள்ளவேண்டும்'' என்று உலக சிருஷ்டி முதல் தசரதன் பிறப்பு வரையில் சொன்னார். பிறகு ராஜ்யத்துக்கு உரியவன் ராமன் தான் என்பதைக் எடுத்துக் காட்டி உடனே ஊர் திரும்பி ஆட்சியை ஏற்றுக்கொள்ளும்படி சொன்னார்.

ராமன் தந்தையின் சொல்லைக் காப்பது அதைவிட அவசியம் என்று சொல்லிவிடவே, வேறு வழி இல்லாமல் பரதன் ராமனுடைய பாதுகைகளைக் கேட்டு வாங்கிக் கொண்டு நந்திக்கிராமத்துக்குப் புறப்பட்டான்.

விசேஷ விளக்கம்

குடிகாரன்: நான் மிகவும் விசேஷமான நாட்களில் விஸ்கி குடிப்பது வழக்கம்.

நண்பன்: விசேஷமான நாட்களில் என்றால் எவை?

குடிகாரன்: நான் விஸ்கி குடிக்கும் நாட்கள்.

—'டப்ளின் ஒப்பீனியன்'

க்விஸ் விடை

(1) தேரையர்ல்தான். மரஞ்செடிகளுக்குக் கேடு செய் யும் பல பூச்சிகளை அது பிடித்துத் தின்கிறது. அதனால் தோட் டத்துக்குச் சிறிதும் கெடுதல் இல்லை. (2) ஒரு செடியை. முஸந்தா என்பது அதன் சிங்களப்பெயர். (3) தவறு. யானை யைத்தவிர, ஹிப்போபடமஸ் (நீர் யானை), வால்ரஸ் (சிம்சு மாரம்), காட்டுப்பன்றி, நர்வால் (கொம்பு மீன்) முதலிய வேறு பல பிராணிகளிடமிருந்தும் தந்தம் கிடைக்கிறது. மேலும், எலும்பு, ஸெலுலாயிடு, தென்னமெரிக்க மரம் ஒன்றின் விதை இவைகளால் செயற்கைத் தந்தமும் செய்கிறார்கள். ஆனால், யாவற்றிலும் சிறந்தது யானைத் தந்தமே. (4) 450 அடி. (5) இல்லை. சீனர்களே இதைக் கண்டுபிடித்தவர்கள். (6) புதன். (7) உணவுதான். (8) இரண்டு தடவை.

மனிதனுக்குத்தானு, மிருகங்களுச்குக்கூடத்
தான் இந்தப் பாசமெல்லாம் இருக்கிறது!

மதம் பிடித்த யானை

★

இங்கிலாந்தில் ஒரு சர்க்கஸ் கம்பெனி. அதில் ஒரு யானை இருந்தது. போலோ என்று அதற்குப் பெயர். அந்த யானை அருமையான வித்தையெல்லாம் செய்யும். சிறுவரெல்லாம் அதைக் கண்டு ஆனந்தம் அடைவார்கள். அது டான்ஸ் ஆடும்; ஒற்றைக் காலை ஊன்றித் தட்டாமாலை சுற்றும்; கீழே படுத்துச் செத்தாற்போல் கிடக்கும்; கடைசியில், கொடி பிடித்து, பாண்டு வாத்திய கோஷ்டிக்குத் தலைமை வகித்து நடத்திச் செல்லும். இப்பேர்ப்பட்ட யானைக்கு ஒரு சமயம் மதம் பிடித்தாற்போல் ஆகிவிட்டது. சர்க்கஸ் மானேஜரைக் கொல்லப் பார்த்தது. சிறுவர்களை மிரட்டியது. என்ன செய்தும் அதன் வெறி அடங்கவில்லை. அதைச் சுட்டுவிடும்படி அதிகாரிகள் உத்தரவிட்டார்கள்.

அதைச் சுடும் காட்சியைக் கொண்டும் காசு சம்பாதிக்க எண்ணினுர் மானேஜர். சுடப்போவதை விளம்பரம் செய்தார். ஏராளமான டிக்கட்டும் விற்ருர்.

ஏகமாய் ஜனங்கள் வந்து கூடி விட்டார்கள். கூண்டுக்குள்ளே வெறியுடன் வளைய வளைய வந்தது யானை. நடக்கப் போவதை அறிந்தது போல், 'ஹோ' என்று வீரிட்டது. எதிரே துப்பாக்கி சகிதம் சில வீரர் நின்றுகொண்டிருந்தார்கள்.

சுடப்போகிற சமயம். அந்தச் சமயத்தில் மிகவும் குட்டையான யாரோ ஒருவர் மானேஜரிடம் வந்தார். "இந்த யானையைச் சுடாமல் விடமாட்டீர்களா?" என்று கேட்டார்.

"துஷ்ட யானை இது. சுட்டே தீருவோம்" என்ருர் மானேஜர்.

"இல்லை. என்னைக் கூண்டுக்குள் விடுங்கள். இதன்மீது ஒரு குற்றமும் இல்லை என்று காட்டுகிறேன்" என்ருர் வந்தவர்.

மானேஜர் தயங்கினுர்.

"தயங்க வேண்டாம். இதோ அதிகாரிகளிடமிருந்து சட்ட பூர்வமாக அனுமதி வாங்கி வந்திருக்கிறேன். எனக்கு யானையால் ஏதாவது தீங்கு நேரிட்டால் அதற்கு நீங்கள் பொறுப்பல்ல" என்று சொல்லி, சர்க்கார் அனுமதிச் சீட்டு ஒன்றை நீட்டினுர் வந்தவர்.

மானேஜரால் இதற்குமேல் மறுக்க முடியவில்லை. கூட்டத்துக்கு விஷயத்தை அறிவித்தார். வந்தவரைக் கூண்டுக்குள் விட்டார்.

குட்டையான அந்த மனிதரைக் கூண்டுக்குள் கண்டதும், வெறியோடுதான் யானை மிரண்டது. ஆனுல், ஏதோ புதிய பாஷையில் சில வார்த்தைகளை அவர் சொன்னதும் அது சாந்தம் அடைந்தது. குட்டை மனிதர் அதன் துதிக்கை

யைத் தடவிக் கொடுத்துத் தம் கையிலே சுற்றிக்கொண்டார். கூண்டைச் சுற்றி நடந்தார். யானையும் குழந்தை போல் அவரைப் பின் தொடர்ந்தது.

பிறகு அவர் வெளியே வந்தார். ஜனக் கூட்டம் சந்தோஷ ஆரவாரம் செய்தது. ஆச்சரியமுற்ற மானேஜர், "இது என்ன ரகசியம்?" என்று விசாரித்தார்.

"ஒன்றுமில்லை. யானைக்குத் தாய் நாட்டு ஞாபகம் வந்துவிட்டது. இங்கே உள்ள எல்லாம் அதற்குப் புதிது; பாஷையும் புதிது. இது இந்திய யானை. ஹிந்துஸ்தானியில் பரிவோடு சில வார்த்தைகளைச் சொன்னேன். அதன் தாபம் தீர்ந்து களிப்புற்றது. ரகசியம் இவ்வளவுதான்" என்றார் வந்தவர்.

பிரமிப்புற்ற மானேஜர், அந்த மனிதருக்கு அதிகாரிகள் அளித்த அநுமதிச் சீட்டை மீண்டும் ஒரு முறை நன்றாய்ப் பார்த்தார். அதிலிருந்த பெயரைப் படித்தார். வந்தவர் வேறு யாருமல்ல: புகழ் பெற்ற ஆசிரியரான ருட்யார்ட் கிப்ளிங் என்பவரே!

—ஆதாரம்: புல்டன் ஊர்ஸ்லா, 'விமன்ஸ் இல்லஸ்டிரேட்டட் மகஸீன்', லண்டன்.

எந்த மதம்?

கிராமத்துக் குடியானவனை ஒரு பாதிரி சந்தித்தார். "தம்பீ, உன் மதம் என்ன?" என்று கேட்டார்.

குடியானவன் சொன்ன பதில் இது: "ஐயா, இங்கிருந்து நகரத்துக்கு மூன்று ரஸ்தாக்கள் போகின்றன. ஒன்று, குறுக்குப்பாதை; ஒன்று, நீண்ட பாதை; ஒன்று, சேறும் சகதியும் நிறைந்த பாதை. ஒரு கூடை கத்திரிக்காயுடன், என் சௌகரியப்படி ஒரு பாதையில் நடந்து நகரம் சேர்கிறேன். அங்குள்ளவர் என்னை, 'நீ எந்தப் பாதையில் வந்தாய்?' என்று கேட்பதில்லை. 'உன் சரக்கிலே சொத்தை சோடை இல்லையா? நல்ல சரக்கா?' என்றே கேட்கிறார்கள்."

—ஆங்கிலத் தழுவல்

சமூகமும் தனி மனிதனும்

எந்த ஜன சமூகம் தன் பாதுகாப்புக்காகத் தனிப்பட்டவர்களின் உரிமைகளைப் பறிக்கிறதோ, தன் அமைதிக்காக அவர்களின் கலாசாரத்தைச் சிதைக்கிறதோ அந்த ஜன சமூகம், தன் குழந்தைகளையே விழுங்கும் அரக்கியைப் போன்றது. தனிப்பட்ட எந்த ஒரு மனிதன் தன் சுயநலத்துக்காகச் சமூக ஒழுங்குகளை நாசம் செய்கிறானோ அந்த மனிதன், தான் பிறந்த வீட்டுக்கே கொள்ளி வைக்கும் குழந்தையைப் போன்றவன்.

—ஆகஸ்டி ஸபாடீர்

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்ப முடியாது. பதிலும் எழுத முடியாது. —ஆசிரியர்.

“விஜி, பாத்ரூமிலே இருக்கிற விறகையெல்லாம் எடுத்து, முற்றத்திலே வெயிலில் போட்டாயானால் அரையணாக் காசு தருவேன்” என்றாள் அம்மா.

நான்கு வயது விஜியும் அப்படியே செய்துவிட்டு, அம்மாவிடம் காசுக்குக் கையை நீட்டினாள்.

“கையிலே சில்லறை இல்லை. அப்பா வந்ததும் வாங்கித் தரேன்” என்றாள் அம்மா.

விஜி சாயந்தரம் வரையில் காத்திருந்தாள். அப்பா சினிமாவுக்குப் போய்விட்டதால், வெகுநேரம் வரவில்லை. விஜிக்குக் கோபம் வந்து விறகையெல்லாம் எடுத்துத் திரும்பவும் பாத்ரூமில் போட்டாள்.

அம்மாவிடம் வந்து, “நீயும் காசு கொடுக்கவேண்டாம். நானும் விறகைப் பாத்ரூமிலேயே போட்டுட்டேன், போ” என்றாள்!

—வே. நரசிம்மன், டி. எஸ். கே. ஆபீஸ், போத்தனூர்.

மணிக்கு ஐந்து வயது. அவன் அப்பா பெரிய புரொபஸர். பையனின் மனப்பாங்கை அறிந்து அதற்கேற்ற கல்வி போதிக்கவேண்டும் என்ற அபிப்பிராயம் கொண்டார்.

ஓர் அறையில் ஒரு ரூபாய் பணம், ஒரு வாழைப் பழம், ஒரு புஸ்தகம் மூன்றையும் வைத்தார். மணியை உள்ளே தனியாக விட்டார். கதவிடுக்கு வழியாக அவரும் அவர் மனைவியும் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

மணி பழத்தை எடுத்தால் விவசாயக் கல்வி, ரூபாயை எடுத்தால் வியாபாரக் கல்வி, புஸ்தகத்தை எடுத்தால் ஆசிரியர் கல்வி போதிக்கத் தொடங்குவதென்று திட்டமிட்டிருந்தார் அப்பா.

மணி முதலில் ரூபாயை எடுத்தான்; பையில் போட்டுக்கொண்டான். பிறகு பழத்தை எடுத்து



உரித்து விழுங்கினுன். அப்படியே புஸ்தகத்தின் ஏடுகளைப் புரட்டத் தொடங்கினுன்.

"இப்போது என்ன செய்வது?" என்று கேட்டாள் அம்மா.

"அவனுக்கு ஒரு கல்வியும் தேவை இல்லே. அவன் பெரிய அரசியல்வாதி ஆகிவிடுவான்" என்ருர் அப்பா.

—கே. டி. சாரி, 31, தேர் வீதி, சைதாப் பேட்டை.

என் நான்கு வயதுத் தம்பி கலியாணராமனுக்குத் தினந் தோறும் இரவில் அப்பா ஏதாவது தின்பண்டம் வாங்கிவருவார்.

ஒருநாள் அவர் கச்சேரிக்குப் போனபிறகு, அவனுக்குப் பலத்த காய்ச்சல் வந்து படுத்திருந்தான். இதை அறியாமல், அப்பா வழக்கப் படி பெப்பர்மிண்ட் பொட்டலம் வாங்கிவந்தார். தம்பிக்குக் காய்ச் சல் என்று தெரிந்ததும் அவர் பொட்டலத்தைப் பிரிக்கவில்லே.

தம்பி, "அது, என்ன பொட்ட லம்?" என்று கேட்டான்.

"அப்பாவுக்கு வயிற்றுவலி. அதற்கு மருந்து. வேறென்று மில்லே; தூங்கு" என்ருள் அம்மா.

எல்லாரும் தூங்கிவிட்டோம். போது விடிந்து பார்த்தால் அந்தப் பொட்டலம் சுத்தமாய்க் காலி யாகி யிருந்தது.

தம்பி மேல்தான் அப்பாவுக்குச் சந்தேகம். "என்னடா இது?" என்ருர்.

"எல்லாரும் தூங்கின அப்புறம் பாதிராத்திரியில் எனக்கு ஒரே வயத்துவலியாய்ப் போயிடுத்து. அதை எடுத்துச் சாப்பிட்டேன்" என்ருன் தம்பி.

—வி. பி. எஸ். மணியன், 39, மேற்குச் சிந்தாமணி, திருச்சி.

என் மாமா அன்று கோவிலுக் குச் சென்று திரும்பி வந்துவிட்டு, அவசரமாக ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். வண்டி கிளம்ப 15 நிமிஷம் இருக்கும்போது, அவ ருக்கு அவருடைய குடையைப்பற்றி ஞாபகம் வந்தது. ஏழு வயதுடைய என் தங்கை லீமாவை அழைத்து, "லீமா, கோவிலில் குடையை

வைத்துவிட்டு வந்துட்டேன் போலிருக்கு; ஓடிப்போய்ப் பார்த் துட்டு வா" என்ருர்.

லீமா கோயிலுக்கு ஓட்டமாய் ஓடினுள். சற்று நேரத்துக்கெல் லாம் இரைக்க இரைக்க வெறுங் கையோடு திரும்பி ஓடிவந்து, "ஆமாம், மாமா; கோவி லிலேதான் இருக்கு உங்க குடை. அதிலே உங்க பேர்கூட நூலிலே போட்டிருக்கு" என்று சொல்லி விளையாட ஓடிவிட்டாள்.

—ப்ளாரன்ஸ் விக்டர், டி 223, ரெயில்வே காலனி, தாம்பரம்.

கடவுள் செய்ந்நன்றி

★

'விநோத ரஸ மஞ்சரி' என்ற புத்தகத்தைப்பற்றிக் கேளாத தமிழர் மிகக்குறைவு. மிகவும் ரஸமாகப் புலவர் வரலாறுகளைச் சொல்லும் புத்தகம் அது. இன்று பிரஸிடென்ஸி காலேஜாக இருக்கும் கல்லூரி சிறிய கலாசாலையாக இருந்த காலத்தில் அங்கே தமிழாசிரியராக இருந்த அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் என்பவர் **'தின வர்த்தமானி'** என்ற பத்திரிகையில் பல கட்டுரைகளை எழுதிவந்தார். அவற்றைப் பிறகு தொகுத்து 'விநோத ரஸ மஞ்சரி' என்ற புத்தகமாக வெளியிட்டார். 1856-57-ஆம் ஆண்டுகளில் இந்தக் கட்டுரைகள் வெளிவந்தன. 'நன்றி மறவாமை' என்ற கட்டுரையில் வரும் ஒரு பகுதியை இங்கே எடுத்து வெளியிட்டிருக்கிறோம்.

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் (விநோத ரஸ மஞ்சரி): கடவுளானவர் தமது நிர்ஹேதுக கிருபையினாலே, மூலப் பிரகிருதியில் அழுந்திக் கட்டுப்பட்ட ஆத்மாவுக்குக் கரசரணாதி அவயவங்களைக் கொடுத்துப் பூமியில் ஜனிப்பித்து, போஷித்து, பரிபாலித்து, பரமாத்மாவாகிய தமக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள தாரதம்மியம் இவ்வகைப் பட்டதென்று வேதாகமங்களின் மூலமாக விளக்கி, பூனையானது தன்னைத் தழுவத் தெரியாத சக்தியற்ற குட்டியைத் தன் வாயினால் கவ்விச் செல்வதுபோல, தம்மை ஆச்ரயித்து வழிபாடு செய்ய அறியாத சக்தியற்ற ஆத்மாவானது, அறிந்து வழிபடச் செய்தும், குளவியானது அற்ப ஜந்துவாகிய புழுவினைத் தன்னுருவாக்குவதுபோல, தமது திவ்விய சொரூபத்தை அது மருவப் பண்ணியும், உலகத்தார் மேகத்திற்கு ஒரு நன்மையும் செய்யாதிருந்தும், அம்மேகம் அவர்களுக்கு க்ஷேமமுண்டாக மழையைச் சொரிவதுபோல, கடவுளானவர் ஆத்மாவினிடத்திற் கைம்மாறு வேண்டாது, அடைதற்கரிய அசாத்தியமாய் ஒப்பற்ற பெரிய வீட்டின்பத்தை அடையும்படி செய்யும் மகோபகாரத்தை, 'வான் செய்த நன்றிக்கு வையகமென் செய்யுமதை மறந்திடாதே' என்றபடி எப்பொழுதும் மறவாது தியானிக்க வேண்டும்.

தெய்வபக்தியே தீவினையாகிய உளையைக் கடந்து செல்லும் ஊன்றுகோல்; தெய்வதரிசனமே பிறவிக் கடலைக் கரைகாணும் நாவாய்; தெய்வத் தியானமே முத்தியாகிய மேல் வீட்டிலேறும் நூலேணி. தெய்வத்தின் அருளுதயமே அஞ்

ஞான இருளை யொழிக்கும் ஆதித்தியோதயம்; தெய்வவணக்கமே நரகவாசலை அடைக்கும் தாழ்; தெய்வத்தை வாழ்த்தும் வாழ்த்தே பாச விலங்கைத் தறிக்கும் கருவியாம். தெய்வபக்தி உதிக்காமல் உலக பாசம் ஒழியென்றாலும் ஒழியாது. தெய்வத்தைத் தொழாமற் பாவ நிவாரணமாகிறது பிரயாசம். தெய்வத்தை ஆராதிப்பதல்லவோ தவஞ் செய்கை? அதற்கு அந்நியமாகச் செய்வனவெல்லாம் அவஞ் செய்கையே. ஒரு நொடிப் பொழுதாவது தெய்வத்தை ஸ்துதியாத நாவுக்குப் பரிசுத்தமேது? தெய்வ சிந்தனையினாலன்றிச் சித்த சுத்தி சொப்பனத்திலும் வருமா? 'சுய காரிய துரந்தரனுஞ் சுவாமி காரிய வழவழ'கனுமா யிருப்பவனுக்குத் தெய்வ கடாக்ஷம் எவ்வாறு கிடைக்கும்? 'குழந்தையுந் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்' என்கிறார்கள்.

சூரிய ரச்மி பாயாததும், காற்று வீசாததுமாகிய இடமுமிருக்கலாம். கடவுளின் வியாபகத்திற்கு அந்நியமோ ஒன்றுமில்லை. ஆதலால், அவருக்கு அகம் புறம் எங்கும் கண், எங்கும் செவி, எங்கும் வாய், எங்கும் முகம், சகலாண்டசராசரமும் அவருடைய திருவுருவமாம். அதனால் அவர் காணாத காட்சியும், அவர் கேளாத கேள்வியும், அவர் பேசாத பேச்சும், அவர் அறியாத விஷயமுமில்லை. அதுபற்றி எவர்களும் அவராணையை மீறிக்குற்றஞ்செய்யவும், செய்த குற்றத்தை மறைக்கவும், ஒரு விதத்திலாவது அவரை வஞ்சிக்கவுங் கூடாது. என்றாலும், எக்காலமும் அவர் திருவுளத்திற்குப் பாங்காய் நடக்கின்ற பக்தர் செய்த குற்றத்தை மாத்திரம் அவர் கண்டும் காணாமலும், உணர்ந்தும் உணராமலும் இருப்பார்.

சிலர் தங்களுக்கு வருத்தம் சம்பவித்த காலத்தில், தாம் செய்த வெல்லாம் குறையாயிருக்க, 'நானென்ன குறை செய்தேன்' என்றும், தாம் செய்த சதியை நினையாமல், 'என்னளவில் தெய்வம் சதி செய்ததே' என்றும், 'அதை வணங்குகிறது தானே தக்கு? அதற்கென்ன கண்ணில்லையா?' என்றும், 'சோற்றுக்கில்லாதவாழைக்காய் பந்தலிலே கட்டித் தொங்கவிருக்கிறதோ? இப்படிப்பட்ட ஆபத்துக்கு உதவாமல் இனி யென்னதான் சாதிக்க விருக்கிறது?' என்றும், தெய்வத்தை நிந்திப்பார்கள்; அது நன்மையேயன்று.

குருட்டுக்கண் தூங்கியென்ன, விழித்தென்ன? தெய்வபக்தியில்லாதவர்கள் கங்கா ஸ்நானஞ் செய்தாலும், வனவாசம் பண்ணினாலும், மலைக்குகைக்குள்ளே கண்ணைத் திறவாமல் யோகத்திலிருந்தாலும் முத்தியடையமாட்டார்கள். ஆமை, மீன், தவளை முதலானவைகள் கங்காநதியில் உற்பவித்து, அக்கங்கைக்குள்ளே தானே மூழ்கியிருந்தும், யானை, புலி, கரடி முதலியவைகள் காட்டில் உற்பத்தியாகி, அக்காட்டினிடத்திலேயே வாசஞ் செய்தும், பகற் குருடாகிய கோட்டான் மரப்பொந்துக்குள்ளே தானே கண் மூடிக்கொண்டிருந்தும் என்ன பிரயோஜனம்?

தத்துவ விசாரணை செய்து, தாடி சடை வளர்த்து, தலையை முண்டித்து, தண்ட கமண்டலமேந்தி, தவ வேடம் பூண்டிருந்தும், தெய்வத் தியானமில்லாதவர்க்கு என்ன பயனுண்டு? அவர் கொண்ட கோலம் அலங்கோலமான பேய்க் கோலம் அல்லது பிணக் கோலமே.

தெய்வத்தை அஞ்சலியாத கை நெற் குற்றும் உலக்கை அல்லது

வீட்டு உத்தரக்கை; தெய்வத்தைப் பணியாத முடி கழனியில் நடும் நாற்றுமுடி அல்லது கம்பள நார் முடி; தெய்வத்தைத் தரிசியாத கண் பனங்காய் நுங்குக் கண் அல்லது பாம்புப் புற்றுக் கண்; தெய்வத்தை வாழ்த்தாத வாய் மலஜலமோடுங் கால்வாய் அல்லது சுண்ணும்புக் காளவாய்; தெய்வ ஸ்தலத்தைத் தேடிச் செல்லாத கால், கொல்லைப் பரண் கால் அல்லது பந்தலுக்கு நாட்டுங் கால்; தெய்வ ஸ்துதியைக் கேளாத செவித் தொளை பருத்த நுகத்தொளை அல்லது பாழான சாரத்தொளையாம்.

காற்றுக்கெதிரே ஏற்றிய விளக்கு போல, அடிக்கடி யலைந்து ஓயாமல் ஆடும் பம்பரம்போல, இடைவிடாது சுழன்று, ஒரு வேலையுமில்லாவிட்டாலும் நிற்க நேரமில்லாமல் திரியும் நாய் போலே அரைக்கணமுந் தங்காது, காடு மலை கானாறுகளெல்லாங் கடந்து, லோகாலோக மெங்கும் ஓடியுழல்கின்ற பொல்லாத மனமென்னுங் குரங்கு அஞ்ஞானமாகிய வெறிகொண்டு, ஆணவமாகிய மரத்தில் ஏறி, பலவகை எண்ணமாகிய இலைகள் செறிந்த ஆசையாகிய கிளைகளைத் தாவி, தீவினையாகிய கனிகளைக் கொள்ளைகொண்டு சேஷ்டை செய்யவொட்டாமல், அதனை நிராசையாகிய கயிற்றினாற் கட்டி, விடய வாதனையில்லாமல் அடக்கி வைத்தாலும், தெய்வத்தை உணரும் ஞானமில்லாதவர்களுக்கும் மோக்ஷத்திற்கும் வெகு தூரமே.

தெய்வநிலை இத்தன்மைத்தென்று அத் தெய்வத்தின் அருளைக்கொண் டறிந்தாலன்றி, மற்றொரு விதத்தில் தெளியக் கூடாமையால், யானை கண்ட குருடர் போலவும், உலகத்திலுள்ள பற்பல சமயத்தாரும் பற்பல அவசரமாகத் தாம்தாம் கண்டதையே பொருளென்று மதித்து, அதற்குத் தக்க யுக்தி சாதனங்களைக் கொண்டு சாதிப்பார்கள். அதை விரிக்கிற் பெருகுமாதலின் அது நிற்க.

ஔவையானவள், புகழேந்தி யென்னும் புலவரை நோக்கி, ஐந்து சமிக்கையைக் காட்டி ஒரு வெண்பாப் பாடவேண்டும் என்ற மாத்திரத்தில் அவர்,

"ஐய மிடுமி னறநெறியைக்
கைப்பிடிமின்
இவ்வளவே யாயினுநீ
ரிட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே யென்று
முணரவல் லீரேல்
அருவினைக ளைந்து மறும்"

என்று பாடிய பாடலுள்ளும்,

"எத்தேயத் தெத்திறத்தோ
ரெவ்வருணத் தெவ்வுருவி
னென்னை யாய்ந்தார்
அத்தேயத் தத்திறத்தோர்க்
கவ்வருணத் தவவுருவி
னவர்நே ராவன்
முத்தேவர் முத்தொழிலு
முக்குணமுங் கடந்துமறை
முடிவின் முத்தி
வித்தாகித் தனிநின்ற
பரப்பிரமப்பழம்பொருள்யான்
மெய்க்கோள் வாயே"

என்ற செய்யுளுள்ளும், தெய்வமொன்றென்று சொல்லுகின்றதனாலும், காரியமாகிய பணியும், பாண்டமும் பலவாயினும், காரணமாகிய பொன்னும் மண்ணும் ஒன்றாய் விளங்குவதனாலும், தெய்வமொன்றென்றே தெளிய வேண்டுமல்லது, பலவென்று பிரமிக்கலாகாது.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: இவ்வளவு குறுகிய காலத்தில் சீனக் கம்யூனிஸ்டுகள் எப்படித் தங்கள் உணவுப் பிரச்னையைத் தீர்த்துக்கொண்டார்கள்?

பதில்: அங்கே ராணுவ வீரர்களை வயலில் வேலை செய்யச் செய்கிறார்கள். இங்கே நம்முடைய ராணுவ வீரர்களோ சாய்வு நாற்காலியில் தூங்கிவிட்டுச் சீட்டு விளையாடிப் பொழுதை வீணாக்குகிறார்கள்.

*　*　*

கே: என் நாம் பறப்பதற்குக் கடவுள் சிறகு அளிக்கவில்லை?

ப: அவர் நமக்கு டாட்டா, டால்மியாவைப்போன்ற தேவர்களைத் தந்திருக்கிறார். அவர்கள் நம்மைப் பறக்க வைக்கிறார்கள். சில சமயங்களில் திடீரென்று கடவுளின் மடியில் போட்டுவிடுகிறார்கள்.

*　*　*

கே: இந்தியாவில் உள்ள கிராமங்களில் எல்லாம் மின்சாரம் வந்துவிட்டால் என்ன நடக்கும்?

ப: வறுமையிருளிலும் பசியிலும் மடியும் மக்களைக் கணக்கிடவும் கண்டுகொள்ளவும் உதவும்.

*　*　*

கே: அயல் நாட்டார் இந்தியாவைப் புகழ்கிறார்களே; உங்களுக்கு அது பிடிக்கிறதா?

ப: அந்தப் புகழில் பெரும்பாலானவை நாஸுக்கான பொய் தான்.

கே: நம்முடைய தலைவர்கள் பேசுவதற்கு முன்னே கும்பிடு போடுகிறார்களே; என்?

ப: அவர்கள் பேசப்போகிற முட்டாள்தனமான பேச்சுக்காக முன்னாலேயே மன்னிப்புக் கோருகிறார்களோ என்னவோ!

*　*　*

கே: தாய் அன்பில் நிறையத் தன்னலம் இருக்கிறதா?

ப: ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்குவதனால் எல்லாவித அன்புமே சுயநலமுடையதே. ஆனால் கடவுள் அன்பு அத்தகையதல்ல. நன்றியில்லா உலகத்துக்கு அவர் வாரி வழங்குகிறார்.

*　*　*

கே: 'கறுப்பு மனிதன்' என்றால் யார்? அவனைக் கண்டுபிடித்தவர் யார்?

ப: அவன் வெள்ளைக்காரனுடைய நிழலில் பிறந்தான்.



வெள்ளைக்காரன் காலடியில் நடக்கிறான். வெள்ளைக்காரனுடைய சூரியன் அஸ்தமிக்கும்போதுதான் அவன் விடுதலையாவான்.

கே: எப்போது ஒரு பெண்மணி பேய்பிடித்தாற்போல் தோற்றுவாள்?

ப: அவள் ஆண்களைப் பிடிப்பதை நிறுத்தும்போது.

* * *

கே: இந்தியாவின் புதைந்த பொக்கிஷம் எவை?

ப: இப்போது முகலாயச் சக்கரவர்த்திகளே. மற்றப் பொக்கிஷங்களையெல்லாம் சாப்பிட்டுவிட்டார்கள்.

* * *

கே: ஒரு மனிதன் பொய் சொல்லாமல் வாழமுடியுமா?

ப: பொய் ஒரு வியாபாரச் சரக்கு. அதற்கு விலையுண்டு. அத்தகைய எந்தச் சரக்கும் இந்தக் காலத்துக்கு அவசியமானது.

* * *

கே: எதற்காக அமெரிக்கா சண்டை போடுகிறது?

ப: ருஷியாவைத் தள்ளிவிட்டுத் தான் நுழைந்துகொள்ள.

* * *

கே: அமெரிக்காவில் எதற்குத் தரித்திரம்?

ப: பண்பாட்டுக்கும் மரபுக்கும்.

* * *

கே: பிரம்மசாரிகளுக்கு வரி போட்டால் என்ன?

ப: ஆஹா, போடலாம். வயசான கன்னிகளை (அதாவது மணமாகாத கிழவிகளை) வரிவசூல் செய்ய நியமிக்கவேண்டும்.

* * *

கே: பெண் கண்ணைச் சிமிட்டுவதற்கும் ஆண் கண்ணைச் சிமிட்டுவதற்கும் என்ன வித்தியாசம்?

ப: பெண் சிமிட்டு அழைப்பு. ஆண் சிமிட்டு விசாரணை.

கே: கோயில் மணிகள் எதற்காக இருக்கின்றன?

ப: முன்பெல்லாம் பக்தர்களை எழுப்புவதற்கு அவற்றைக் கட்டினார்கள். இப்போது சாமியை எழுப்ப மணியடிக்கிறார்கள். இப்போதெல்லாம் பக்தர்களெல்லாங் தான் வெறும் வயிற்றோடு விழித்துக் கொண்டே இருக்கிறார்களே!



* * *

கே: நேருவாகிய என் தெய்வ விக்கிரகத்துக்கு நான் என்ன செய்யலாம்?

ப: அவரைக் கும்பிட்டுக் கல்லுச் சாமி ஆக்கி விடாதீர்கள். ஒவ்வொரு வாரமும் அவரையும் அவர் அரசாங்கத்தையும் கண்டித்து ஒரு கடிதம் எழுதுங்கள். வருஷக் கடைசியில் அவர் இன்னும் நல்ல விக்கிரகமாகிவிடுவார்.

* * *

கே: கடவுளின் பாஷை எது?

ப: அவர் இரண்டே வார்த்தைகள் பேசுகிறார்: வாழ்வு, சாவு. இந்த இரண்டுக்கும் நடுவில் நம்மையே பேசுகிறதையெல்லாம் பேசவிட்டுவிடுகிறார்.

* * *

கே: ஹிந்துப் பெண்மணிகள் தங்கள் கணவன்மாரின் கன்னத்தை முத்தமிடுவதைவிடக் காலை முத்தமிடுவதை விரும்புகிறார்களே; ஏன்?

ப: காலில் தாடி வளர்வதில்லை.

கார்ட்டூன் கதம்பம்



அகில இந்திய ரேடியோ இனி 'ஆகாச வாணி' என்று வழங்கும்.

—'சங்கர்ஸ் வீக்லி'



சர்க்காரை எதிர்த்துப் போர்க் கோலம்.

—'ப்ரீ இந்தியா'

தாம் கிருஷ்ணனின் வம்சம் என்கிறூர் நவநகர் ஜாம் சாகேப்.
கிருஷ்ணனின் 16,000 மனைவியரில் எவள் வழி
என்று மட்டும் சொல்லவில்லை. —'பில்மிண்டியா'



"கிழ ஸோல்ஜர் சாகவே மாட்டான்" என்றூர் 70
வயதான மக்ஆர்த்தர். —'பம்பாய் கிராணிக்கிள்'

நீர் காட்டும் குச்சி

★

பானி மகராஜ் என்ற சாமியார் ஒரு குச்சியை வைத்துக்கொண்டு தடவிப் பார்த்துப் பூமிக்குள்ளே நீர் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கிறாராம். இவரிடம் உணவு மந்திரி முன்ஷிக்குப் பரம நம்பிக்கையாம். இந்தச் சாமியாரைப் போல நம் கிராமங்களிலே கூடப் பலர் இன்றும் இருக்கிறார்கள். இவர்கள் சங்கதியைத் தோற்கடிப்பதாயிருக்கிறது, மேல்நாட்டைப்பற்றிய பின்கண்ட விவரம்!

பூமிக்குள் எங்கெங்கே தண்ணீரோட்டம் இருக்கிறது என்று சிலபேர் ஒரு குச்சியை வைத்துக்கொண்டு சொல்லி விடுவார்கள். இந்தக் குச்சி இரு கிளையாகப் பிரிந்திருக்கும். இவ்விதம் தண்ணீர் கண்டு பிடிப்பவர்கள் இந்தியாவில் மட்டும் அல்ல; மேல் நாட்டிலும் உண்டு. அங்கே 'ஹேஸல்' (Hazel) என்ற ஒரு வகைப் புதரிலிருந்து எடுத்த குச்சியை வெகு காலமாக இப்படி உபயோகித்து வருகிறார்கள். இந்தக் குச்சியின் இரண்டு கிளைகளையும் இரண்டு கையாலும் பிடித்துக்கொண்டு தண்ணீரோட்டம் இருக்கும் இடத்தைக் க்ண்டுபிடிப்பார்கள். இந்தியாவில் பானி மகாராஜ் என்பவர் இப்படிக் கண்டு பிடிப்பதாகத் தினசரிச் செய்திகளில் படித்திருக்கலாம். எடின்பரோவில் வெளியாகும் 'வீக்லி ஸ்காட்ஸ்மன்' என்ற பத்திரிகையில் இதைப்போல் இன்னும் சில ரசமான விவரங்களை 'எச். எம்.' என்ற ஒருவர் எழுதியிருக்கிறார்:

கி. பி. 15-ஆம் நூற்றாண்டிலேயே ஜெர்மனியிலுள்ள ஹார்ஸ் மலைச்சாரலில் இந்த முறையில் தண்ணீரை மட்டும் அல்ல; சில உலோகங்களைக்கூட எங்கெங்கே கிடைக்கும் என்று கண்டு பிடித்து வந்தார்களாம். எலிசபெத் என்ற அரசி இங்கிலாந்தில் ஆண்டுவந்த போது ஜெர்மனியிலிருந்து இந்த மாதிரி சில குச்சிகளைக் கொண்டு வந்து, கார்ன்வாலில் உலோகச் சுரங்கம் கண்டுபிடிக்கப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

யார்க்ஷைர் பிரதேசத்தில் ஒரு நீர்த்தேக்கம் உண்டு. அங்கே 1940-இல் நான் காவல் காத்து வந்தேன். நீர்த்தேக்க அதிகாரி



யிடம் சில குச்சிகள் இருந்தன. இவைகளைக் கொண்டு தண்ணீர் ஓட்டத்தைக் கண்டுபிடிக்கும் விதத்தை நேரில் செய்து காட்டினுர். பூமிக்கு அடியில் நீர் இருக்கிறது என்று தெரிந்த இடமாகப் பார்த்து அந்தக் குச்சிகளைப் பிடித்தார். அவை ஆடின. இப்படி நேரே பூமியில் நீர் கண்டு பிடிப்பது மட்டும் அல்ல; முன் பின் பாராத பிரதேசங்களின் படங்களுக்கு எதிராகக் குச்சியைப் பிடித்தபோதும் சில இடங்களில் அது ஆடியதாகச் சொன்னுர். தென்னுப்பிரிக்காவிலிருந்த ஓர் எஞ்சினீர் இவருடையு நண்பர். ஒரு சமயம் அவர் இங்கிலாந்துக்கு வந்து இவர் வீட்டில் தங்கினுராம். தென்னுப்பிரிக்காவில் ஒரு ஜில்லாவில் பல இடங்களில் ஊற்றுக் குழாய் (ஆர்ட்டீஷியன் வெல்) அமைக்கப் படாத பாடு பட்டார் அந்த எஞ்சினீர். அப்படியும் ஒன்றும் சரிப்படவில்லை. இவரிடம் அந்தப் பிரதேசத்தின் படத்தைக் காட்டினுர். இவர் தம் குச்சியின் உதவியால் இன்ன இன்ன இடத்தில் தண்ணீர் கிடைக்கும் என்று கண்டுபிடித்தார். பின்னுல் அந்த இடங்களில் தோண்டிப் பார்த்தபோது ஏராளமாக ஊற்று இருப்பது தெரிந்தது.

முதலில் நான் இந்தச் சமாசாரத்தை நம்பவேயில்லை. எடின்பரோவிலுள்ள 'கிங்ஸ் பார்க்' என்ற இடத்தில் மூன்று ஏரிகள் உண்டு. அவைகளைமட்டும் விட்டுவிட்டு அந்தப் பிரதேசத்தின் படத்தைச் சுமாராக வரைந்து காட்டினேன். நீர்த்தேக்க அதிகாரி அங்கே போய் வந்ததில்லை என்று எனக்குத் தெரியும். ஹேஸல் குச்சியைப் படத்தின்மேல் வைத்து ஓட்டினுர். அது சில இடங்களில் அசைந்து கொடுத்தது. மூன்று ஏரிகள் இருக்கும் இடத்தையும் இவர் விரைவில் கண்டு பிடித்துச் சொல்லிவிட்டார்! இது மட்டு மல்ல; இன்ன ஆள் இன்ன இடத்தில் இருக்கிருன் என்றுகூட இவர் கண்டுபிடித்து விடுகிருர்! அந்த ஆளின் தொப்பி, உடை இப்படி ஏதாவது அவன் தொட்டுப் பழகிய ஒரு சாமானை இவரிடம் கொடுத்தால் போதும்.

ஒரு சமயம் தெற்கு யார்க்ஷைருக்கு அருகில் ஓரிடத்தில் ஒரு குழந்தை காணுமல் போய்விட்டது. போலீஸார் இவருடைய உதவியை நாடினுர்கள். அந்தக் குழந்தையின் பழைய ஆடை ஒன்றை எடுத்துக் கொண்டு குச்சி காட்டிய வழியே போனுர். கடைசியில் பாழடைந்த ஒரு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே அந்தக் குழந்தை செத்துக் கிடப்பதைக் கண்டார்கள்.

ஒரு சமயம் ஸ்காட்லாந்தில் ஓர் ஓட்டலில் பெரிய அறை ஒன்றில் நான் ஏழெட்டுப் பேரோடு இந்த விஷயத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். அவர்களில் ஒருவரைத் தவிர மற்ற யாரும் இதை நம்பவேயில்லை. அந்த ஆசாமி ஆப்பிரிக்காவில் கிறிஸ்துவ மதப் பிரசாரகராக இருந்தவராம். அவரிடமே இந்தமாதிரி ஒரு குச்சி இருந்தது; அதை எடுத்து எல்லார் எதிரிலும் இந்த வித்தையைச் செய்து காட்டினுர். அறையின் ஒரு மூலையில் தண்ணீர் இருக்கும் இடத்துக்கு வந்ததும் குச்சி தானுகவே ஆடியது.

எல்லாரும் 'நான், நீ' என்று முந்திக்கொண்டு அதைத் தாங்களே செய்து பார்க்க வந்தார்கள். அதை எப்படிப் பிடித்துக்

கொள்ள வேண்டுமென்று அவர் காட்டினார். ஆண்களில் முக்கால் வாசிப் பேரின் கையில் அது அசைந்தது. ஆனால் அங்கிருந்த பெண்களில் ஒருத்தியின் கையில்மட்டுந்தான் அது அசைந்தது.

இதிலிருந்து அநேகம்பேருக்குத் தங்களை அறியாமல் இந்தமாதிரி ஒரு சக்தி இருப்பதாகத் தெரிகிறது. சற்றுத் தாரதம்மியம் இருக்கலாம்; அவ்வளவுதான். ஆனால் பொதுவாகப் பெண்களுக்கு இந்தச் சக்தி குறைவு என்றுதான் சொல்லவேண்டும். சரியான ஒரு குச்சி கிடைத்து அதைப் பிடிக்கும் விதமும் புரிந்து பிடித்தால் யார் யாருக்கு இந்தச் சக்தி உண்டு என்று தெரிந்துகொண்டு விடலாம். நாம் என்னதான் அடக்கப் பார்த்தாலும் நம்மையும் மீறி அந்தக் குச்சி அசைவதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! ஒரே நிலையாக அதைப்பற்றியே எண்ணிக்கொண்டிருப்பதால் இப்படி நம்மை அறியாமல் ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது என்று சில அறிவாளிகள் தம் மனசைத் தாமே சமாதானப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இது அவர்கள் அறியாமையைத்தான் காட்டுகிறதே யொழிய வேறொன்றுமில்லை. நம் அறிவையும் தத்துவ ஆராய்ச்சியையும் மீறிய இன்னும் எத்தனையோ விஷயங்கள் உண்டு என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

நேருவைச் சந்தித்த நொண்டி

ஸ்ரீநகரில் குழந்தைகளுக்குப் பண்டித நேரு திராட்சைப் பழங்களை வழங்கிக்கொண்டிருந்தார். அப்போது மெலிந்த கிழ நொண்டி ஒருவன் அவரிடம் வந்து கைநீட்டினான்.

"நீகூடக் குழந்தையா என்ன?" என்று நேரு கேட்டார்.

கிழவன் தலை நிமிர்ந்து, "ஆம், பிரதம மந்திரி சாகேப், உங்களுக்கு முன்னே நான் ஒரு குழந்தைதான்" என்றான்.

—'பம்பாய் கிரானிக்கிள் வீக்லி'

முத்தத்தின் வரலாறு

முத்தம் என்பது வேறொன்றும் அல்ல; ரசாயன ரீதியான சங்கதி.

காட்டிலே மலைக்குகையில் வாழ்ந்த ஆதிமனிதனுக்கு உப்பு உண்பது வெயில் காலத்தில் குளிர்ச்சி தருகிறது என்ற விஷயம் முதல் முதலாகத் தெரியவந்தது. பக்கத்திலே உட்கார்ந்திருப்பவரின் கன்னத்தை நக்கினால் உப்பு அகப்படும் என்று கண்டு கொண்டான்.

அப்படிச் செய்கிறவர் ஆணாயிருந்தால் மற்றவர் பெண்ணாகவும், பெண்ணாயிருந்தால் மற்றவர் ஆணாகவும் இருக்கும்போது அதிக இன்டம் உண்டாகிறது என்று பின்னால் விளங்கிற்று.

இதன்மேல் உப்பை எல்லாரும் மறந்துவிட்டார்கள்!

—'ஸயின்ஸ் டைஜெஸ்ட்'

அருள் நகர்

—ஞானி அகஸ்டைன் கண்டது—

மண்ணுலகத்தையே சொர்க்கமாக மாற்ற முடியும் என்ற கற்பனை போக, இந்த மண்ணை தெய்வத் திருநகரின் சாயை என்கிறார் கிறிஸ்துவ ஞானி அகஸ்டைன். முந்திய 'மஞ்சரி' இதழ்களில் மோரின் 'யுடோபியா' முதலியவற்றை விவரித்த ரா. ஸ்ரீ. தேசிகன், அகஸ்டைன் நூலை இங்கே விவரிக்கிறார்.

செறிந்த இரவு வந்து சூழ்ந்தாலும், ஒளிப்பிழம்பை நம் உள்ளம் நாடுகிறது. உபநிஷத்துக்கள், "இருட்டுச்கு அப்பால், இருட்டுச்கு அப்பால்" என்று முறையிடுகின்றன. மரணத்துக்கப்பால், ஓர் அமர வாழ்வு உண்டு என்று மனத்தில் இடையருத ஒலி முரலுகிறது. ஒரு பேரழிவிலே, அழிவற்ற வாழ்வைப் பார்ப்பது மனிதனின் இயல்பு போலும்! இன்று கிறிஸ்தவ சமயத்துக்குத் தாயகமாகவுள்ள ரோமாபுரி கி. பி. 410-இல் அழிவுற்றது. அலரிக் என்ற கொடியோன் இரக்கமற்ற தன் பரிவாரங்களுடன் அந்த நகரில் புகுந்து அதைச் சூறையாடி விட்டான். மக்கள் புனிதமாகப் போற்றி வந்த கட்டிடங்கள், கோயில்கள் எல்லாம் சட்டச் சட வெனக் கீழே விழுந்து மண்ணோடு மண்ணாய்ப் போயின. இந்தக் கோரமான அழிவிலிருந்து ஆண்டவன் அருள்நகர் எழுவதைக் கண்டார் ஞானி அகஸ்டைன்.

இப்பொழுது பிரான்ஸின் வட ஆப்பிரிக்க மாகாணமாகவுள்ள அல்ஜீரியாவின் கிழக்குப் பாகத்தில் கி. பி. 354-இல் பிறந்து அங்கேயே காலங் கழித்து வந்தார் அகஸ்டைன். அவர் முப்பது வருஷம் பிரெஞ்சுத் துறைமுகமான போனு (Bona)வில் ஒரு பாதிரியாக இருந்ததாகத் தெரிகிறது. பதினாலும் ஆண்டிலேயே கார்த்தேஜ் என்ற இடத்தில் படிக்கத் தொடங்கினார். லத்தீன் மொழியிலுள்ள இலக்கிய நயங்களைப் பருகினார். சிஸிரோ (Cicero), வர்ஜில் (Virgil) இந்த இரண்டு பேராசிரியர்களின் நூல்களைச் சுவைத்துச் சுவைத்து இன்புற்றார். பிளேட்டோ, அரிஸ்டாடில் இவர்களின் நூல்களை மொழிபெயர்ப்புக்கள் மூலம் நன்கு அறிந்தார். தம் நூலில் பிளேட்டோவின் அறிவைக் கண்டு வியந்து பேசுகிறார். 'ஏசுநாதரின் ஞானத்தை இவர் நெருங்கி விட்டார்' என்று அகஸ்டைன் கூறுகிறார். தாம் எப்படிக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினார் என்பதையும் தம் 'ஆத்ம ஒலங்'களில் (Confessions) கண்ணீர் விட்டுக் கதறியபடி குறித்திருக்கிறார். ஒவ்வொரு வரியும் சுடு சோகப் புனலில் தோய்ந்தே வந்திருக்கிறது. சிற்றின்பச் சகதியில் சிக்கி உழன்றதை நினைந்து நினைந்து அகம் கரைகிறார். தம் மனத்தின் ஆழம், அதில் நிகழும் உணர்ச்சிப்

போர்கள், பேய்க் கூச்சல்கள், இடி முழக்கங்கள் இவைகளுக்கெல்லாம் தக்க உருக் கொடுத்திருக்கிறார். மத்திய காலத்தில் தோன்றிய ஞானிகள், கவிகள் இவர்கள் யாவரும் ஞானி அகஸ்டைன் எழுதிய புத்தகத்தின் மந்திர சக்திக்கு வசப்பட்டதை நாம் உணர்கிறோம்.

டாண்டே பரமண்டலத்துக்குச் செல்லுகிறபொழுது, அகஸ்டைன் முன்பே அமைத்து வைத்த படிக் கட்டுகள் மீதேதான் அடி வைக்கிறார். 'உன் சங்கற்பத்தில்தான் என் அமைதி' என்று டாண்டே மொழிந்த புனிதச் சொல் அகஸ்டைன் திருவுள்ளத்தின் எதிரொலியே. அவருடைய நூலை ஆராய்வோர்க்கு இது புலனாகும். அகஸ்டைன் 'அருள் நகர்' (The City of God) என்ற புத்தகத்தை, கி. பி. 413 - இல் எழுதத் தொடங்கினார். இது 426 வரையிலும் முடிவடையவில்லை. அதனால் அநேக இடங்களில் சொன்னதையே பல முறை திருப்பிச் சொல்லியிருக்கிறார். பல சுருதியில் இது பேசுகிறது. அடிப்படையான ஓர் ஆதார சுருதியை இது பின்பற்றவில்லை. அவர் உள்ளத்தில் பொங்கியெழுந்த பல்வேறு அநுபவங்கள் இதன் மூலம் வழிந்தோடுகின்றன.

'கிளாஸிக்' என்று சொல்லும் கிரேக்க-ரோமர் மனப்பண்பும் நாகரிகமும் மலிந்த காலத்துக்கும், கிறிஸ்து சகாப்தத்துக்கும் நிகழ்ந்த போராட்டத்தை இதில் காணலாம்; கிறிஸ்து சகாப்தமே வெற்றி அடைந்தது என்ற முடிவுக்கு வருகிறார் அகஸ்டைன். அகில பிரபஞ்சத்தையே 'ஆண்டவன் அருள் நகர்' (Dear City of God) என்று மார்க்கஸ் அரேலியஸ் தம் 'சிந்தனை' (Meditations) களில் குறிக்கிறார். இதையே அகஸ்டைனும் வழங்குகிறார். பிளேட்டோவின் அடிச்சுவட்டை இவர் பின்பற்றுகிறார். இந்த உலகம் அந்தப் பொன்னகரின் சாயை என்று பிளேட்டோ கூறும் தத்துவத்தையே தாமும் கொண்டார். அந்த நகரம் அசலாகும்; அதன் நகலாக இந்த வையகம் திகழ்கிறது. "எவ்வளவு தூரம் வையகம் வானகத்தை ஒத்து இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு உலகில் அமைதி நிலவும். அமைதிதான் மனிதன் அடையும் பெரும் பாக்கியம்" என்கிறார். சாந்தியைத் தானே நம் வேதங்கள் வற்புறுத்திப் பேசுகின்றன? "குடும்பம், நகரம், நாடு, பூமண்டலம், அகில பிரபஞ்சம் எல்லாமே ஆண்டவன் அருள் நகரமாகும்" என்கிறார். பிளேட்டோ கண்ட தத்துவத்துக்குக் கிறிஸ்துவமென்னும் மெருகு தருகிறார் அகஸ்டைன். பிளேட்டோவைப் பின்பற்றினாலும் பழைய கிரேக்க-ரோம மனப் பண்பாட்டைக் குறை கூறுகிறார். ரோமாபுரி அழிந்ததற்குக் காரணம் என்ன? பழைய தெய்வ வழிபாடுகள் மறைந்து போனதுதான் காரணமா? பண்டைத் தெய்வங்களின் சீற்றந்தானா? வழிபாடு மறைந்து போனதால் அன்று; கிறிஸ்துவ மதத்தின் குறைபாட்டால் அன்று. படையெடுத்து வந்த கொடியர்களின் அளவு கடந்த பேராசையால் எழுந்த பெருஞ் சீற்றமே இந்த அழிவுக்கு மூலம். ஆனால் இப்படி ரோமாபுரி அழிந்து போனால் என்ன? ஆண்டவனின் அழிவிலா அருள் நகரின் தோற்றம் அவர் அகக்கண்முன் தாண்டவமாடிற்று?

அதற்கு அகஸ்டைன் தம் புத்த

கத்தில் உருக் கொடுக்கிறார். 'அருள் நகரம்' என்ற புத்தகம் 22 பாகங்கள் கொண்டது. முதல் 5 பாகங்களில் பழைய கொள்கைகளைக் கண்டித்துப் பேசுகிறார். உதாரணமாக, "பொறுமை, பொறுமை" என்று பேசுகிற ஸ்டாயிக் (Stoics) கொள்கையினர் இறுதியில் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள் என்று முடிக்கிறார். 19 - ஆம் பாகத்தில் அருள் நகரைப்பற்றிய முழுச் சித்திரத்தையும் காணலாம். இந்தப் புத்தகத்தை, 'கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் அறிவுக் களஞ்சியம்' என்று ஒருவர் கூறுகிறார். அத்தனை விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றனவாம்.

மனித மாநகரத்துக்கும் தெய்வத் திருநகருக்குமுள்ள வேறுபாட்டைத் தெரிவிக்கிறார் அகஸ்டைன். "தன்னலங் கருதித் தெய்வத்தை மறக்கும் நகர்தான் மனிதர் மாநகரமாகும்; தன்னை மறந்து தெய்வத்தைப் போற்றும் நகர்தான் தெய்வத் திருநகரம். சிற்றின்பத்தை மறக்க வேண்டும். பேரின்ப வாழ்வை நாம் நடத்த வேண்டும். ஆண்டவன் அருள் நெறியில்தான் நமக்கு இன்பமுண்டு; அமைதியுண்டு" என்று இடைவிடாமல் கூறுகிறார். "இந்த அருள் நகர் எந்த நகரைச் சுட்டுகிறது?" என்று ஒருவர் வினவலாம். இந்த உலகில் கூடும் தொண்டர் கூட்டத்தையா? அல்லது பரமபதத்தையா? எதைக் குறிக்கிறது? இது ஒரு லட்சிய நகரமா? அல்லது விண்ணிலுள்ள ஆண்டவன் நாட்டை நோக்கிச் செல்லும் அடியார்கள் தங்கும் இடமா? அகில கிறிஸ்துவ மடத்தைக் குறிக்கிறதா? இது எதுவாய் இருந்தால் என்ன? அவருடைய மனப் பண்பு நமக்கு நன்கு புலனாகிறது. ஆண்டவனிடத்தில் ஓர் அசையாத நம்பிக்கை வேண்டும். மாந்தர்களுக்குள் அன்பு திகழ வேண்டும்; அமைதி நிலவுவதே நலம். சகோதரர் கூடிப் பழகுவது மனிதர்களுக்கு அழகு. குடும்பத்திலிருந்து அகில பிரபஞ்சம் வரையில் அன்பு வழிந்தால் தான் அமைதி நிலை பெற்றிருக்கக் கூடும். பணியாளன் முறையில் தான் அதிகாரிகள் கூடப் பழக வேண்டும். மனித சேவை ஆண்டவன் சேவையின் பொருட்டே. அவனுடைய அன்பு நெறியைப் பின்பற்றுகிற அனைவரும் அவன் அருள் நகரில் நுழைய முடியும். இந்தக் கொள்கைகள் புதிய கொள்கைகளல்ல. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காணும் 'குலம் தரும்' என்ற சொற்களுக்கு உரை எழுதுகிறபொழுது அந்தணர் குலமன்று, தொண்டர் குலமென்றே எழுதிவிட்டார்கள். தொண்டர் குலத்தில் சாதிச் செருக்குக்கு இடமில்லை; எல்லாரும் ஆண்டவனின் பணியாளர்கள் தான். அவன் பணி யாற்றிக் கிடப்பதே நமக்குப் பேரின்பம் என்ற சுருதியில் செல்கிறது இந்த நூல். ஆனால் அடிமைகளின் சுதந்தரத்தைப்பற்றி அகஸ்டைன் மழுப்பிப் பேசுகிறார். அவர்கள் பாவம் புரிந்தவர்கள் என்று அவர்களை ஒதுக்குகிறார். அவர்களும் ஆண்டவன் அருளுக்கு உரியவர்கள் தானே?

ஆண்டவன் அருள் நெறியை நிலைநாட்ட, பிற்காலத்தில் பல பேர் முயன்றார்கள். அவர்களில் பிளாரன்ஸ் நகரத்தில் தோன்றிய ஸவனரோலா ஒருவர் (கி. பி. 1452 - 1498). அவருடைய காலத்தில் நகர மாந்தர் மிருக வாழ்வு வாழ்ந்தார்கள். அதை மாற்ற அவர் அரும்

பாடு பட்டார். யூதர்கள் பணங் கொடுத்து அதிக வட்டி வாங்கினார்கள். அதை நிறுத்தப் பார்த்தார். மத சம்பந்தமான படிப்பைப் பரப்பினார். இலக்கியம் சாக்கடை நாற்றம் அடித்தது; அதில் தூய்மையைப் புகுத்த வேண்டுமென்று பிரசாரம் செய்தார். இந்திரிய சுகங்களிலிருந்து மனிதர்கள் விலக வேண்டும் என்று முரசடித்ததோடு நில்லாமல், பிறர் உடையின்றி, உணவின்றி வாட, நாம் ஆடம்பர வாழ்க்கையை நடத்துவது சரியன்று என்று உள்ளம் நைந்தார். கள்ளுக்கடைகள் மறைந்தன. சூதாட்டம் போய்விட்டது; பெண்கள் நகைகளை விரும்பவில்லை. எளிய வாழ்க்கையைப் பின்பற்றினார்கள். மத உணர்ச்சி எங்கும் பரவிற்று. ஆண்டவன் அருள் நகரே பூமிக்கு வந்துவிட்டது என்று உள்ளம் பூரித்தார் அவர். ஆனால் ஊழல் மண்டிக் கிடந்த கிறிஸ்தவ மடமே அவருக்கு விரோதமாய்க் கிளம்பிவிட்டது. மனிதனின் இயல்பு இப்படி வெளிக் கட்டுப்பாட்டால் மாறக் கூடியதன்று. மீண்டும் இந்திரியங்கள் தம் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கின. வெனிஸ் நகர அரசியலைத் தமக்கு லட்சியமாய்க் கொண்டு அவர் சமைத்த இந்த அருள் நகர் மறைந்தது. அவரையும் சிதையில் வைத்து உயிரோடு கொளுத்தி விட்டார்கள். ஆனால் அவர் கண்ட தெய்வக் கனவு அழியுமோ?

வீண் கனவு

குறுக்கே கிடக்கும் குன்றுகளை மட்டும் யாராவது வந்து நகர்த்திவிட்டால், மலைகளை நாம் புரட்டி விட முடியும் என்று நம்மில் பலர் பெரும்பாலும் எண்ணுகிறோம்.

—ராட் ஹென்ட்ரிக்ஸன்

பிரசங்கியின் இடி முழக்கம்

பார்லிமெண்டு தேர்தலுக்கு நிற்கும் ஓர் அபேட்சகர் வெகு உருக்கமாகப் பேசினார். "என் வாயிலிருந்து ஒரு பொய் வருமானால், ஆகாயத்திலிருந்து ஆயிரம் இடிகள் விழுந்து, என் தலை சுக்கு நூறாகப் போகக் கடவதாக!" என்று வீர கர்ஜனை புரிந்தார்.

இந்த வேகத்தைத் தாங்காமல் பிரசங்க மேடை கிடுகிடுத்துச் சாய்ந்தது. பிரசங்கி அப்படியே கிணற்றில் அமிழ்வதுபோல் உள்ளே போய்விட்டார்.

சபையோர் பிரமித்து நிச்சப்தமாயிருந்தார்கள். சிறிது நேரத்தில் பிரசங்கி மெல்லத் தலையை வெளியே நீட்டினார்.

அப்போது ஒரு குரல், "அடேடே! அதன் குறி தவறிப் போச்சுடோய்!" என்று கத்தியது.

—'ஐரிஷ் வீக்லி'

சீனர்கள் சொர்க்கம் என்று சொல்லும்
நாடு எது தெரியுமா? இந்தியாவே.

இந்தியாவின் சீனப் பெயர்கள்

புரோபஸர் யுன் யுவான் யாங்

பழைய சீன இலக்கியத்தில் பாரத நாட்டுக்குப் பல பெயர்கள் வழங்குவதைக் காணலாம். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் ஹுவான் த்ஸாங் (Hsuan Tsang) என்ற பிரபல பௌத்த யாத்திரிகர் "தியென் சு (T'ien Chu-இந்தியா) வுக்கு இன்னும் எத்தனையோ பெயர்கள் வழங்குகின்றன. அவைகளையெல்லாம் கேட்டால் எதுதான் சரியான பெயர் என்று தெரியாமல் திகைக்க வேண்டியதுதான். யின்-து (Yin-Tu) என்ற பெயர்தான் பொருத்தமாகப் படுகிறது" என்று எழுதியிருக்கிறார். அதுமுதல் சீனாவில் இந்தியாவுக்கு யின்-து என்ற பெயர் வழங்கி வருகிறது. இருந்தாலும் இந்தப் பெயர்க் குழப்பம் அடியோடு தீர்ந்தபாடில்லை. சீனர்கள் வெளிநாட்டுச் சொற்களை, ஒன்று: மொழிபெயர்த்து எழுதுவார்கள்; இல்லாவிட்டால், அதையே சீன எழுத்தில் எழுதுவார்கள். இப்படி எழுதும்போது ஆளைப் பொறுத்து மொழிபெயர்ப்பிலோ உச்சரிப்பிலோ சில மாறுபாடுகள் ஏற்படலாம்; ஸம்ஸ்கிருத எழுத்துக்களைச் சீனமொழியில் எழுதும்போதும் இந்த மாதிரி நேர்ந்துவிட்டது.

ஷிஹ் சி (Shih - Chi) என்ற பழைய சீனச் சரித்திர நூலில் இந்தியாவை ஷென் து (Shen Tu) என்று அழைத்திருப்பதாகத் தெரிகிறது. கி. மு. 122-இல் சங் சியென் (Chang Chien) என்ற தூதர் பக்திரியாவுக்குப் போயிருந்தார். அங்கே இந்தியாவுக்கு இந்தப் பெயர் வழங்கி வந்ததைக் கண்டு அது எங்கே இருக்கிறது என்று அறிந்துகொண்டார். அந்தக் காலத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நடந்து வந்த வியாபாரத்தைப்பற்றி அவர் ரசமாக எழுதியிருக்கிறார். ஸு குவாங் (Hsu Kuang கி. பி. 352 - 425) என்பவர் இந்தியாவைச் சீனர், ஹோ தோ, (Ho To), சி து (Chi Tu), சியென் து (Chien Tu) என்று சற்று மாற்றியும் அழைத்து வந்ததாகச் சொல்லுகிறார்.

கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் சீனப் பண்டிதர் ஒருவர் இந்தியாவுக்குத் தியென் சு (T'ien Chu) என்று பெயர் வழங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். பிற்காலத்தில் தோன்றிய சீன மன் வம்சத்து அரசர் வரலாறுகளிலும் இந்தப் பெயரும் இந்தியாவைப்பற்றிய விவரமும் வருகின்றன. ஷி சி (Shi-Chi) என்ற பழைய நூலில் ஷென் துவைப்பற்றிச் சொல்லியிருக்கும் விவரத்தை அப்படியே இதில் காணலாம். அதோடு இந்த நாட்டில் பௌத்த மதம் இருந்து வருவது, இங்கே இன்ன இன்ன இயற்கைப் பொருள்கள் கிடைக்கும், இந்த

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜூன் '51), சென்னை.

நாட்டார் ரோமாபுரியோடு வியாபாரம் நடத்திவருவது இந்த மாதிரி சில புதிய விவரங்களும் இதில் வருகின்றன. தியென் என்றால் சீன மொழியில் சொர்க்கம் என்றும், சு என்றால் மேற்கு என்றும் பொருள். தியென் சு என்றால் மேற்கத்திய சுவர்க்கம். இந்தப் பெயர் பௌத்தர்களான சீனர்களுக்கு மிகவும் பிடித்திருக்க வேண்டும். அதனால் இந்தியாவைச் சேர்ந்தவர்களைச் 'சு' என்று விசேஷணங் கொடுத்து அழைத்துவந்தார்கள். தர்ம ரட்சகன் என்ற பெயரைச் சு-பா-லான் (Chu-Fa-Lan) என்றும் மகா பலன் என்பதற்குச் சு-தா-லி (Chu-Ta-Li) என்றும் வழங்கி வந்தார்கள். கவியரசர் ரவீந்திர நாதர் சீனாவுக்குப் போயிருந்தபோது அவரைச் சு-சென்-தான் (Chu-Chen-Tan) என்று அழைத்தார்கள். இந்தியாவைத் தியென் து (T'ien Tu) என்றும் அந்தக் காலத்தில் சில சமயம் அழைத்து வந்தார்கள். தாங் (T'ang) வம்சத்து அரசர்கள் சீனாவை ஆண்ட காலத்தில் சீன யாத்திரிகர்கள் இந்தியாவை வடபகுதி, தென் பகுதி, மேற்குப்பகுதி, கிழக்குப் பகுதி, இடைப்பகுதி என்று ஐந்தாகப் பிரித்துப் பெரும்பாலும் 'தியென் சு' என்றே வழங்கி வந்தார்கள்.

ஹூவான் த்ஸாங் இந்தியாவுக்கு ஷியென் து (Hsien Tu) என்றும் பெயர் உண்டு என்கிறார். அவருக்கு 25 ஆண்டுகளுக்குப் பின் வந்த இ-த்ஸிங் (I-Tsing) என்பவர், "வடக்கே இருக்கும் (ஹூ, மங்கோல், துருக்கர் போன்ற) ஜாதியார் மட்டுமே இப்படி 'ஷின் து' என்கிறார்கள். ஆனால் இந்த மாதிரி பெயர் வைத்திருப்பதே அந்த நாட்டு மக்களுக்குத் தெரியாது" என்கிறார்.

"சீன மொழியில் இதற்குச் சந்திரன் என்று பொருள். சந்திர வெளிச்சம்போல் மகான்களின் தேஜஸ் இடைவிடாமல் அந்த நாட்டிலிருந்து வீசி வருவதால் இன்-து (In-Tu) அல்லது யின்-து (Yin-Tu) என்று பெயர் வந்தது. இது சரியான பெயர்தான்" என்கிறார் ஹூவான் த்ஸாங். ஆனால் பின்னால் வந்த இ-த்ஸிங் என்பவர், "இந்து என்றால் சந்திரன் என்று பொருள் இருக்கலாம். இருந்தாலும் இதுதான் பொதுவான பெயர் என்று சொல்லிவிடுவதற்கில்லை. தாங் என்ற அரச பரம்பரையின் பெயரைக் கொண்டு சீனா என்று மொத்தமாக நம் நாட்டையே இந்தியர்கள் அழைப்பதுபோலத்தான் இருக்கிறது இதுவும்" என்கிறார்.

ஷிந்து, இந்து என்ற ஸம்ஸ்கிருத பதங்களுக்கு வித்தியாசம் புரியாமல் 'இன் து (சந்திரன்)' என்று ஹூவான் த்ஸாங் தவறாக எண்ணிக் கொண்டு எழுதியிருக்கவேண்டும்.

மென் காங் (Men Kang) என்பவர் கி. பி. 3-ஆம் நூற்றாண்டில், "பு-து-ஹூ (Fu-Tu-Hu) அல்லது "புத்தர்பிரான் தோன்றிய வெளிநாடு" என்று சீன இலக்கியங்களில் இந்தியாவைக் குறிப்பிட்டு வந்ததாகச் சொல்லுகிறார்.

பொதுவாக ஷி து ஷி பாங் (Hsi Tu Hsi Fang - மேற்கு நாடு) என்றும், சில சமயம் ஷி தியென் (Hsi T'ien - மேற்கத்திச் சொர்க்கம்) என்றும் இந்தியாவை இ-த்ஸிங் குறிப்பிடுகிறார். பௌத்தமதம் தோன்றிய நாடு என்றதால் சீனர்களுக்கு இந்தியாவின்மேல் அதிசப் பிரீதி. அதனால் சீனன் ஒருவன்

இறந்ததும் அவன் 'மேற்கத்திச் சொர்க்கம் போய்விட்டான்' என்று சொல்வது வழக்கம்.

இந்தியாவை ஆர்யதேசம் என்று வழங்குவதுதான் இ-த்ஸிங்குக்கு மிகவும் பிடித்திருந்தது. "ஆர்ய என்றால் பெருந்தன்மை. தேசம் என்றால் நாடு. தொடர்ந்து அங்கே பல பெரியார்கள் தோன்றி வருகிறார்கள். இதற்கு அடுத்தபடியாகப் பல நாடுகளுக்கு நடு நாயகமாக விளங்குவதால் இதை மத்தியதேசம் என்று அழைப்பதும் பொருத்தந்தான்" என்று எழுதியிருக்கிறார். இப்போது உத்தரப் பிரதேசம் என்று சொல்வதைத்தான் அந்தக் காலத்தில் அப்படி வழங்கி வந்ததாகத் தெரிகிறது.

இந்தியாவை 'இந்து-கலா', 'இந்திகா' என்றும் சீன பௌத்த நூல் சிலவற்றில் குறிப்பிட்டு வந்தார்கள். இதற்குச் சந்திரனுடைய கலை அல்லது பிறை என்பது பொருள்.

சில சமயம் இந்திரபவனம், இந்திராவர்த்தனம் என்றுப் வழங்கி, பிராம்மணர் வாழும் நாடு என்று பொருள்பட, 'போ-லோ மென்-குவோ' (Po-Lo-Men-Kuo) என்றும் பெயரிட்டார்கள். ஹுவான் த்ஸாங்கும் இ-த்ஸிங்கும் இதே மாதிரி சில இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். தாங், சுங் வம்ச வரலாறுகளில் இப்படிப் பெயரிட்டழைத்திருப்பதைக் காணலாம். முதல் முதலாகக் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பிரபல சீன யாத்திரிகர் ஒருவர் இதை 'புகுவோ' (Fu Kuo-புத்தர் நாடு) என்று அழைத்திருக்கிறார்.

வட இந்தியாவில் பெரும் பாகம் ஒரு காலத்தில் மகத நாட்டைச் சேர்ந்திருந்தது. அங்கே பௌத்த மதம் தோன்றி வளர்ந்த வரலாறு எல்லாருக்கும் தெரிந்ததே. சீனாவை ஆண்டு வந்த தாங் வம்சத்து மன்னர்களுக்கும் மகத மன்னர்களுக்கும் அரசியல் தொடர்பு உண்டு. பின்னால் சுங் வம்சத்தார் வந்தபோது இந்தியாவின் அரசியல் நிலைமை அடியோடு மாறிவிட்டது; இது சீனர்களுக்குத் தெரியாது. இதனால் பழையபடி இந்தியா முழுவதையும் மகதம் என்றே அழைத்து வந்தார்கள். கயையில் கி.பி. 1033-இல் செதுக்கிய சீனக் கல்வெட்டிலும் இதே மாதிரி இருப்பதைக் காணலாம்.

இந்த மாதிரி பல பெயர்கள் சீனாவிலும் சீன இலக்கியத்திலும் ஆதியில் வழங்கிவந்ததிலிருந்து இந்தியாவுக்கும் சீனாவுக்கும் 2,000 ஆண்டுகளாக உறவு நீடித்து வருவது புலனாகும்.

திரையிலே பலவிதம்

வெகு தூரத்தில் இருப்பதால் மலையுச்சியிலுள்ள மரம் நமக்குத் தெரியவில்லை. மிகவும் அருகே இருப்பதால் கண்ணிலுள்ள மை தெரியவில்லை. இந்திரிய தோஷத்தினால் மின்னல் தெரிவதில்லை. வெளிச்சத்திலுள்ள பொருளுங்கூட மனக்கலக்கத்தால் தெரிவதில்லை. நுண்மையாக இருப்பதால் பரமாணு தெரிவதில்லை. சுவர் மூடிய தடையினால், மறைபட்ட பொருள் தெரிவதில்லை. பெரிது சிறிதை விழுங்கும் தன்மையால் பகலில் விளக்கொளி தெரிவதில்லை. சமமான பொருளைச் சேர்ப்பதால் பாலோடு கலந்த நீர் தெரிவதில்லை.

—பூர்ணப் பிரக்ஞ தரிசனம்

உலகில் பழைய நடனச் சிலை

டாக்டர் சார்லஸ் பாப்ரி

பரத நாட்டியம் என்றால், இன்று எவர் வேண்டுமானாலும் எளிதில் கற்று ஆடத் தொடங்குகிறார்கள். ஆனால், அதன் ஐதிகம் மிகப் புராதனமானது; 5,000 வருஷத்துக்கு முந்தியது; தெய்வ கைங்கரியத்துக்காக ஏற்பட்டது. இதை யெல்லாம் விளக்கும் அரிய சின்னங்கள் டில்லி நேஷனல் மியூஸியத்தில் இருக்கின்றன.

இந்தியாவில் நடனக் கலை கிறிஸ்து பிறப்பதற்கு 150 வருஷங்களுக்கு முன்பே இருந்திருக்கிறது. இதை நிரூபிக்கும் பழமையான சிலைகள் இருக்கின்றன. இந்தியாவில் சிறந்த நாகரிகம் பரவியிருந்த காலத்தைச் சேர்ந்தவை இந்தச் சிலைகள். ஆனால், இதற்கும் மிக மிக முந்திய காலத்திலே இந்தியாவின் நடனக் கலை எப்படி இருந்தது என்பதைக் காட்டும் சின்னங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. டில்லி சர்க்கார் மாளிகையில் இப்போது அமைந்திருக்கும் இந்திய தேசியப் பொருட்காட்சிச் சாலையில் இவைகள் இருக்கின்றன.

இந்தச் சின்னங்கள் எல்லாம் 5,000 வருஷத்துக்கு முந்தியவை. இவைகளில் ஒன்று நடன மங்கை ஒருத்தியின் வெண்கலச் சிலை. இது உருவத்தில் சிறியதானாலும், மிகப் பழமையானது. கிறிஸ்து பிறக்க 2,300 வருஷங்களுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த நடன மங்கையின் கற்சிலை ஒன்றும் அங்கே இருக்கிறது. வெண்கலச் சிலை மொஹெஞ்சதடோவில் கிடைத்தது. கற்சிலை ஹரப்பாவில் கிடைத்தது.

தேசியப் பொருட் காட்சிச்சாலையில் இவைகளைத் தவிர நடன உருவங்கள் செதுக்கிய சிறு முத்திரைகள் பல இருக்கின்றன. இவற்றில் ஒன்று மத சம்பந்தமான நடனத்தை விளக்குகிறது. ஒரு முத்திரையில் பெண்கள் வரிசையாக நடனத் தோற்றத்தில் இருக்கிறார்கள். இவர்களுடைய தலைமயிர் நீளமாக இருக்கிறது. இவர்கள் பாவாடை அணிந்திருக்கிறார்கள்.

இந்த மாதிரி பல நடன உருவங்களைப் பழைய குகைக் கோவில்களிலும் மற்ற இடங்களிலும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் அவை இந்த

மூலம்: அமெரிக்கன் ரிப்போர்ட்டர் (ஆங்கிலம்: 18-6-'51), புது டில்லி.

வட்ட வடிவ முத்திரைகளைப்போல அவ்வளவு சிறந்தவை அல்ல.

கிறிஸ்துவுக்கு 2,500 ஆண்டுகளுக்கு முந்திய இந்தியப் புராதன நகர வாழ்க்கையில் நடனம் ஒரு முக்கிய அம்சமாக இருந்திருக்கிறது என்பதை இவைகள் காட்டுகின்றன. இந்த முத்திரைகளுள் ஒன்றில் பலியிடும் காட்சி ஒன்றைச் செதுக்கியிருக்கிறது. அதில் இரண்டு மரக் கிளைகளுக்கிடையே ஒரு தேவதை நின்றுகொண்டிருக்கிறது. அதற்குப் பலியாக ஆடு ஒன்று தயாராய் நிற்கிறது.

புராதன காலத்தில் எல்லாத் தேசங்களிலும் மர வழிபாடு இருந்திருக்கிறது என்பது தெரிந்த விஷயம். இந்தியாவிலும் அந்த வழிபாடு இருந்திருக்க வேண்டும். மரத்திலே தேவதைகள் இருக்கின்றன என்பதைச் சித்திரிக்கச் சிற்பி எண்ணியிருப்பான். இந்தக் கற்பனையின் விளைவாகத்தான் இரண்டாகப் பிரிந்த மரக் கிளையையும் அதன் நடுவே மரத்துக்குரிய தேவதையையும் சிற்பி செதுக்கி விட்டான்.

இந்தப் பலிக் காட்சியின் முகப்பில் முதல் வரிசையில் சில நடன மங்கைகளின் உருவம் சித்திரித்திருக்கிறது. ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு வரிசையாக அவர்கள் நிற்கிறார்கள். அவர்களுடைய கூந்தல் நீண்டு, அலங்கரிக்கப் பெற்றிருக்கிறது. உடம்பில் பாவாடை ஒன்று மட்டுந்தான் அணிந்திருக்கிறார்கள். மிகப் புராதனமான அந்தக் காலத்தில் மத சம்பந்தமான ஒவ்வொரு சடங்கிலும் நடனம் மிக முக்கியமான அம்சமாக இருந்து வந்திருக்கிறது. இப்போதுகூடப் பல நாடுகளில் இந்தப் பழக்கம் இருந்து வருகிறது.

இந்தப் புராதனப் பழக்கத்தை ஒட்டித்தான் தென் இந்தியக் கோவிலில் நடனம் நடக்கிறது என்று தோன்றுகிறது. பொதுவாகத் தென் இந்திய நடனங்கள் எல்லாமே மத சம்பந்தமானவை. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரியும் திரிமூர்த்திகளின் பலவகைச் செயல்களையே நடனங்களில் காட்டுகிறார்கள். தெய்வத்தைத் தன் காதலனாகப் பாவித்து, பக்தி ததும்பும் சிங்கார ரசப் பாடல்களுக்கு ஏற்றபடி அபிநயம் பிடிப்பாள் யௌவன நடன மங்கை. இதுவே பரத நாட்டியத்தில் முக்கிய அம்சம்.

இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு பார்த்தால் மொஹெஞ்சதடோவில் கிடைத்த வெண்கல நடன மங்கையின் சிற்பம் நம் மனத்தை மிகவும் கவர்கிறது. பிறந்ததிலிருந்து தெய்வ கைங்கர்யத்துக்காக அர்ப்பணமான அந்த இளம் மங்கை, அற்புதமான நடனம் புரியும் ஒரு நிலையில் தோன்றுகிறாள். அவளுடைய இடது கை ஒருவித முத்திரையைப் பிடிக்கிறது; வலது கை கொடி போன்ற இடைமீது ஊன்றியிருக்கிறது; முகம் சிறிது சாய்ந்திருக்கிறது.

மொஹெஞ்சதடோ, ஹரப்பா சிற்பங்கள் எல்லாம் பிரத்தியட்சமான தோற்றங்களை ஆதாரமாகக் கொண்டவை அல்ல; கற்பனையைக் கொண்டு அழகு பெறச் சிருஷ்டிக்கப் பெற்றவை. இவ்வளவு சிறிய சிற்ப வடிவத்தில் முகபாவம் தோன்றச் சித்திரித்திருப்பது ஆச்சரியமாகும். உலகத்தில் பெரும்பாலான இடங்களில் வெண்கலமே கண்டுபிடிக்கப்பெற்றிராத அந்தப் புராதன காலத்திலேயே இவ்வளவு

சிறிய உருவத்தை வார்த்த சிற்பியின் திறமையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இதிலிருந்து பிளாஸ்டர் அச்சுமூலம் ஒரு பிரதி எடுக்க நான் முயன்றேன். நவீன வசதிகள் நிறைந்திருந்தும் அந்தச் சிற்பத்தை அப்படிப்பட்ட அச்சிலிருந்து பிரதி எடுப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. அரக்குப் பூசி வார்க்கும் 'ஸைர் - பெர்ட்யூ' (cire-perdue) என்ற விசேஷ முறையினால்தான் பிரதி எடுக்க முடிந்தது. இந்த முறை கிறிஸ்துவுக்கு 2500-2700 வருஷங்களுக்கு முன்னேயே நடைமுறையில் இருந்திருக்கவேண்டும் என்பதை நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது.

மிகுந்த வேலைப்பாட்டுடன் செதுக்கிய வெள்ளைக் கல் நடனச் சிலையும் மனோரம்மியமான வெண்கலச் சிலையும் தேசீயப் பொருட்காட்சிச் சாலையில் உள்ள பொருள்களுக்குள் விலை மதிக்க முடியாதவை. 5,000 வருஷங்களுக்கு முன்பே இந்திய மக்களுக்கு நடனக் கலையில் ஆர்வம் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு இந்த நடன உருவமும் வெண்கலச் சிலையும் சிறந்த சான்றுகள். உலகத்தின் பிற நாடுகளெல்லாம் அநாகரிக நிலையில் இருந்த காலத்திலிருந்தே இந்தியாவின் மகத்தான நடனக் கலை வளர்ந்து வந்திருக்கிறது என்பதையே இவை நமக்கு நினைவூட்டுகின்றன.

கறாரான கணக்கு

ஸ்பெயின் தேசத்துத் தலைநகர் மாட்ரிட். அதில் வெளியாகும் ஏ. பி. ஸி. என்ற பத்திரிகையின் ஆசிரியர் ராமொன் பாஸ்டர். தம் நிருபரிடமெல்லாம், "எந்த விஷயமாயிருந்தாலும், 'சுமார்', 'சற்றேறக்குறைய' என்று மழுப்பக்கூடாது; கறாராய்க் குறிப்பிடவேண்டும். கறார்; கறார்" என்று ஓயாமல் சொல்லுவது வழக்கம்.

ஒருநாள் அந்தப் பத்திரிகையில், "வைத்தியக் கலாசாலைக் கூட்டத்தில் பிரசங்கி பேசும்போது, கூட்டத்தில் இருந்தவரின் 3,999 கண்களும் பிரசங்கியின் மீதே பதிந்திருந்தன" என்று ஒரு செய்தி வெளியாயிற்று. இதைக் கண்ட ஆசிரியர் ஆச்சரியமடைந்து, சம்பந்தப்பட்ட நிருபரை அழைத்தார். "என்ன, இப்படி எழுதியிருக்கிறீரே?" என்று கேட்டார்.

நிருபர் பயபக்தியுடன், "தங்கள் கட்டளைப்படியே நடந்துகொண்டேன். எதையும் கறாராய்க் குறிப்பிட வேண்டும் என்பீர்களே, ஞாபகமில்லையா? இந்தக் கூட்டத்துக்கு நம் சர்வாதிகாரி பிராங்கோவின் மெய்காப்பாளரான தளபதி மில்லான் அஸ்ட்ரே என்பவரும் வந்திருந்தார்" என்று விளக்கினார்.

அப்துல் கரீமுடன் போரிட்ட காலத்தில் ஒரு கண்ணை இழந்துவிட்டவர் அந்தத் தளபதி.

—'பாத் பைண்டர்'

படித்த மனிதன்

இன்று உலகத்தில் எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் 120 கோடி பேர் இருக்கிறார்களாம். இது புள்ளி விவரக்காரர்கள் தயாரித்த கணக்கு. இந்த மக்களுக்கெல்லாம் கல்வி போதிப்பதற்கு ஏற்ற உபாத்தியாயர்களைப் பயிற்றுவிக்க, உலகின் பல இடங்களில் ஆறு பயிற்சிச் சாலைகளை ஐ. நா. ஸ்தாபனம் அமைக்கப்போவதாக 'நியூ யார்க் ஹெரால்டு ட்ரிப்யூன்' பத்திரிகையில் ஒரு விவரம் வெளியாகியிருக்கிறது. லத்தீன் அமெரிக்கா, மத்தியக் கிழக்கு நாடுகள், இந்தியா, தூரக்கிழக்கு நாடுகள், ஆப்பிரிக்கா இந்த இடங்களில் உள்ளவரின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யத்தான் இந்த முயற்சி நடக்கிறதாம்.

மற்ற இடங்களில் எப்படியானாலும், லத்தீன் அமெரிக்காவில் இப்போதே இந்த வேலை தொடங்கிவிட்டது. மிஸ்டர் ஆர்ட்டிஸ் என்பவர்தான் இதைத் தொடங்கியிருப்பவர். பாட்ஸ்குவாரோ என்ற இடத்தில் இந்தப் புதிய உபாத்தியாயர்களைப் பயிற்றுவிக்க இவர் ஆரம்பித்திருக்கிறார்.

இவர் சொல்வது இது: "கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதெப்படி என்பதை மாணவர்களுக்குச் சொல்லித்தரவே நாங்கள் முயல்கிறோம். கல்வியின் மூலாதாரமான அம்சங்கள் நான்கு.

"முதலாவது: படித்தவனுக்குத் தன் உடம்பின் ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்ளத் தெரிய வேண்டும்.

"இரண்டாவது: சுற்றிலும் உள்ள இயற்கை வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள அவனுக்குத் தெரியவேண்டும்.

"மூன்றாவது: சௌக்கியமான வீட்டிலே கௌரவமாகக் குடித்தனம் செய்ய அவனுக்கு வசதி கிடைக்க வேண்டும்.

"நான்காவது: போதிய ஓய்வும் அதை உல்லாசமாய் அநுபவிக்கும் வசதியும் அவனுக்கு இருக்க வேண்டும்."

இவரை ஒரு நிருபர், "மாணவனுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லையா?" என்று கேட்டார்.

'பாமரன் ஒருவனுக்கு அவனுடைய தினசரி வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள நாம் அளிக்கும் படிப்பு உதவும் என்று நிரூபிக்காவிட்டால், அந்தப் படிப்பினால் ஒரு பயனும் இல்லை. உடல் ஆரோக்கியம், குடித்தனம் நடத்தும் முறை, விவசாயம் ஆகிய விஷயங்களைப் போதிப்பதன் மூலமே எழுதப் படிக்கவும் நாங்கள் கற்றுக் கொடுக்கிறோம். எழுதவும் படிக்கவும் தனிக் கலையாக மாணவனுக்கு நாங்கள் போதிப்பதில்லை" என்று மிஸ்டர் ஆர்ட்டிஸ் பதில் அளித்தார்.

இவருடைய போதனை முறைப் பயிற்சிச்சாலையில், பாட புஸ்தகங்கள், ரேடியோ, ஸினிமா ஆகியவைகளையெல்லாம் உபயோகிக்கிறார்கள். லத்தீன் அமெரிக்காவின் பல இடங்களிலும் கிராமங்களில் கல்வியைப் பரப்ப முன்வரும் உபாத்தியாயர்களுக்கு உதவ இவர் இந்தச் சாதனங்களை மேலும் ஏராளமாய்த் தயாரித்து வருகிறார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானச்சுடரை உலகெலாம் ஒளி வீசச் செய்த இந்த மகா புருஷரின் வாழ்வு தூய்மை மிக்கது; வாக்கு வன்மை பொதிந்தது.

விவேகானந்தர்

அற்புத சக்தி: விவேகானந்தர் வெளிநாடுகளில் பிரயாணம் செய்யும்போது அங்கங்கே உள்ள பழைய நாகரிகத்தின் சின்னங்களைக் கண்டு மெய்மறந்து போவார். அப்போது அவருடன் அந்த நாட்டினர் யாராவது இருந்தால், அந்தப் பழைய நாகரிகத்தைப்பற்றி ரசமாகப் பேசிக்கொண்டிருப்பார். விவேகானந்தரின் பரந்த அறிவைக் கண்டு எல்லாரும் வியப்பார்கள்.

ஒரு சமயம் அவர் மேல்நாட்டுக்குச் சென்று திரும்பும்போது எகிப்தில் இறங்கினார். அதன் தலைநகர் கெய்ரோ. அங்கிருந்து சற்றுத் தூரத்தில் உலகப் பிரசித்தி பெற்ற

ஸ்விங்ஸ் என்ற பதுமையும் ஆதி எகிப்திய மன்னர்களான பாரோக்களின் சமாதிகளும் இருந்தன. அப்போதுதான் மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் இந்தச் சமாதிகளைத் திறந்து இவைகளில் கெடாதபடி வைத்திருக்கும் 'மம்மி' என்ற சவங்களையும் அற்புதப் பொன் வெள்ளி வேலைப்பாடுகளையும் கண்டுபிடித்திருந்தார்கள். விவேகானந்தர் பல ஐரோப்பியர்களுடனும் எகிப்தியருடனும் அந்த அற்புதங்களைக் காணப் போனார். ஸ்விங்ஸ் பதுமையைப் பார்த்ததும் விவேகானந்தர் ஏதோ உணர்ச்சி பெற்றவர் போல் சம்பாஷிக்க ஆரம்பித்தார். ராமஸஸ் முதலிய ஆதி எகிப்திய மன்னர்களுடைய வாழ்க்கையைப் பற்றி அழகாக எடுத்துச் சொன்னார். எல்லாரும் தம்மை மறந்து அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். "அங்கே அவரைப் பார்க்கும்போது பழங்கால எகிப்திய ஞானி ஒருவர் என்றே எங்களுக்குத் தோன்றியது. என் அருகில் இருந்த எகிப்தியர் ஸ்வாமிகளைத் தம் நாட்டுப் பக்கிரி என்றே எண்ணிக்கொண்டிருந்தார். அவரிடம் எல்லா மதத்தாரும் பக்தி சிரத்தை காட்டினார்கள். அங்கே வந்த கிரேக்கர் ஒருவர்,

வாழ்வும் வாக்கும்

ஸ்வாமிகள் ஏதென்ஸ் நகரைச் சுற்றிப் பார்க்கும்போது கூடவே இருந்தவர். அவர், 'ஸ்வாமீஜீ, ஏதென்ஸ் நகரில் உங்களைப் பார்க்கும்போது பழைய கிரேக்க மகான் போலவே இருந்தீர்கள். எங்களுக்கு விளங்காதிருந்த பல பழைய சின்னங்களைப் பற்றியெல்லாம் விளக்கிச் சொன்னீர்கள். இங்கே பார்த்தால் இந்த நாட்டைச் சேர்ந்தவரைப் போல் பேசுகிறீர்கள்!' என்று சொல்லி ஆச்சரியப்பட்டார். ஸ்வாமிகள் சற்றே சிரித்தாரேயொழியப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவர் திரிகால ஞானி, இந்தியராகப் பிறந்தாலும் எல்லா நாட்டுக்கும் பொதுவானவர் என்று எங்களுக்குப் பட்டது." இப்படி மதாம் கால்வே என்ற ஐரோப்பியப் பெண்மணி தாம் எழுதிய ஒரு புத்தகத்தில் ஸ்வாமிகளின் குணாதிசயங்களைப் பாராட்டியிருக்கிறாள்.—(வாழ்வு)

உருவ வழிபாடு ஏன்?-ஒரு சமயம் ராஜபுதனத்தைச் சேர்ந்த ஒரு சம்ஸ்தானத்துக்கு விவேகானந்தர் போயிருந்தார். முதலில் மந்திரிகளும் மக்களும் அவரை உபசரித்தார்கள். சம்ஸ்தானாதிபதி லௌகிக விஷயத்தில் அதிகமாக ஈடுபட்டவர். அதனால் சாது சந்நியாசிகளென்றால் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. இருந்தாலும் விவேகானந்தருடைய தோற்றம் அவரைக் கவர்ந்தது. விவேகானந்தரைத் தம் அரண்மனைக்குத் தனியாக அழைத்து உபசரித்தார். பேச்சுக்கிடையே விக்கிரக ஆராதனை சம்பந்தமாகப் பிரஸ்தாபம் வந்தது. சம்ஸ்தானாதிபதி அதைப் பலமாகக் கண்டித்தார். விவேகானந்தர் அமைதியாக, "பகவானை அந்தமாதிரிதான் வழிபட வேண்டுமென்று யாரும் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லையே! உங்களுக்குப் பிடித்தவிதத்தில் வழிபடலாமே!" என்று பதிலளித்தார். பிறகு சுவரில் இருந்த படங்களையெல்



லாம் பார்த்துக்கொண்டேயிருந்தார். அவைகளில் ஒன்று அந்தச் சம்ஸ்தானாதிபதியின் படம். "உங்கள் ஆட்கள் சிலபேரை இப்படி வரச் சொல்லுங்கள்" என்று சம்ஸ்தானாதிபதியிடம் சொன்னார் விவேகானந்தர். ஆட்கள் வந்தார்கள். அவர்களைப் பார்த்து, "இதோ உங்கள் எஜமான் படம் மாட்டியிருக்கிறதே. இதன் மேல் யாராவது மனசறிந்து துப்புவீர்களா?" என்று கேட்டார். எல்லாரும் வாயடைத்து நின்றார்கள். சம்ஸ்தானாதிபதியின் முகம் சுண்டிவிட்டது. அப்போது விவேகானந்தர் அவரை நோக்கி, "இது வெறும் சாயல்தான். இதற்கு உயிரேயில்லை. இருந்தாலும் உங்கள் ஆட்கள் உங்களுக்காக இதற்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். அதே மாதிரிதான் விக்கிரக ஆராதனையும். நாம் கல்லென்று நினைத்தால் கல்தான். அதையே கடவுள் என்று வழிபட்டால் கடவுள்தான். எல்லாவற்றுக்கும் நம்பிக்கைதான் காரணம்" என்றார்.

சம்ஸ்தானாதிபதி உலக அநுபவம் மிகுந்தவர். விவேகானந்தர் சொன்னதன் கருத்தை உடனே புரிந்துகொண்டு தம் அறியாமையைப் பொறுத்தருளும்படி வேண்டினார். அது முதல் விவேகானந்தருடைய ஆப்த சிஷ்யரும் ஆகிவிட்டார். —(வாழ்வு)

புத்தரும் இந்து மதமும்: "புத்தருடைய காலத்திலிருந்து ஐம்புலன்களையும் அடக்குவது மிகவும் உயர்ந்த நோக்கம் என்ற கருத்து நாடெங்கும் பரவத் தொடங்கியது. 'என் உடல் இந்த மரத்தடியில் அழிந்து போனாலும் போகட்டும்' என்று அவர் உறுதியோடு தவங்கிடந்தார். ஞானோதயம் பெற்ற பிறகுதான் அங்கிருந்து எழுந்தார். பிற்காலத்தில் புத்தருடைய துறவுக் கொள்கையை இந்து மதம் அப்படியே எடுத்துக்கொண்டது. இப்போது சந்நியாசிகள் வாழும் அநேக மடங்கள் அந்தக் காலத்தில் புத்த மதத்தினர் ஸ்தாபித்தவைதான். அழிந்து வந்த சந்நியாச தர்மத்துக்குப் புத்துயிர்கொடுத்தவர் புத்தபிரான்தான்." —(வாக்கு)

முக ராசி

நீங்கள் செய்துகொள்ளும் அலங்காரத்தையெல்லாம்விட உங்கள் முகபாவந்தான் மிகவும் முக்கியம். அடுத்த தடவை நிலைக் கண்ணாடியில் பார்க்கும்போது, உங்கள் முகத்தைக் கவனியுங்கள். பெருங் கவலையும் சிந்தனையும் தேங்கிய முகபாவத்தை விட்டு, சிறிது புன்சிரிப்போடு இருந்தால் எவ்வளவு மேலாயிருக்கும் என்று உணர்ந்துகொள்வீர்கள்.

—ஜேனட் லேன், 'காலியர்ஸ்.'

இளங் குழந்தைகளைப் பாதுகாப்பதில் மிகுந்த எச்சரிக்கை வேண்டும். அது தாய்மாரின் கடமை.

குழந்தையின் வயிற்றுப் போக்கு

டாக்டர் ஜி. வெங்கடசாமி

குழந்தைகளுக்கு வரும் வியாதிகளில் மிகவும் ஆபத்தானது வயிற்றுப் போக்கு. நம் நாட்டில் ஆயிரம் குழந்தைகள் பிறந்தால், பிறந்த ஒரு வருஷத்துக்குள் சுமார் 165 குழந்தைகள் இறந்துவிடுகின்றன. இதில் பாதிக்குமேல் சாவு வயிற்றுப்போக்கினாலேயே ஏற்படுகிறது.

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப் போக்குக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. குழந்தையின் குடல் மிகவும் மெதுவானது. ஆகாரத்தில் சிறிது மாறுதல் ஏற்பட்டாலும், ஜீர்ணமாகாமல் அது வெளியே வந்துவிடும். அஜீர்ணம் வயிற்றுப் போக்குக்கு ஒரு முக்கியமான காரணம். அதிக ஆகாரத்தினாலும் சரி, ஜீர்ணிக்க முடியாத ஆகாரத்தினாலும் சரி, அஜீர்ணம் ஏற்படலாம். குழந்தை அளவுக்கு அதிகமாகப் பாலைக் குடித்தால், மலத்தில் தயிர்போன்ற வெள்ளையான பொருள் வரும். இதைப் பார்த்தவுடன் தாய் குழந்தைக்குக் கொடுக்கும் பாலைக் குறைக்க வேண்டும். தாய்ப்பால் இல்லாமல் மற்றப் பால் பெறும் குழந்தைகளுக்கு அடிக்கடி அஜீர்ணம் உண்டாகிறது. பசும்பால் சரியாக இராவிட்டாலும், புட்டிப்பால் கெட்டிருந்தாலும் அஜீர்ணம் ஏற்பட்டு வயிற்றுப் போக்கு உண்டாகும்.

குழந்தையின் குடலில் விஷக் கிருமிகள் புகுந்தால், பேதி உண்டாகும். பிறந்த சில தினங்களுக்குள்ளேயே இப்படி நேரிடலாம். சில தினங்களுக்கு முன், ஒரு நண்பரின் மனைவி ஆஸ்பத்திரியில் பிரசவித்தாள். பிறந்த மூன்று தினங்களுக்குக் குழந்தை நன்றாக இருந்தது. நான்காம் தினத்திலிருந்து பேதியாக ஆரம்பித்துவிட்டது. அடுத்த நாள் மாலைக்குள் குழந்தை பிழைப்பது கஷ்டம் என்று தோன்றியது. பிறகு ஊசி மூலம் மருந்து கொடுத்துக் குழந்தை குணமடைந்தது. தாயின் மேல் போட்டிருந்த துணியிலிருந்த விஷக் கிருமிகள், பாலுண்ணும் பொழுது குழந்தையின் குடலுக்குள் போனதாலேயே குழந்தைக்குப் பேதி ஏற்பட்டது. இந்த மாதிரி கிருமிகள் குழந்தையின் மலத்தில் வெளிப்படும். அந்த மலத்தை உடனுக்குடன் சுத்தப்படுத்தாவிட்டால், மற்றக் குழந்தைகளுக்கும் அது பரவலாம். தாய்ப்பால் இல்லாமல் வேறு வகைப் பால் பெறும் குழந்தைகளுக்குக் கிருமிகளால் ஏற்படும் வயிற்றுப் போக்கு அதிகமாக இருக்கும். பால் கொடுக்கும் பாட்டில், ரப்பர் முதலியவற்றைச் சரிவரச் சுத்தம் செய்யாமல் இருப்பதும் பாலை ஈக்கள் மொய்க்கும்படி விடுவதுமே இதற்குக் காபணம். கிருமிகளால் பேதி உண்டானால் அதில் மலம் முதலில் சற்றுப் பசுமை நிறம் கலந்

மூலம்: சௌபாக்கியம் (தமிழ்; கர ௵ ஆனி ௴),
கவர்னமெண்ட் ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை.

திருக்கும். பிறகு தண்ணீர்போல், அடிக்கடி அரைமணி நேரத்துக்கு ஒருமுறை பேதியாகும். மலம் பசுமையாக இருந்தால் தாய் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

குழந்தைக்குக் குளிர், நிமோனியா முதலிய காய்ச்சல்கள் ஏற்பட்டாலும் வயிற்றுப் போக்கு உண்டாகலாம். சில குழந்தைகளுக்குப் பல் முளைக்கும்போது வயிற்றுப் போக்கு ஏற்படுவதுண்டு. ஆகவே, வயிற்றுப் போக்கு ஏற்பட்டால், வேறு ஏதாவது காரணம் உண்டா என்று கவனிக்கவேண்டும்.

வயிற்றுப் போக்கு ஆரம்பித்ததும், அதாவது சாதாரணமாக இல்லாமல் மலம் அதிகமாக இளகியிருந்தால் வயிற்றைச் சுத்தம் செய்துவிடுவது நலம். சுத்தமான விளக்கெண்ணெயே இதற்குச் சிறந்தது. வயசுக்குத் தகுந்த மாதிரி சில சொட்டுக்களிலிருந்து, ஒரு தேநீர்க் கரண்டி அளவு கொடுக்கலாம். தாய்ப்பாலோ இதர ஆகாரமோ கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும். கொதித்து ஆறிய தண்ணீரை அடிக்கடி கொடுக்கவேண்டும். குழந்தைக்கு இரண்டு மூன்று தடவை பேதியாகி வயிற்றில் ஜீரணமாகாத உணவு வெளிப்பட்டுவிடும். பிறகு ஆகாரம் கொடுக்கும்பொழுது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இரண்டு அல்லது மூன்று வேளை உணவை நிறுத்திப் பிறகு தாய்ப்பால் கொடுக்கலாம். பால் கொடுப்பதற்கு முன்பு, முன் சொன்ன மாதிரி தண்ணீர் கொடுத்தால், குடிக்கும் பாலின் அளவு குறையும்; குடலுக்கு அதிக வேலையும் இராது. புட்டிப்பாலோ பசும்பாலோ கொடுக்கும்போது தண்ணீர் அதிகம் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்க வேண்டும். சர்க்கரை, குளூகோஸ், பழரசம் இவைகளை நிறுத்திவிடவேண்டும்.

இந்த முறையில் வயிற்றுப் போக்குக் குணப்படாவிட்டால் டாக்டரிடம் அவசியம் காட்டவேண்டும். டாக்டர் வந்து பார்க்கும் வரை, தண்ணீர் தாராளமாகக் கொடுத்து வரவேண்டும். தண்ணீர் கொடுக்காவிட்டால் குழந்தைக்கு மிகவும் அசதி ஏற்படும். வயிற்றுப்போக்குக் குணமான பிறகும் ஒரு வாரம் வரையாவது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

இந்த விஷயத்தில் சில தாய்மார்கள் மிகவும் கவனக் குறைவாக இருக்கிறார்கள். குழந்தை எலும்பும் தோலுமாகும்வரை ஒரு வைத்தியமும் செய்வதில்லை. குழந்தையின் உடலுக்கு வேண்டிய சத்துப் பொருள்கள் ரத்தத்தில் கலக்காமல், வெளியே போய்விடுவதால் இதர நோய்களும் உண்டாகும். கண்கள் குருடாவதும், கால் எலும்புகள் வளைந்துவிடுவதும், வாயிலிருந்து ரத்தம் வருவதும், நம் நாட்டில் சகஜமாகக் காணலாம்.

எனக்குத் தெரிந்த லேடி டாக்டர் ஒருவருக்கு ஒன்பது மாதக் குழந்தை ஒன்று இருக்கிறது. அதற்கு இதுவரை மலச்சிக்கலோ, வயிற்றுப் போக்கோ ஒரு நாள்கூட ஏற்பட்டதில்லை. விளக்கெண்ணெயையோ, கிரைப் வாட்டரையோ இதுவரை ஒரு தடவைகூட அவர் உபயோகிக்கவில்லை. தாய்ப்பால், பசும்பால் இரண்டும் குழந்தைக்குக் கொடுக்கிறார். நல்ல புஷ்டியுடன் இருக்கிறது. அதிகம் சதை போட்டு அசையமுடியாமல் கொழுத்திருக்கவில்லை. ஆரம்பத்திலிருந்தே நல்ல முறையில் கவனித்தால் வியாதி வராமல் எல்லாக் குழந்தைகளும் இந்த மாதிரி நன்றாக வளரும்.

நவீன பஞ்சபாண்டவர்

வி. ராகவையா

> விசித்திரமான மக்களைப்பற்றிய இந்தக் கட்டுரையின் ஆசிரியர் சென்னைச் சட்டசபை அங்கத்தினர்; பாரதீய ஆதிம ஜாதி சேவக சங்கத்தின் காரியதரிசி. இந்திய வடமேற்கு எல்லைப் பிரதேசத்தில் வாழும் இந்தப் பழங்குடிகளை இவர் சமீபத்தில் நேரில் சென்று பார்த்துவிட்டு வந்தார்.

டேராடூனிலிருந்து 49 மைல் வட மேற்கே இமாலயச் சாரலில் 7,000 அடி உயரத்தில் கொருவா என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே செம்பட்டை மயிரும் கருவிழியும் கொண்ட பதினாறு வயது அழகி ஒருத்தியைக் கண்டேன். அந்தப் பெண்ணை விசாரித்ததில் அவளுக்கு இரண்டு புருஷர்கள் இருப்பதாகத் தெரிந்தது.

மலை அடிவாரத்தில் வற்றாத சுனை ஒன்று இருக்கிறது. கட்டமைந்த உடல் நெளியத் தண்ணீர்க் குடம் வெயிலில் பளபளக்கப் பெண்கள் மலைமேல் ஏறிச் செல்லும் காட்சி பார்க்க அழகாக இருக்கும். இங்கிருந்து எட்டு மைல் தூரத்தில் ரேன் ரோட் நின்று விடுகிறது. இந்தப் பிராந்தியத்தில் பெண்கள் பல புருஷர்களைக் கொள்ளும் வழக்கம் உண்டு. ரேன் ரோட்டுக்கு அப்பால் இமாலயத்தைத் தாண்டித் திபேத் எல்லையை நெருங்கும் வரையில் கோவேறு கழுதைமேல்தான் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். மலைத் தொடர்களும் ஆழமான பள்ளத் தாக்குகளும் நிறைந்தது இந்தப் பிரதேசம். இங்கிருந்து பல மலையருவிகள் கடுவேகமாக வந்து யமுனையில் கலக்கின்றன. உத்தரப் பிரதேசத்தின் வட மேற்குப் பகுதியைச் சேர்ந்த இந்த இடத்துக்கு ஜவுன்ஸார் பவார் என்று பெயர். இதில் 417 கிராமங்கள் இருக்கின்றன. கோல்டா, பாஜ்கீ, ராஜ்புத், பிராம்மணர் இப்படிப் பல ஜாதியார் இங்கே வசிக்கிறார்கள். இங்கே உள்ள குடும்பங்களில் சகோதரர்களெல்லாரும் சேர்ந்து பாண்டவர்களைப் போல் ஒரு பெண்ணை மணந்துகொள்வது வழக்கம். இவர்கள் பஞ்ச பாண்டவர்களை வழிபடுகிறார்கள். இங்கே எங்கேயாவது ஓர் இடத்தில் பாண்டவ நாடகம் நடக்கிறது என்றால் மலையுச்சியிலிருந்து பறை அடிப்பார்கள். அதைக் கேட்டு மற்றொரு மலையுச்சியில் இருப்பவர்கள் பறை கொட்ட, இப்படி அந்தப் பிராந்தியம் முழுதும் செய்தி பரவிவிடும். ஆண்களும் சரி, பெண்களும் சரி

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 7-7-51), சென்னை.

தடபுடலாக உடுத்துக்கொண்டு நாடகத்தைப் பார்க்க வருவார்கள். இரவில் 'பாண்டவ நிருத்தியம்' ஆடுவார்கள். அப்போது உற்சாகம் ஏற்படுவதற்காகச் சாராயம் குடிப்பார்கள். இரவு முழுதும் ஆடி ஆடிக் கடைசியில் ஓய்ந்துபோய்க் கீழே சாய்ந்து விடுவார்கள். இதையெல்லாம் பார்க்க வராவிட்டால் தெய்வ கோபத்துக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

குடும்பத்தில் மூத்த சகோதரன் முதலில் ஒரு பெண்ணை மணந்து கொள்வான். அவள் மற்றச் சகோதரர்களுக்கும் மனைவியாக இருப்பாள். அவளுக்குப் பிறக்கும் குழந்தை எல்லாருக்கும் பொது. சகோதரர்கள் பிரிந்து போகும் போது அவளும் அந்தக் குழந்தைகளும் மூத்தவனோடு இருந்து விடுவார்கள். இப்படிப் பிரிந்த மற்றச் சகோதரர்கள் மறுபடியும் பாண்டவ ரீதியில் வேறு ஒரு பெண்ணை மணந்துகொள்ளலாம். குடும்பச் சொத்திலிருந்து இதற்கான செலவை எடுத்துக்கொள்வார்கள். சொத்தைப் பிரித்துக் கொள்ளும்போது மூத்தவன் அதுவரையில் குடும்பத்தை நடத்தி வந்ததால் அவனுக்கும், இன்னும் அநுபவம் போதாததால் கடைசித் தம்பிக்கும் மற்றவர்களைவிட அதிகப் பங்கு கிடைக்கும். ரூ. 100 முதல் ரூ. 400 வரையில் ஒரு விலை வைத்து மனைவியை விற்பதும் மாற்றிக்கொள்வதும் உண்டு. மனைவி பெரியவளாகவும் கணவன் சின்னவனாகவுங்கூட இருக்கலாம். கொருவா கிராமத்தில் நான் பார்த்த பெண்ணின் பெயர் போஸாயி. அவள் கணவன் மாரில் மூத்தவனுக்கு 14 வயதும் இளையவனுக்கு 10 வயதுந்தான் ஆகின்றன. விசாகம் என்ற வைகாசி மாதத்தில் பிறந்ததால் அவளுக்குப் போஸாயி என்று பெயரிட்டார்களாம்; சித்து, ஜேது, ஆஷாடு, சோமவாரு, புதவாரு என்று பிறந்த மாதம், கிழமை இவைகளின் பெயர்களையே வைத்து அங்கே அழைப்பது சகஜம்.

உடன் பிறந்தவர்களுக்குள்ளேயே இப்படி ஒரே பெண்ணை மணக்கும் வழக்கம் இருப்பதால் அவ்வளவாகச் சச்சரவு ஏற்படுவதில்லை. மற்றப் பழங்குடிகளிடம் இந்த வழக்கம் இருந்ததோ இல்லையோ, நமக்குத் தெரியாது. ஆனால் இவர்களும் தென் கோடியில் வாழும் தொதுவர்களும் மட்டும் இந்தப் பழைய வழக்கத்தை விடாமல் இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

போஸாயியின் தாய் ரூனி, பருவா என்பவனுக்கு மூன்றும் மனைவி. இவர்களுக்கு மொத்தம் ஆறு குழந்தைகள். பருவாவுக்கு வயது 80; ரூனிக்கு 40 வயது. குடும்ப பாரத்தையெல்லாம் அவள் தான் கவனித்து வருகிறாள். 60, 40, 37, 35 வயதில் பருவாவுக்கு நாலு தம்பிமார் இருக்கிறார்கள்; சண்டை சச்சரவில்லாமல் ரூனியோடு குடித்தனம் நடத்துகிறார்கள். அவர்கள் சம்பாத்தியம் முழுவதையும் மூத்தவனிடத்தில் கொடுத்துவிட வேண்டும். அவனுக்குத்தான் அதை எடுத்துச் செலவு செய்ய அதிகாரம் உண்டு. இங்கே வாழும் மக்களில் கோல்டா, பாஜ்கீ என்பவர்கள் தான் கடை ஜாதியார். ராஜ்புத், பிராம்மணர்கள் இந்த இரண்டு ஜாதியாருக்கும் சொத்தும் சுதந்தரமும் ஏராளமாக உண்டு.

இங்கே வசிக்கும் பெண்கள் நல்ல உழைப்பாளிகள். முழங்கால் மட்டத்துக்குப் பாவாடையும் இடுப்பு வரைக்கும் ரவிக்கையும் தலையில் கறுப்புத் துண்டும் கட்டிக் கொண்டிருப்பார்கள். மலையில் வாழும் இருளப் பெண்களைப்போல் கழுத்தில் அரை ரூபாயையும் ஒரு ரூபாயையும் சங்கிலியாகக் கோத்து அணிகிறார்கள். மூக்கில் உள்ள நகை அகலத்துக்கு வளையம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது தொங்கினால் கனக்கும். ஆகவே, அதில் நூல் கயிற்றைக் கட்டித் தலை மயிரோடு சேர்த்து முடிந்து விடுகிறார்கள். ஆடு சதை, மணிக்கட்டு, மார்பு, கழுத்து இதெல்லாம் பச்சை குத்திக்கொள்கிறார்கள். இவர்களில் பிராம்மணப் பெண்களும் ராஜ்புத் பெண்களும் மூக்கும் முழியுமாக அழகாய் இருக்கிறார்கள். புருஷர்களின் எதிரில் 'பர்தா' போட்டுக்கொண்டு வீண் ஜம்பமெல்லாம் பாராட்டுவதில்லை. சகஜமாகப் பழகுகிறார்கள். புருஷர்கள் ஒல்லியாக இருந்தாலும் கட்டமைந்த உடல் உள்ளவர்கள்; தைரியசாலிகள்.

மர வீடு கட்டிக்கொண்டு அதன் மேல்தளத்தில் வசிக்கிறார்கள். கீழே தானியம், தட்டு முட்டுச் சாமான்களை யெல்லாம் வைத்து நிரப்பி வைப்பார்கள். பாலுக்காகக் கறவை ஆடுகள் வளர்க்கிறார்கள். மாசி மாதத்தில் அவரவர் அந்தஸ்துக்கு ஏற்ற மாதிரி ஏராளமாக ஆடு பலி கொடுக்கிறார்கள். ஆண்கள், பெண்கள் எல்லாருமே ஹூக்கா குடிப்பது சகஜம்.

மலைமேல் கோதுமை, பருப்புத் தினுசுகளையும் காய்கறிகளையும் நன்றாகப் பயிரிட்டுப் பழகியிருக்கிறார்கள். மரத் தொட்டிகளில் மோரைக் கொட்டி வைத்திருப்பார்கள். கூரை தாழ்ந்து, படுக்குமிடத்தின் அடியில் மரப் பலகை போட்டிருக்கும்; மழைக் காலத்தில் கும்மென்று உஷ்ணமாகவும் கோடையில் குளுகுளுவென்றும் இருக்கும். வாசற்படி 3 அடிக்கு மேல் இராது; தொதுவர்கள் வாழும் குடிசைகளிலும் வாசற்படி இப்படித்தான் குட்டையாக இருக்கும். ஆட்டுத் தோலைப் பையாகத் தைத்து அதில் தானியங்களைக் கட்டி வைப்பார்கள். ஒருவகை மிருகத்தின் தோலில் காற்று நிரப்பி அதைப் படகாக உபயோகிக்கிறார்கள். காட்டு மரத்து இலைகளைத் தைத்துக் குடையாக உபயோகிக்கிறார்கள். கறிவேப்பிலை இங்கே ஏராளமாக இருந்தும் அதைச் சீந்துவாரே இல்லை. உருளைக் கிழங்கும் சீமைத் தக்காளியும் இங்கே விசேஷம். எல்லாருக்கும் சுரைக் குடுக்கையில்தான் தண்ணீர் வழங்குவார்கள்.

சிற்றாறுகளும், பச்சைப் பசும் மலைச்சாரலும் சூழ்ந்த அழகிய கிராமக் காட்சியைக் காண அநேகம் பேர் இங்கே வருவது வழக்கம். ஜனங்கள் குறைவாகவும் இடவசதி மிகுதியாகவும் இருப்பதால் நில விஷயமாக எந்த விதமான சச்சரவும் இல்லை. மக்களுக்கும் தெய்வ நம்பிக்கை குன்றவில்லை; எளிமையாக வாழ்வு நடத்தி வருகிறார்கள்.

ராஜ்புத், பிராம்மணர் இந்த இரண்டு ஜாதியாரும் ஆப்கன், மொகல் படையெடுப்புக்குப் பயந்து இங்கே குடியேறினவர்கள். இவர்களின் கீழ் உழைத்து வரும் கோல்டா, பாஜ்கீ என்ற தாழ்த்தப் பட்ட ஜாதியாரின் நிலை மோசமாக இருக்கிறது. கடன்பட்டு அடிமை வாழ்வு வாழ்கிறார்கள். இவர்களைப்

பற்றி உத்தரப் பிரதேச சர்க்கார் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் மூன்று வருஷத்துக்கு முன் வாங்கின கடன் செல்லாது என்று சட்டம் விதித்திருக்கிறார்கள்.

பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கு ஒரு ரூபாய் கொடுத்ததும் நிச்சயதார்த்தம் முடிந்தமாதிரிதான். பிறகு பெண் வீட்டார் 'பூரி' முதலிய பட்சணங்களைக் கொண்டு வந்து வைத்துப் பிள்ளை வீட்டாரை உபசரிப்பார்கள்.

இங்கே 60 சத விகிதம் பேருக்கு மேக வியாதி இருப்பது சகஜம். 1942-இல் ஸ்ரீராம் தேவ் சாஸ்திரி என்பவர் கால்ஸி என்ற இடத்தில் ஓர் ஆசிரமம் ஸ்தாபித்துச் சலியாமல் இவர்களுக்காக உழைத்து வருகிறார். இன்று 150 ஆரம்பப் பள்ளிக்கூடங்களையும் 4 மத்திய தரப் பாடசாலைகளையும் பாரதீய ஆதிம ஜாதி சேவக சங்கத்தார் வைத்து நடத்துவதற்கே இவருடைய முயற்சிதான் காரணம். இவர் டக்கர் பாபாவின் பெயரால் குஷ்டரோக ஆஸ்பத்திரி ஒன்று நடத்தி வருகிறார். ஊர் ஊராகப் போய் 'மாஜிக் லாண்டர்ன்' மூலம் சுகாதார சம்பந்தமாகப் படங்கள் காட்டி வருகிறார். டேஹ்ரி - கட்வால் பிரதேசத்தில் 'கன்யா பாடசாலை' ஒன்றும் இராப் பள்ளிக்கூடம் ஒன்றும் நடத்தி வருகிறார். இங்குள்ள மக்களுக்குக் குஷ்டரோக சிகிச்சை, இலவச மருந்து முதலிய வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார். அருகிலேயே கின்னரர் என்ற மலைஜாதியார் வாழ்கிறார்கள். அந்த இடத்திலும் இவருடைய ஆசிரமவாசிகள் சென்று அவர்களுக்கு உதவி புரிந்து வருகிறார்கள். இவர் ஆரம்பித்த டக்கர் பாபா கிராம வாசகசாலை நன்றாக நடந்து வருகிறது.

கம்யூனிஸ்டுகளோ, வெள்ளைப் பாதிரிமாரோ இன்னும் இங்கே கால் எடுத்து வைக்கவில்லை. இருந்தாலும் இங்கே வறுமை தாண்டவமாடுவதால் பின்னால் என்ன நேரும் என்று சொல்வதற்கில்லை. அதோடு அருகிலுள்ள நேபாளத்திலும் திபேத்திலும் நிலைமை சரியாக இல்லை. பக்கத்திலேயே சீனாவில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் வலுத்து வருகிறது. பர்மாவிலும் சண்டையும் சச்சரவுமாக இருக்கின்றன. வடமேற்கே பாகிஸ்தான் எல்லையில் எப்போது சண்டை மூளுமோ தெரியாது. இந்த நிலையில் நம் சர்க்கார் கண்ணை மூடிக்கொண்டு சும்மா இருந்தால் சரிப்படாது. இங்கே வசிக்கும் ஜாதியார் எளிமையை விரும்பி வாழ்கிறவர்கள். அவர்களுக்கு அதிகத் தேவை எதுவும் இல்லை; சண்டை சச்சரவென்றாலும் பிடிக்காது. ஆனாலும் வறுமை எல்லை மீறினால் யார்தான் சும்மா இருப்பார்கள்? தங்கள் வடமேற்கு எல்லையான இந்தப் பிரதேசத்து மக்கள் திருப்தியோடு வாழ்வதற்கு உடனே வழி தேடவேண்டும். நீண்ட காலத் திட்டம் ஒன்றும் வகுக்கவேண்டும்.

குணத்தைக் காட்டும் சிரிப்பு

எதைக் கண்டு ஒரு மனிதனுக்குச் சிரிப்பு வருகிறதென்று கவனி; அவன் குணம் எப்படிப்பட்டதென்று மிக நன்றாய்த் தெரிந்துகொண்டு விடலாம்.

—கெதே

இயற்கையில்தான் என்ன அற்புதம்!

குழந்தை வளர்க்கும் ஆண்

வி. பி. பிரசாத ராவ்
ஹேமலதா

முதுகெலும்பு உள்ள பிராணிகளில் குஞ்சுகள் என்றால் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றும் குணமுள்ளவையே அதிகம். இந்த வகையில் மீன் மிக மிகப் பழைய ஜீவஜந்து. மீன் இனத்தில் பல ஜாதிகள் கணக்கில்லாமல் முட்டை இடுகின்றன.

நம் சென்னைக் கூவம் நதியில் 'எரிஸ்' என்னும் ஜாதி மீன்கள் இருக்கின்றன. இவற்றில் ஆண் மீன்களுக்குக் குஞ்சுகள் என்றால் உயிர். தந்தை மீன் தன் வாயில் மனைவி இட்ட முட்டைகளைப் பத்திரப்படுத்திக்கொள்ளும். அவை வாயில் இருக்கும் வரையில், முட்டைகள் கீழே விழுந்து விடுமோ என்ற பயத்தால், நெட்டுக்குத்தலாகவே நீந்தும். வாயைத் திறந்து ஆகாரம் தின்றால் முட்டைகளுக்கு அடிபட்டு விடுமோ என்று பட்டினி கிடந்துவிடும். சில நாட்களில் முட்டைகள் குஞ்சுகளாகின்றன. குஞ்சுகளுக்கு வெகு நாட்கள் வரையில் தந்தை மீனே துணையாக இருக்கும். வேறு ஜந்துக்கள் அவைகளைப் பயமுறுத்தினால் தந்தையின் வாயில் ஒளிந்துகொள்ளும்.



எண்ணெய் மீன்

'அமீயா' என்ற ஒருவகை மீன்கள் வேறு விதமாக முட்டையிடுகின்றன. தண்ணீரில் ஓர் ஓரமாகப் பார்த்துக் குழி செய்து பெண் மீன் அந்தக் குழியில் முட்டை இடும். முட்டைகள் அந்தக் குழிக்குள்ளேயே மிதந்து கொண்டிருக்கும். அடுத்தாற்போல் ஆண் மீன் வந்து அந்த முட்டைகளின்மேல் ஒருவித நீரைக் கசிய விட்டுச் செல்லும். உடனே அந்த முட்டைகள் கனத்து விடும். இதற்குள்ளாகப் பெண் மீன் ஜலக் கிரீடை செய்துவிட்டு வரும். வந்து முட்டைகளின் மேல் மணலை வாரி இறைக்கும். பிறகு முட்டைகள் குஞ்சுகளாக மாறும்.

மற்றொரு ஜாதி மீன் இருக்கிறது. இதைக் 'கடற் குதிரை' என்பார்கள். இது முட்டைகளைத் தன் வயிற்றிலுள்ள பையில் வைத்து வளர்க்கிறது. இந்த ஜாதி மீன்களில் ஆண் மீன் தன் வாயில் ஊறும் உமிழ் நீரைக்கொண்டு பெண் மீன் இட்ட முட்டைகளைப் பாதுகாக்கிறது. கொஞ்சம் முற்றிய பின் அவை

மூலம்: சௌபாக்ய (தெலுங்கு: விசேஷ மலர்), சென்னை.

களைக் கூடுகளில் வைத்து வாலால் தண்ணீரை அடிக்கும். அதனால் முட்டைகள் உடைந்து குஞ்சுகள் வெளி வரும். இப்படிக் குஞ்சுகள் வரும் வரையில் முட்டைகளைக் காக்கும்.

முள் மீன் என்று ஒருவகை இருக்கிறது. அதில் ஆண் மீன் தண்ணீருக்கு மேல் மட்டத்தில் நல்ல கூடுகளை அமைத்து மனைவியை அழைக்குமாம். பெண் மீன் வந்து முட்டையிடும். பெண் மீன் போன பின்பு ஆண் மீன் முட்டைகளை அடை காக்கும். குஞ்சுகள் சற்றுப் பெரியவை ஆகும் வரையில் சில ஆண் மீன்கள் பால் கூடக் கொடுக்குமாம். பெண் மீன்களில், வயிற்றில் முட்டைகளைக் கட்டிக்கொண்டு திரிபவை மிகக் குறைவு.

மிடாத் தவளைகளில் சிலவகை உண்டு. பிரான்ஸிலும் இத்தாலியிலும் 'மருத்துவத் தவளை' என்று ஒன்று இருக்கிறது. முட்டையிடும்படி பெண் தவளையை ஆண் தவளை உற்சாகப்படுத்தும். உடனே பெண் தவளை ஒரு கஜ தூரத்துக்கு வரிசையாக முட்டையிட்டு அந்தத் தொடரை ஆண் தவளையின் பின்னங்கால்களில் சுற்றி விடும். ஆண் தவளை அந்த முட்டைத் தொடரை ஒரு வளையில் பத்திரப் படுத்தும். ஒவ்வோர் இரவிலும் அந்த முட்டைச் சங்கிலியை வெளியில் எடுத்துத் தண்ணீரில் முக்கி மறுபடியும் வளைக்குள் வைக்கும். முட்டை வெடிக்கும் சமயத்தில் அவற்றைத் தண்ணீருக்குள் கொண்டுபோகும். அப்போது அவை வெடித்துக் குஞ்சுகள் வெளி வரும்.

நீர்க் குதிரை

மருத்துவத் தவளை

'சுரநாம்' என்ற மற்றொரு வகைத் தவளை இருக்கிறது. இதற்குப் பின்னங் கால்கள் நீளமாகவும் தட்டையாகவும் இருக்கும். ஆண் தவளையின் முதுகின்மேல் பெண் தவளை முட்டையிடும். முட்டைகள் முற்ற முற்ற ஆண் தவளையின் முதுகின்மேல் ஒட்டிக்கொள்ளும். சில நாட்களில் அவை வெடித்துக் குஞ்சுகள் வெளி வரும்.

ஊரும் வகையைச் சேர்ந்த பாம்பு போன்ற ஜீவஜந்துக்கள் நீரிலும் நிலத்திலும் வாழும் தவளை

முதலியவற்றைவிட முன்னேற்றம் அடைந்தவை. இவற்றின் ரத்தம் குளிர்ந்திருக்கும். உடம்பின் உஷ்ணம் சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் மாறுபடும். தம் உடம்புக்குத் தகுந்த உஷ்ணப் பிரதேசத்திலே இவை சுறுசுறுப்பாக இருக்கும். இவைகளின் முட்டை ஓடு கெட்டி யானது. இவை கூடிய மட்டும் அபாயக் குறைவான இடங்களில் முட்டையிடும்.

ஆமை, தன் வால் புறத்தால் பள்ளந் தோண்டி அதில் நூறு முட்டைகள் வரைக்கும் இடும். நீரில் வாழும் முதலை நிலத்தில் சிறிய வீடு கட்டி அதில் முட்டை இடும்.

ஓணன், பாம்பு முதலியவை வெயிலிலோ சருகுகளின் உஷ்ணத்திலோ வெடிக்கும்படி முட்டையிடும். இப்படி இடும் முட்டைகளின் எண்ணிக்கை அதிக மாக இராது. இவை முட்டைகளைக் காக்க அவ்வளவாகச் சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை. முதலை மட்டும் முட்டையை ஜாக்கிரதை

ஒபாஸம்

யாகக் காக்கும். முட்டை வெடித் துக் குட்டி வெளி வர உதவி செய்யும். வெளி வந்தவுடன் அதைத் தண்ணீருக்குள் அழைத் துக்கொண்டு போய்விடும்.

நம் நாட்டு மலைப் பாம்பு தன் முட்டைகள் எல்லாவற்றையும் தன் உடல்மீது வளையமாகச் சுற்றி அதற்குள்ளேயே வைத்து அடை காக்குமாம்.

ஒரு காலத்தில் உலகத்தில் உஷ்ணம் அதிகமாக இருந்ததாம். அப்போது பாம்பு போன்ற ஊரும் பிராணிகள் எங்கும் நிறைந்து விட்டனவாம். பிறகு தாங்க முடியாத குளிர் ஏற்படவே ஊரும் வகையைச் சேர்ந்த ஜீவ ஜந்துக்கள் பெரும்பாலும் அழிந்து பட்சி களாகவும், வேறு பிராணிகளாக வும் மாறிவிட்டனவாம்.



மலைப் பாம்பு

இன்னொரு வகைப் பிராணி இருக்கிறது. இதன் பெயர் 'ஒபாஸம்'. குரங்கு, கங்காரு இவைகளைப்போல் இது தன் குட்டிகளை முதுகிலேயே சுமந்து கொண்டு அலையும். இதுபோல் படத்தில் இன்னும் பல ஜீவஜந் துக்கள் குட்டிகளை வளர்க்கும் முறை வெவ்வேறு விதமாக இருப்பதைக் காணலாம்.

தன் குடும்பம் செலவழிக்கக் கூடிய வேகத்தைவிட அதிக வேகமாகப் பணம் சம்பாதிப்பவனே நிதி நிபுணன்.

—'அமெரிக்கன் அப்ஸர்வர்'

தேதிக் குழப்பம்

★

நேற்று இன்றாகவும் இன்று நேற்றாகவும் மாறும் இந்த அதிசயம், உலகம் சுற்றுவோருக்கு அடிக்கடி நிகழும். இதுபற்றிய இந்த விநோத விவரங்களில் பெரும் பகுதியும் 'ரொடேரியன்' பத்திரிகையில் வந்த கட்டுரை ஒன்றை ஆதாரமாகக் கொண்டது.

1950-ஆம் ௵ ஜூன் ௴ 25-ஆம் ௳ ஞாயிற்றுக்கிழமை பாதிராத்திரி வேளைக்குச் சற்று முன்னால், வட கொரியர்கள் 38-ஆம் அட்ச ரேகையைக் கடந்து வெகு உக்கிரமாய்த் தென் கொரியாவின்மேல் படையெடுத்து அதைத் தாக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அந்தச் செய்தியை அதே ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு - அதாவது படையெடுப்பு நடப்பதற்கு 16 மணிநேரம் முன்னதாகவே - அமெரிக்க ரேடியோ ஒலிபரப்பிகள் கதறத் தொடங்கி விட்டன!

இதுவாவது தேவலை; 1945-ஆம் ௵ செப்டம்பர் ௴ 2-ஆம் ௳ ஜப்பான் சரணாகதி அடைந்தது. இந்தச் செய்தியை மிஸௌரி என்ற போர்க் கப்பலிலிருந்த ரேடியோ ஒலி பரப்பியது. இப்படி 2-ஆம் ௳ ஒலி பரப்பிய செய்தியைச் செப்டம்பர் 1-ஆம் ௳யே அமெரிக்க மக்கள் தங்கள் ரேடியோ செட்டுகளில் கேட்டுவிட்டார்கள்! 'இன்று போட்ட குரலை நேற்றே கேட்டு விடுவதா? இதென்ன ஆச்சரியம்' என்றுதான் சாதாரணமாய் நமக்குத் தோன்றும். விஷயம் சற்று வேடிக்கையானதுதான். ஆனால் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

இந்தத் தேதிக் குழப்பத்துக்கெல்லாம் காரணம் என்ன? அது ஒன்றும் பிரமாத ரகசியம் இல்லை. ஒரு கப்பல் கிழக்கு முகமாக உலகத்தைச் சுற்றி வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். கப்பல் புறப்பட்ட ஊரில் உள்ளவர்களைவிட அதன் பிரயாணிகளுக்கு ஒரு நாள் அதிகமாகச் சூரியன் உதித்து விடுகிறது. அதே கப்பல் மேற்கு முகமாக உலகத்தைச் சுற்றினால் ஒரு நாள் சூரியோதயம் குறைந்து விடுகிறது; ஆகவே, அந்தக் கப்பல் பிரயாணிகள், ஒரு திசையில் ஒரு தேதியை இரண்டு தடவை வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது; மறுதிசையில் ஒரு தேதியை அடியோடு விட்டுவிடவேண்டி யிருக்கிறது. இதற்கு வசதியாகவே தீர்க்க ரேகை (லாஞ்சிட்யூடு) 180 டிகிரியில் 'சர்வ தேசத் தேதி எல்லை' (இண்டர்நேஷனல் டேட் லைன்) இருப்பதாக நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், தேதிக் குழப்பத்தால் விளையும் விசித்திரங்களைத்

தடுக்க மட்டும் வழி ஏதுவும் இல்லை.

ஜப்பான் யுத்தம் முடிந்து ஒரு மாதத்துக்கெல்லாம் ஒகினுவா என்ற கப்பலில் ஓர் அமெரிக்க ராணுவ அதிகாரி தாய்நாடு திரும்பினுர். வருகிற வழியில் தாம் பிறந்த நாளை இரண்டு நாள் தொடர்ந்து அவர் கொண்டாட வேண்டியதாயிற்று. ஏனென்ருல், அவர் கப்பல் கிழக்கு முகமாய்ச் சென்றது. இது பரவாயில்லை; இன்னொரு வாலிபன் வந்த கப்பல் மேற்கு முகமாய் வந்ததால், இந்தப் பாடம் தலைகீழாய்ப் போய்விட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த டென்னெஸீ மாகாணத்திலிருந்து அவன் வந்தான். அந்த வருஷம் அவனுடைய பிறந்த நாள் வராமலே போய்விட்டது. தனக்கு 18 வயது பூர்த்தியாகிவிட்டது என்று நிரூபிக்க முடியாமல் அவன் திணறிப் போனுன். கப்பலிலிருந்த தளபதி வந்து அவன் சார்பாக அத்தாட்சி கூறி அவன் மேஜரானதை நிலை நாட்ட வேண்டியதாயிற்று.

1946-ஆம் ஆண்டு ஜூலை மீ 1-ஆம் வ பிகினியில் அணுக்குண்டு போட்டுப் பரீட்சித்தார்கள். அந்தக் குண்டு வெடித்த சத்தத்தை ஹவாய் தீவிலிருந்து ஐரோப்பா வரைச்கும் உள்ள மக்களெல்லாம் ஜூன் மீ 30-ஆம் தேதியே கேட்டு விட்டார்கள்.

யுத்தம் தொடங்குவதற்கு முன் 'டாலர் லைன்' என்ற அமெரிக்கக் கம்பெனியின் கப்பல்களெல்லாம் மேற்கு முகமாகவே உலகத்தைச் சுற்றுவது வழக்கம். அந்தக் கப்பல்களில் ஒன்றின் மாலுமி ஜார்ஜ் கல்லன் என்பவர். அவர் ஒருசமயம், "இந்தச் சர்வ தேசத் தேதி எல்லை,



வளைந்து வளைந்து செல்லும் தடித்த கோடுதான் 'சர்வதேசத் தேதி எல்லை. அடுத்தடுத்துள்ள பிரதேசங்களில் தேதி மாறுடாதிருப்பதற்காகவே இப்படி இது வளைகிறது. இந்த எல்லைக்கு மேற்கே ஆசியா முழுவதும இருக்கும்படியும், கிழக்கே வட அமெரிக்கா முழுவதும அலூஷியன தீவுகளும் இருக்கும்படியும வட பக்கததில் இதை வளைத்திருக்கிருர்கள். சாதாம் தீவும் டோங்கா தீவுகளும் இதறகு மேறகே இருக்கும்படி தெற்கில இதை வளைத்திருககிருர்கள்.

என் ஆயுளில் 37 நாட்களைக் கொள்ளைகொண்டு விட்டது. அவை தொலைந்தே போய்விட்டன; இனி ஒருபோதும் திரும்பி வரப்போவதில்லை. அந்த நாட்களை வாபஸ் பெறக் கிழக்குமுகமாய் நான் போக வேண்டுமென்ருல், எங்கள் டாலர் லைன் கம்பெனியார் அநுமதிக்க மாட்டோம் என்கிருர்களே" என்று புலம்பினுர்.

நியூ காலிடோனியா என்ற தீவில் உள்ள நௌமீ என்ற நகரில் ஜூலை 21-ஆம் தேதி விமானத் தபால் உறை ஒன்றைப் போடுகிறோம். 1,700 மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள காண்டன் தீவுக்கு அது போய்ச் சேர்கிறது. அதன் மீதுள்ள தபால் முத்திரைகளைப் பார்த்தால் விநோதமாயிருக்கும். அந்த உறை புறப்பட்ட தேதி ஜூலை 21; போய்ச் சேர்ந்த தேதியோ ஜூலை 20 கடித உறை இறந்த காலத்துள் முக்குளித்துவிடுகிறது!

இப்படித் தேதிக் குழப்பம் ஏன் உண்டாகிறது? சிறிது யோசித்தால் அது புலனாகும். பூமி தன்னைத்தானே ஒரு சுற்றுச் சுற்றினால் ஒரு நாள் என்கிறோம். அந்த நாள் பூமியில் எங்கேயாவது ஓரிடத்தில் தானே தொடங்கியாகவேண்டும். ஒரு சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றியது என்பதை எப்படிக் கணக்கிடுவோம்? அதன் வட்டக்காலில் ஓர் இடத்தில் சாக்கட்டியால் புள்ளி வைப்போம். அந்தப் புள்ளி தரைப் பக்கத்தில் இருக்கும்படி சக்கரத்தை நிறுத்துவோம். மெல்ல அதை உருட்டுவோம். வட்டக்காலில் உள்ள புள்ளி மேலே போய் முதல் முதலாக மறுபடியும் கீழே வந்து சேரும்போது சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டது என்போம். இதேபோலப் பூமியிலும் வடதுருவத்திலிருந்து தென் துருவத்துக்கு ஒரு கோட்டை இழுத்துக்கொள்ள வேண்டும். அதுவே தீர்க்கரேகை 180 டிகிரி என்பது. இந்தக் கோட்டில்தான் நடுராத்திரி வேளையில் ஒருநாள் தொடங்குகிறது. 1884-ஆம் ஆண்டு வாஷிங்டன் நகரில் கூடிய சர்வதேச மகாநாட்டில் இந்த ஏற்பாட்டைப் பல நாடுகளும் ஒப்புக்கொண்டன.

இந்த 180 டிகிரியில் தொடங்கும் நாள் 12 மணிநேரம் கழித்தே கிரீன்விச் நகரை அடைகிறது. அதற்குப் பிறகு அமெரிக்கா முதலிய நாடுகளைக் கடாட்சித்துவிட்டு, 24 மணிநேரத்துக்குச் சற்று முன்பு 180 டிகிரியின் மறுபக்கத்தை எட்டிப் பிடிக்கிறது. உதாரணமாக, இந்த 180-ஆம் டிகிரியில் நடு ராத்திரியில் திங்கள்கிழமை பிறப்பதாக வைத்துக்கொள்ளலாம். இந்த டிகிரிக்கு அடுத்தாற்போல் மேற்கே திங்கள்கிழமையாக இருக்கும்; ஆனால் கிழக்கேயோ அதே வேளையில் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும்.

“ஆமாம்; கிரீன்விச் நகரில் தீர்க்கரேகை பூஜ்யம் டிகிரி என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உலக கடிகாரக் கணக்கை அங்கிருந்தே நிர்ணயிக்கிறார்கள். இப்படியிருக்க, இந்தத் தேதியும் அங்கேயே தொடங்குவதாக ஏன் வைத்துக்கொள்ளக் கூடாது?” என்று நண்பர்கள் கேட்கலாம். தேதி எல்லையை அங்கே வைத்துக்கொண்டால் இப்போதுள்ளது போதாது என்று இன்னும் பல விபரீதங்கள் நேரிடும். கிரீன்விச் நகரத்துப் பூஜ்யம் டிகிரி தீர்க்க ரேகை போகும் இடம் எல்லாம் ஜனநெருக்கம் நிறைந்த பிரதேசங்கள் இருக்கின்றன. அதில் நாள் ஆரம்பித்தால், மக்களெல்லாம் குழப்பமடைந்து அவதிப்பட நேரும். சமையலறையில் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும்போது, கூடத்தில் திங்கள்கிழமை பிறந்துவிட்டால் எப்படியிருக்கும்? இந்தத் தொல்லையெல்லாம் வேண்டாமென்றுதான் 180 டிகிரி தீர்க்க ரேகையைத் தேதி எல்லையாக நிர்ணயித்தார்கள். அந்த ரேகை செல்லுமிடமெல்லாம் பெரும்பாலும் ஒரே சமுத்திரம்.



தேதி மாறும் விந்தை எப்படி என்பதை இங்கே பார்ப்போம்.

பூமியில் மலைபோல் குறியிட்டிருக்கும் பகுதி இன்று காலையில் சூரியனை நோக்கியிருப்பதாக வைத்துக்கொள்ளலாம்.

பூமி கீழ் நோக்கிச் சுற்றுவதை மலை அருகில் உள்ள அம்பு அடையாளம் காட்டுகிறது.

அந்த மலையிலிருந்து அதிவேகமான ஓர் ஆகாய விமானத்தில் ஒரு மனிதன் எதிர்ப்பக்கத்தில் செல்கிறான். அவன் நாலே நாளில் உலகத்தைச் சுற்றுவதாக வைத்துக் கொள்ளலாம்.

மலை இன்று காலையிலிருந்து நாளைக் காலையில் சூரியனுக்கு நேரே வரும்போது, மனிதன் 1 என்ற இடம் போய்ச் சேர்வான். அப்போது மலையில் இருப்பவருக்கு விடிகாலை நேரம். ஆனால், 1 என்ற இடத்திலிருக்கும் மனிதனுக்கோ போது விடிய இன்னும் 6 மணி நேரம் இருக்கும். அதாவது, அவன் கால் நாளை இழந்து விடுகிறான். இதே போல மலையின் இரண்டாவது சுற்றில் அரை நாளையும் மூன்றாவதில் முக்கால் நாளையும் நான்காவதில் ஒரு நாளையும் அவன் இழந்து விடுவான். மலைக்கு நாலு சூரியோதயம்; உலகம் சுற்றிய மனிதனுக்கோ மூன்று சூரியோதயம்! இதே மனிதன் பூமி சுற்றும் திசையிலே பிரயாணம் செய்து உலகத்தைச் சுற்றி முடித்தால், மலைக்கு நாலு சூரியோதயம் ஆகும்போது, மனிதனுக்கு ஐந்து சூரியோதயம் ஆகிவிடும்!

ஆனால், அதிலும் இடையே சில தீவுகள் குறுக்கிடுகின்றன. அவைகளில் தேதிக் குழப்பம் ஏற்படாதிருப்பதற்காக, தேதி எல்லை சற்று மேற்கும் சற்றுக் கிழக்குமாக வளைந்து 180 டிகிரியை விட்டுக் கொஞ்சம் கொஞ்சம் விலகிச் செல்கிறது.

நானூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவர்களுக்கு இப்படிச் சர்வதேசத் தேதி எல்லை ஒன்று தேவைப்படவேயில்லை. அப்போது யாரும் கப்பலில் பூமியைச் சுற்றிக் கொண்டு ஊர் திரும்புவதில்லை. கப்பல் பிரயாணம் வலுத்தது. முதல் முதலாகப் பூமியை ஒரு சுற்றுச் சுற்றி ஊர் திரும்பினார்கள் சிலர். தாங்கள் கண்ட சூரியோதய அஸ்தமனக் கணக்குப்படி, புதன் கிழமை தாங்கள் திரும்பியதாக அவர்கள் நினைத்திருந்தார்கள். ஊரில் உள்ளவர்களோ, "இன்று புதன்கிழமை இல்லை; வியாழக் கிழமை" என்றார்கள். இதைக் கேட்டு அவர்களுக்கு ஒரே பிரமிப்பாகப் போய்விட்டது. இதென்ன விந்தை என்று திகைத்தார்கள். கடைசியில் ரகசியம் புலப்பட்டது. சர்வதேசத் தேதி எல்லையும் பிறந்தது.

அந்த எல்லை பிறந்தபோது, அது பிஜித்தீவின் குறுக்கே சென்றது. அதை ஸர்வே செய்த, அடையாளம் செய்தார்கள். அதிலிருந்து ஒரு விஷமம் நடந்தது. ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாள் என்றும் அன்று யாரும் எவ்வித வேலையும் செய்யக்கூடாதென்றும் அங்கிருந்த பாதிரிகள் வற்புறுத்தி வந்தார்கள். இந்தப் பாதிரிகளையும் வேலைக்கார அடிமைகளையும் ஏமாற்றக் கரும்புத் தோட்ட முதலாளி ஒருவர் ஒரு தந்திரம் செய்தார். அவருடைய கரும்புத் தோட்டத்தின் குறுக்கேதான் சர்வதேசத் தேதி எல்லை சென்றது. சனிக்கிழமை அன்று அவர் தம் அடிமைகளைத் தோட்டத்தின் கிழக்குப் பகுதிக்கு அழைத்துப் போய் வேலையில் ஏவுவார். அடுத்தநாள் காலையில் அவர்களை மேற்குப் பகுதிக்கு அழைத்துப் போய் விடுவார். அப்போது அங்கே திங்கள்கிழமையாக இருக்கும். இந்தப் பக்கத்தில் சனிக்கிழமை முடிந்த மறுநாள் அந்தப் பக்கத்துக்கு எல்லாரையும் அழைத்துப் போய்விடுவார். அப்போது அங்கே இன்னொரு சனிக்கிழமையாக இருக்கும். இப்படியாக அந்த அடிமைகளுக்கு ஞாயிற்றுக்கிழமை என்பதே வராமல் செய்து எல்லா நாளும் அவர்களைக் கசக்கி வேலை வாங்கினார். "இதென்னடா இவன்! ஞாயிற்றுக்கிழமையைத் திருடிவிட்டானே!" என்று பதறினார்கள் பாதிரிகள். சர்வதேசத் தேதி எல்லையை நிர்ணயித்த மெரிடியன் மகாநாட்டினரிடம் புகார் செய்து கொண்டார்கள். அதன் பலனாக, சர்வதேசத் தேதி எல்லை, பிஜித்தீவுக்குள் புகாமலே விலகிச் செல்ல வேண்டுமென்று மகாநாட்டினர் தீர்மானித்தார்கள். இப்போதெல்லாம் அது அப்படித்தான் எந்த ஊரையும் எட்டிப் பார்க்காமலே கடல் மார்க்கமாகப் பயபக்தியோடு எட்டிச் செல்லுகிறது.

வான சாஸ்திரம் நம் ஆத்மாவை மேல் நோக்கச் செய்கிறது; நம்மை இந்த உலகத்திலிருந்து வேறு உலகத்துக்கு அழைத்துச் செல்கிறது.

—ப்ளேட்டோ

சிறு கதை:



சாப விமோசனம்

'புதுமைப் பித்தன்',

****

தமிழ் நாட்டின் மறுமலர்ச்சிச் சிறுகதை எழுத்தாளர்களுள் மிகச் சிறந்த ஒருவர் ஆசிரியர். கரை கடந்த காட்டாற்று வெள்ளம் போன்ற உணர்ச்சிகளைப் புகுத்தி, அலாதியான பாணியில், படிப்பவர் மனமழுந்தும் முறையில் கதை எழுதுவதில் வல்லவர். காலஞ் சென்ற அவர் ஞாபகார்த்தமாக அவருடைய மனைவி மக்களைக் கௌரவிக்கும் பொருட்டு, 'தினமணி' ஆசிரியர் ஸ்ரீ ஆ.நா. சிவராமன் தலைமையில் ஒரு கமிட்டி அமைந்திருக்கிறது. அதற்குப் பணம் அனுப்ப விரும்பும் நண்பர்கள், "வை. கோவிந்தன், புதுமைப் பித்தன் நிதிக் கமிட்டியின் பொக்கிஷதார், சக்தி காரியாலயம், மௌப்ரீஸ் ரோடு, சென்னை" என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

****

சாலையிலே ஒரு கற்சிலை. தளர்ந்து நொடிந்து போன தசைக் கூட்டத்திலும், வீரியத்தைத் துள்ளவைக்கும் மோகன வடிவம்......ஆனல், அந்தப் பதுமையின் கண்களிலே ஒரு சோகம் - சொல்லில் அடைபடாத சோகம் - மிதந்து, பார்க்கிறவர்களின் வெறும் தசை ஆசையான காமத்தைக் கொன்று அவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. அது சிற்பியின் அபூர்வக் கனவு அன்று. சாபத்தின் விளைவு. அவள் தான் அகலிகை.

சற்றுத் தூரத்திலே ஒரு கறையான் புற்று. நிஷ்டையில் ஆழ்ந்து தம் நினைவகற்றிச் சோகத்தை மறந்து தவம் கிடக்கிருர் கோதமர். இயற்கை அவரையும் அபேதமாகத் தான் போஷிக்கிறது.

இன்னும் சற்றுத் தூரத்திலே இந்தத் தம்பதிகளின் குடும்பக் கூடு கம்பமற்று வீழ்ந்ததுபோல, இவர்களுக்கு நிழல் கொடுத்த கூரையும் தம்பம் இற்று வீழ்ந்து பொடியாகிக் காற்ருேடு கலந்து விட்டது. சுவரும் கரைந்தது. மிஞ்சியது திரடுதான். இவர்கள் மனசில் எறிய துன்பத்தின் வடுப் போலத் தென்பட்டது அது.

தூரத்திலே கங்கையின் சலசலப்பு. அன்னை கங்கை, இவர்களது எல்லையற்ற சோகத்தை அறிவாளோ என்னவோ!

இப்படியாக ஊழி பல கடந்தன, தம்பதிகளுக்கு.

ஒரு நாள்........

ஆண் சிங்கம் போல, மிடுக்கு நடை நடந்து, எடுத்த கருமம் முற்றியதால் உண்ட மகிழ்ச்சியை மனசில் 'அசை போட்டுக்கொண்டு' நடந்து வருகிறான் விசுவாமித்திரன். மாரீசனும் சுவாகுவும் போன இடம் தெரியவில்லை. தாடகை என்ற கிழட்டுக்கொடுமை நசித்துவிட்டது.

அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொள்கிறான். பார்வையில் என்ன பரிவு! இரண்டு குழந்தைகள் ஓடிப் பிடித்து விளையாடி வருகின்றன. அவர்கள் வேறு யாருமல்ல; அவதார சிசுக்களான ராம லட்சுமணர்களே. அரக்கர் நசிவை ஆரம்பித்து வைத்துவிட்டு அதன் பொறுப்புத் தெரியாமல் ஓடிப் பிடித்து வருகிறார்கள்.

ஒட்டம் புழுதியைக் கிளப்புகிறது...... —புழுதிப்படலம் சிலையின்மீது படிகிறது.

எப்போதோ ஒரு நாள் நின்று கல்லான இருதயம் சிலையுள் துடிக்கிறது. போன போன இடத்தில் நின்று இறுகிப்போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது. கல்லில் ஜீவ உஷ்ணம் பரவி உயிருள்ள தசைக் கோளமாகிறது. பிரக்ஞை வருகிறது.

கண்களை மூடித் திறக்கிறாள் அகலிகை. பிரக்ஞை தெரிகிறது. சாப விமோசனம்! சாப விமோசனம்!... தனக்கு மறுபடியும் புதிய வாழ்வைக் கொடுக்க வந்த தெய்விக புருஷன் எவன்! அந்தக் குழந்தையா?

அவன் காலில் சென்று நமஸ்கரிக்கிறாள். ராமன் ஆச்சரியத்தால் ரிஷியைப் பார்க்கிறான்.

விசுவாமித்திரருக்குப் புரிந்துவிட்டது. இவள் அகலிகை. அன்று இந்திரனுடைய மாய வேஷத்துக்கு ஏமாறிய பேதை. கணவன் மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக, தன் உடம்பை மாய வேஷத்தில் ஏமாறி மாசுபடுத்திக் கொண்டவள். கோதமரின் மனைவி. அவ்வளவையும் ராமனிடம் சொல்லுகிறார். அதோ நிற்கும் புற்று இருக்கிறதே; அதில், வலை முட்டையில் மோனத் தவங்கிடக்கும் பட்டுப் பூச்சிபோலத் தம்மை மறந்து நிஷ்டையில் ஆழ்ந்து இருக்கிறார். அதோ அவரே எழுந்து வந்துவிட்டாரே!

நிஷ்டை துறந்த கண்கள் சாணை தீட்டிய கத்திபோல் சுருள்கின்றன. உடலிலே, காய கற்பம் செய்தது போன்ற வலு பின்னிப் பாய்கிறது. மிடுக்காக, பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவர் போலத் தயங்கித் தயங்கி வருகிறார்.

மறுபடியும் இந்தத் துன்ப வலையா? சாப விமோசனத்துக்குப் பிறகு வாழ்வு எப்படி என்பதை மனசு அப்பொழுது நினைக்கவில்லை....

"அம்மா!" என்று சொல்லி அவள் காலில் விழுந்து வணங்குகிறான் ராமன்.

இரண்டு ரிஷிகளும், (ஒருவர் துணிச்சலையே அறிவாகக் கொண்டவர்; மற்றவர் பாசத்தையே தர்மத்தின் அடித்தலமாகக் கொண்டவர்) சிறுவனுடைய நினைவுக் கோணத்தில் எழுந்த கருத்துக்களைக் கண்டு குதூகலிக்கிறார்கள். எவ்வளவு லேசான, அன்புமயமான, துணிச்சலான உண்மை!

"நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக்கொள்ளுவதுதான் பொருந்தும்" என்கிறான் விசுவாமித்திரன் மெதுவாக.

கோதமரும் அவர் பத்தினியும், அந்தத் தம்பமற்றுத் திரடேறிப்போன மேடும் அவ்விடத்தை விட்டு அகலவில்லை. முன்பு உயிரற்றிருந்த இடத்தில், ஜீவகளை துவள நிலைத்தது.

சாட்டையின் சுடக்கை போலப் போக்கை மாற்றி அமைக்க வந்த சக்திகள் அவ்விடம் விட்டுப் பெயர்ந்துவிட்டன. மிதிலைக்குப் பொழுது சாயும் பொழுதாவது போக வேண்டாமா? மணவினை இரு கைகளை நீட்டி அழைக்கிறதே.

கோதமருக்கு அவளிடம் முன் போல் மனக் களங்கமின்றிப் பேச நா எழவில்லை.

'அந்த மணவினை, உள்ளப்பரிவு பின்னர் பூத்திருந்தாலும், ஏமாற்றின் அடிப்படையில் பிறந்தது தானே! பசுவை வலம் வந்து பறித்து வந்ததுதானே!' என்று கோதமருடைய மனசு, திசை மாறித் தாவித் தன்னையே சுட்டுக் கொண்டது.

கோதமருக்குத் தான் ஏற்றவளா என்பதே அகலிகையின் கவலை.

அகலிகைக்குத் தாம் ஏற்றவரா என்பதே கோதமரின் கவலை.

2

அகலிகையின் விருப்பப்படி, ஆசைப்படி, அயோத்தி வெளிமதில்களுக்குச் சற்று ஒதுங்கி, மனுஷ பரம்பரையின் நெடி படராத தூரத்தில், சரயூ நதிக்கரையிலே ஒரு குடிசை கட்டிக்கொண்டிருந்தார் கோதமர். இப்போது கோதமருக்கு அகலிகைமீது பரிபூர்ண நம்பிக்கை. இந்திரன் மடி மீது அவள் கிடந்தால்கூட அவர் சந்தேகிக்கமாட்டார்.

...ஆனால் அவள் மனசில் ஏறிய கல் அகலவில்லை. தன்னைப் பிறர் சந்தேகிக்காதபடி, விசேஷமாகக் கூர்ந்து பார்க்கக்கூட இடங் கொடாதபடி நடக்க விரும்பினாள். அதனால் அவள் நடையில் இயற்கையின் தன்மை மறைந்து இயல்பு மாறியது. தன்னைச் சூழ நிற்பவர்கள் யாவருமே இந்திரர்களோ என்ற பயம் அகலிகைக்கு நெஞ்சில் உறையேறிவிட்டது ......கோதமர் சாதாரணமாகச் சொல்லும் வார்த்தைகளுக்குக்கூட உள்ளர்த்தம் உண்டோ என்று பதைப்பாள்.

அவள் வாழ்வே நரகவாதனையாயிற்று. அன்று மரீசி வந்தார்; முன்னொரு நாள் ததீசி வந்தார். மதங்கரும் குசலம் விசாரிக்க எட்டிப் பார்த்தார். அவ்வளவு போதிலும் அகலிகையின் உடம்பு குன்றிக் கிடந்தது. மனசும் கூம்பிக் கிடந்தது. அதிதி உபசாரங்கூட வழுவிவிடும்போல் இருந்தது.

ஒரு புதிய கோணத்தில் தம் சிந்தனையைத் திருப்பிவிட்டார் கோதமர். அவருடைய மனசில் அகலிகை மாசு அற்றவளாகவே உலாவினாள். தமக்கே அருகதை கிடையாது; சாபத்தீயை எழுப்பிய கோபமே தம்மை மாசுபடுத்தி விட்டது என்று கருதினார்.

சீதையும் ராமனும் உல்லாசமாகச் சமயாசமயங்களில் அந்தத் திசையில் ரதமூர்ந்து வருவார்கள். அந்த இளந் தம்பதிகளின் பந்தந்தான் என்ன; கோதமருக்குத் தம் அந்தக் காலத்து வாழ்வை ஞாபகப்படுத்தும்.

அகலிகைக்கு வெளியே நடமாடி நாலு இடம் போகப் பிடிப்பற்று இருந்தது. சீதையின் நெருக்கமே அவளது மனச்சுமையை நீக்கிச் சற்றுத் தெம்பை அளித்தது.

பட்டாபிஷேக வைபவத்தின் போது அயோத்திக்கு வருவதாக

ஒப்புக்கொண்டிருந்தாள். ஆனால் அரண்மனைக்குள் ஏற்பட்ட உணர்ச்சிச் சுழிப்புக்குத்தான் வலிமை என்ன! ஒரே மூச்சில் தசரதன் உயிரை வாங்கி ராமனைக் காட்டுக்கு விரட்டி, பரதனைக் கண்ணீரும் கம்பலையுமாக நந்திக் கிராமத்தில் குடியேற்றிவிட்டது.

சரயூ நதிக் குடிசை மறுபடியும் தம்பமற்று வீழ்ந்தது என்று சொல்லவேண்டும். கோதமரின் தர்ம விசாரமெல்லாம் இந்தப் பேய்க் காற்றில் கூறை போயிற்று. மனசில் நம்பிக்கை வறண்டு சூன்யமாயிற்று.

அகலிகைக்கோ அவளது துன்பத்தை அளந்தால் வார்த்தைக்குள் அடைபடாது.

கருக்கலில் கோதமர் ஜபதபங்களை முடித்துக்கொண்டு கரையேறி, குடிசைக்குள் நுழைந்தார்.

அவருடைய பாதங்களைக் கழுவுவதற்காகச் செம்பில் ஜலத்தை ஏந்தி நின்ற அகலிகையின் உதடு அசைந்தது.

“எனக்கு இங்கே இருப்புக் கொள்ளவில்லை. மிதிலைக்குப் போய் விடுவோமே.”

“சரி; புறப்படு. சதானந்தனையும் பார்த்து வெகு நாட்களாச்சு” என்று வெளியே இறங்கினார் கோதமர்.

இருவரும் மிதிலை நோக்கி நடந்தார்கள்.

3

பொழுது புலர்ந்தது. கங்கைக் கரைமேல் இருவரும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

யாரோ ஆற்றுக்குள் நின்று கணீரென்ற குரலில் காயத்திரியைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஜபம் முடியுமட்டும் தம்பதிகள் கரையில் எட்டிக் காத்து நின்றார்கள்.

“சதானந்தா!” என்று கூப்பிட்டார் கோதமர்.

“அப்பா..... அம்மா!” என்று உள்ளத்தின் மலர்ச்சியைக் கொட்டிக் காலில் விழுந்து நமஸ்கரித்தார் சதானந்தர்.

இருவரையும் சதானந்தர் தம் குடிசைக்கு அழைத்துச் சென்றார்.

சிரமபரிகாரம் செய்து வைத்துவிட்டு, ஜனகனது தத்துவ விசார சங்கத்துக்குப் புறப்படலானார்.

கோதமரும் உடன் வருவதாகப் புறப்பட்டார். அவருடைய தத்துவ விசாரணையின் புதிய போக்கை நுகர ஆசைப்பட்டார் சதானந்தர்.

மிதிலையின் தெருக்கள் வழியாகச் செல்லும்போது, அயோத்தியில் பிறந்த மனத்தொய்வும் சோகமும் இங்கும் படர்ந்திருப்பதாகப் புலப்பட்டது கோதமருக்கு.

இருவரும் அரசனுடைய பட்டி மண்டபத்துக்குள் நுழைந்தார்கள். சத்சங்கம் சேனசமுத்திரமாக நிறைந்திருந்தது.

ஜனகன் கண்களில் இவர்கள் உடனே தென்பட்டார்கள்.

அவன் ஓடோடியும் வந்து முனிவருக்கு அர்க்கியம் முதலிய உபசாரங்கள் செய்வித்து அழைத்துச் சென்று அவரைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டான்.

ஜனகனுடைய முகத்தில் சோகத்தின் சோபை இருந்தது. ஆனால் அவன் பேச்சில் தழுதழுப்பு இல்லை; அவனுடைய சித்தம் நிதானம் இழக்கவில்லை என்பதைக் காட்டியது.

“என்னத்தைப் பேசுவது?” என்று கோதமர் சற்றுத் தயங்கினார்.

"வசிஷ்டர் தாம் கட்டிய ராஜ்யத்தில் உணர்ச்சிக்கு மதகு அமைக்கவில்லை" என்றான் ஜனகன் மெதுவாகத் தாடியை நெருடிக் கொண்டே.

ஜனகனின் வாக்கு வர்மத்தைத் தொட்டுவிட்டது.

"உணர்ச்சியின் சுழிப்பிலே தானே உண்மை பிறக்கும்?" என்றார் கோதமர்.

"துன்பமும் பிறக்கும்; உணர்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ளத் தெரியாதபோனால். ராஜ்யத்தைக் கட்ட ஆசைப்படும்போது அதற்கும் இடம் போட்டு வைக்க வேண்டும்; இல்லாவிட்டால் ராஜ்யம் இருக்காது" என்றான் ஜனகன்.

"தங்களுக்கு சந்தேகமா?" என்று சந்தேகத்தை எழுப்பினார் கோதமர்.

"நான் ஆளவில்லை; ஆட்சியைப் புரிந்துகொள்ள முயலுகிறேன்" என்றான் ஜனகன்.

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்.

"தங்கள் தர்ம விசாரணை எந்த மாதிரியிலோ?" என்று விநயமாகக் கேட்டான் ஜனகன்.

"இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. இனிமேல்தான் புரிந்துகொள்ள முயலவேண்டும்; புதிர்கள் பல புலன்களையெல்லாம் கண்ணியாகக் கட்டுகின்றன" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் கோதமர்.

மறுநாள் முதல் அவர் ஜனகனின் மண்டபத்துக்குப் போகவில்லை. புத்தியிலே பல புதிர்கள் ஹிமாசலமாக ஓங்கி நின்றன. தனிமையை விரும்பினார்.

அகலிகைக்கு நீராடுவதில் அபார மோகம். இங்கே கங்கையருகே நிபமதி இருக்கும் என்று தனியாக உதய காலத்திலேயே குடமெடுத்துச் சென்றுவிடுவாள்.

இது நீடிக்கவில்லை.

குளித்துவிட்டுத் திரும்பிக் குனிந்த நோக்குடன், மனசை இழைய விட்டுக்கொண்டு நடந்து வந்துகொண்டிருந்தாள்.

எதிரே மெட்டிச் சத்தம் கேட்டது. ரிஷிபத்தினிகள் யாரோ. அவர்களும் நீராடத்தான் வந்து கொண்டிருந்தார்கள். அவளைக் கண்டதும் பறைச்சியைக் கண்டது போல ஓடி விலகி, அவளை விறைத்துப் பார்த்துவிட்டுச் சென்றார்கள்.

"அவள்தான் அகலிகை" என்பது தூரத்தில் கேட்டது. கோதமருக்கு அன்று அடிவயிற்றில் பற்றிக் கொண்டு பிறந்த சாபத் தீயைவிட அதிகமாகச் சுட்டன அந்த வார்த்தைகள்.

அவள் மனசு ஒரேயடியாகச் சுடுகாடு மாதிரி வெந்து தகித்தது. சிந்தனை திரிந்தது. "தெய்வமே! சாபவிமோசனம் கண்டாலும் பாப விமோசனம் கிடையாதா?" என்று தேம்பினாள்.

இவர்களது மன அவசத்தால் ஏற்பட்ட பளு, சதானந்தனையும் மூச்சுத் திணற வைத்தது.

பளுவைக் குறைப்பதற்காக, "அத்திரி முனிவர் ஜனகனைப் பார்க்க வந்திருந்தார். அகஸ்தியரைப் பார்த்துவிட்டு வருகிறார். மேருவுக்குப் பிரயாணம். ராமனும் சீதையும் அகஸ்தியரைத் தரிசித்தார்களாம். அவர்கள் இருவரிடமும், 'நல்ல இடம் பஞ்சவடி. அங்கே தங்குங்கள்' என்று அகஸ்தியர் சொன்னாராம். அங்கே இருப்பதாகத்தான் தெரிகிறது" என்றார் சதானந்தர்.

"நாமும் தீர்த்தயாத்திரை செய்தால் என்ன?" என்று அகலிகை மெதுவாகக் கேட்டாள்.

"புறப்படுவோமா?" என்று கைகளை உதறிக்கொண்டு எழுந்தார் கோதமர்.

"இப்பொழுதேயா?" என்றார் சதானந்தர்.

அகலிகை பின்தொடர்ந்தாள்.

சதானந்தரின் மனம் தகித்தது.

4

பொழுது சாய்ந்து, ரேகை மங்கிவிட்டது. இருவர் சரயூ நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

தம் வாழ்வின் பாதை போன்ற மேடு பள்ளங்களைக் கடந்து வந்துவிட்டார்கள்.

'இன்னும் சில தினங்களில் ராமன் திரும்பிவிடுவான்; இனி மேலாவது வாழ்வின் உதயகாலம் பிறக்கும்' என்ற ஆசைதான் அவர்களை இழுத்து வந்தது.

பதினான்கு வருஷங்களுக்கு முன் தாம் கட்டிய குடிசை இற்றுக் கிடந்த இடத்தை அடைந்தார்கள்.

இரவோடு இரவாக, குடியிருக்க வசதியாகக் கோதமர் அதைச் செப்பனிட்டார். வேலை முடியும் போது உதய வெள்ளி சிரித்தது.

ஒருநாள் அதிகாலையில் அகலிகை நீராடச் சென்றிருந்தாள்.

அவளுக்கு முன், ஒரு விதவை குளித்துவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள்; யார் என்று அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை; ஆனால் எதிரே வந்தவள் அடையாளம் கண்டுகொண்டுவிட்டாள். ஓடோடி வந்து அகலிகையின் காலில் சர்வாங்கமும் தரையில் பட விழுந்து நமஸ்கரித்தாள்.

தேவி கைகேயி! தன்னந்தனியளாக, பரிசனங்களும் பரிவாரமும் இல்லாமல் துறவியாகிவிட்டாளே!

குடத்தை இறக்கி வைத்துவிட்டு அவளை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தினாள். அவளுக்குக் கைகேயியின் செயல் புரியவில்லை.

"தர்ம ஆவேசத்திலே பரதன், தன்னுடைய மனசில் எனக்கு இடம் கொடுக்க மறந்துவிட்டான்" என்றாள் கைகேயி.

குரலில் கோபம் தெறிக்கவில்லை; மூர்த்தன்யம் துள்ளவில்லை. தான் நினைத்த கைகேயி வேறு; பார்த்த கைகேயி வேறு. படர்வதற்குக் கொழுகொம்பற்றுத் தவிக்கும் மனசைத்தான் பார்த்தாள் அகலிகை.

..ராமனை எதிர்பார்த்திருப்பது பரதனல்ல; கைகேயி.

மறுநாள் அவள் அகலிகையைச் சந்தித்தபொழுது முகம் வெறிச்சோடியிருந்தது. மனசு நொந்து கிடந்தது.

"ஒற்றர்களை நாலு திசைகளிலும் விட்டுப் பார்த்தாகிவிட்டது. ராமனைப்பற்றி ஒரு புலனும் தெரியவில்லை. இன்னும் பதினெட்டு மணி நேரத்துக்குள் எப்படி வந்துவிடப் போகிறார்கள்? பரதன் பிராயோபவேசம் செய்யப் போகிறானும். அக்கினி குண்டம் அமைக்க ஏற்பாடு செய்துவருகிறான்" என்றாள் கைகேயி.

பரதன் எரியில் தன்னை அவித்துக்கொள்ளுவது ராஜ்யத்துக்குத் தக்க பிராயச்சித்தம் என்று அவள் கருதுவது போல இருந்தது பேச்சு.

சற்று நிதானித்து, "நானும் எரியில் விழுந்துவிடுவேன்; ஆனால் தனியாக, அந்தரங்கமாக" என்றாள் கைகேயி. அவள் மனசு வைராக்கியத்தைத் தெரிவித்தது.

பதினான்கு வருஷங்கள் கழித்து மறுபடியும் அதே உணர்ச்சிச்

சுழிப்பு. அயோத்திக்கு ஏற்பட்ட சாபத்தீடு நீங்கவில்லையா?

அகலிகையின் மனசு அக்குத் தொக்கு இல்லாமல் ஓடியது. தனது காலின் பாபச்சாயை என்றே சந்தேகித்தாள்.

"வசிஷ்டரைக் கொண்டு அவனைத் தடை செய்யக்கூடாதோ!" என்றாள் அகலிகை.

"பரதன் தர்மத்துக்குத்தான் கட்டுப்படுவான்; வசிஷ்டருக்குக் கட்டுப்படமாட்டான்" என்றாள் கைகேயி.

பரதனை உண்டு பலிகொள்ள அக்கினித் தேவன் விரும்பவில்லை. அநுமன் வந்தான்; நெருப்பு அவிந்தது. திசைகளின் சோகம், கரை உடைத்த குதூகலமாயிற்று.

சீதையும் ராமனும் தன்னைப் பார்க்க வருவார்கள் என்று அகலிகை உள்ளம் பூரித்தாள். வரவேற்பு ஆரவாரம் ஒடுங்கியதும் அவர்கள் இருவரும் பரிவாரம் இன்றி வந்தார்கள்.

ரதத்தை விட்டு இறங்கிய ராமனது நெற்றியில் அநுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது. சீதையின் பொலிவு அநுபவத்தால் பூத்திருந்தது. இருவர் சிரிப்பின் லயம் மோட்ச லாகிரியை ஊட்டியது.

ராமனை அழைத்துக்கொண்டு கோதமர் வெளியே உலாவச் சென்றுவிட்டார்.

ராவணன் தூக்கிச் சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னாள் சீதை. ராமனுடன் சேர்ந்துவிட்ட பிறகு துன்பத்துக்கு அவளிடம் இடம் ஏது?

அக்கினிப் பிரவேசத்தைச் சொன்னாள். அகலிகை துடித்துவிட்டாள்.

"அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?" என்று கேட்டாள்.

"அவர் கேட்டார்; நான் செய்தேன்" என்றாள் சீதை, அமைதியாக.

"அவன் கேட்டானா?" என்று கத்தினாள் அகலிகை; அவள் மனசில் கண்ணகி வெறி தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா?

ஏமாற்றா? கோதமர் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?

இருவரும் வெகு நேரமாக மௌனமாக இருந்தார்கள்.

"உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா?" என்று கூறி, மெதுவாகச் சிரித்தாள் சீதை.

"உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா?" என்றாள் அகலிகை. வார்த்தை வறண்டது.

"நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா, உள்ளத்தைத் தொடவில்லையானால்? நிற்கட்டும்; உலகம் எது?" என்றாள் அகலிகை.

வெளியிலே பேச்சுக் குரல் கேட்டது. அவர்கள் திரும்பிவிட்டார்கள்.

சீதை அரண்மனைக்குப் போவதற்காக வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

ராமன் மனசைச் சுட்டது; காலில் படிந்த தூசி அவனைச் சுட்டது.

ரதம் உருண்டது; உருளைகளின் சத்தம் ஓய்ந்தது.

கோதமர் நின்றபடியே யோசனையில் ஆழ்ந்தார். நிலைகாணாது தவிக்கும் திரிசங்கு மண்டலம் அவர் கண்ணில் பட்டது.

உள்ளே நுழைந்தார்.

அகலிகைக்குப் பிரக்ஞை மருண்ட நிலை. மறுபடியும் இந்திர

நாடகம், மறக்க வேண்டிய இந்திர நாடகம், மனத்திரையில் நடந்து கொண்டிருந்தது.

கோதமர் அவளைத் தழுவினர். கோதமர் உருவில் வந்த இந்திர வேஷமாகப் பட்டது அவளுக்கு. அவள் நெஞ்சு கல்லாய் இறுகியது. என்ன நிம்மதி!

கோதமர் கைக்குள் சிக்கிக்கிடந்தது ஒரு கற்சிலை.

அகலிகை மீண்டும் கல்லானுள். மனச்சுமை மடிந்தது.

* * *

கைலயங்கிரியை நாடி ஒற்றை மனித உருவம் பனிப் பாலைவனத்தின் வழியாக விரைந்துகொண்டிருந்தது. அதன் குதிகாலில் விரக்திவைரம் பாய்ந்து கிடந்தது. அவர்தான் கோதமர். அவர் துறவியானர்.

பரீட்சை

ஐந்து ஆமைக் குஞ்சுகள் ஒரு நிலாச் சாப்பாடு சாப்பிட எண்ணின. பலவித உணவுகளை மூட்டை கட்டிக்கொண்டன. வெகு தூரத்திலுள்ள தோட்டத்துக்குப் புறப்பட்டன. மூன்று வருஷங்கழித்து அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தன. கீழே ஒரு துணியை விரித்தன. அதன்மீது உணவுகளையும் பானங்களையும் எடுத்து வைத்தன. 'அடடா! பாட்டில்களின் சொட்டியைக் கழற்ற, கார்க்-ஸ்க்ரு கொண்டு வராமற் போனேமே!' என்று அப்போதுதான் அவைகளுக்கு ஞாபகம் வந்தது.

மூத்த குஞ்சு, "நான் போகமாட்டேன். கடைக் குட்டி தான் போகவேண்டும்" என்றது.

"ரொம்ப சரி. நானே போகிறேன். ஆனுல், நான் இல்லாத சமயத்தில் உணவையெல்லாம் நீங்கள் தினறுவிடுவீர்களே. அதற்கென்ன செய்வதாம்?" என்றது கடைக் குட்டி.

"இல்லை, இல்லை. நீ திரும்பி வந்து சேர்கிறவரையில் நாங்கள் காத்திருக்கிறோம்" என்றன மீதி நாலு குஞ்சுகளும்.

கடைக்குட்டி நகர்ந்தது. பத்து வருஷமாயிற்று. இன்னும் அது திரும்பி வரவில்லை.

"எவ்வளவு நாள் காத்திருப்பது? பணியாரத்தில் ஒரே ஒரு துண்டைக் கொரித்தோமானுல், என்ன நஷ்டம்? கடைக்குட்டிக்கு எங்கே தெரியப்போகிறது?" என்றது ஒரு குஞ்சு.

"அதுவே சரி; அதுவே சரி" என்றன மற்றவை.

நாலும் சேர்ந்து, பணியாரத்தில் ஒரு துண்டைக் கொரிக்க.........

அந்தச் சமயத்தில் புதர் சலசலத்தது. கடைக்குட்டியின் தலை தெரிந்தது. "அகப்பட்டுக்கொண்டீர்களா? கையும் களவுமாய் அகப்பட்டுக்கொண்டீர்களா? எனக்கு அப்போதே தெரியுமே. இத்தனை காலமும் நான் இங்கேயே ஒளிந்து கொண்டிருந்தது நல்லதாய்ப் போச்சு!" என்றது அது.

—'போர்க்குவா பாஸ்', பிரஸ்ஸல்ஸ்.

பாரம்பரியம்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ பெ. தூரன்

'எல்லோரும் ஒன்றே' என்று வேதாந்தம் பேசலாம்; அரசியல் வாதம் செய்யலாம். விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தால்தான் அதன் உண்மை பொய்களின் அளவு புரியும். உயிர் வர்க்கங்கள் பரம்பரையாலும் சூழ்நிலையாலும் என்ன என்ன வேற்றுமைக் குணங்களைப் பெறுகின்றன என்பதைப் பல விஞ்ஞானிகள் ஆராய்ந்திருக்கிறார்கள். அவைகளின் சாராம்சத்தை இந்த நூலில் மிகவும் தெளிவாகவும் ரஸமாகவும் விளக்குகிறார் நண்பர் தூரன். அவர் கலைக்களஞ்சியத்தின் ஆசிரியர். சிறந்த எழுத்தாளர். கவிஞர்.

காப்பிரைட்; பாரம்பரியம் (தமிழ்ப் புத்தகம்); வெளியிட்டோர்: ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம், கோயம்புத்தூர். விலை ரூ. 1-4-0.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பாரம்பரியம்

பாரம்பரியமா, சூழ்நிலையா - எது திறமைகளுக்கும் தன்மைகளுக்கும் காரணமாயிருக்கிறது என்ற கேள்வியும் அதற்குச் சரியான விடையும் மக்களின் சமூக வளர்ச்சிக்கு மிக முக்கியமானவை. பாரம்பரியமே பிரதானம் என்ற கொள்கையைப் பின்பற்றி ஒரு புதிய உயர்ந்த மனித வர்க்கத்தை உண்டாக்கும் முயற்சியில் ஜெர்மனி போன்ற தேசங்கள் ஈடுபட்டன. ஜெர்மானியர்களே அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்த ஜாதியினரென்றும், அவர்களுக்குள்ளேயும் குறைந்த மதிநுட்பமும், உடற்கட்டும், தீராத தொத்துநோய்களும் உடையவர்களுக்குச் சந்ததியே ஏற்படாதவாறு சாஸ்திர முறையில் தடுத்துவிடுவதால் அடுத்து வரும் மக்கள் மேலும் மேலும் உயர்ந்து விளங்குவார்களென்றும் அவர்கள் நம்பினார்கள். அதே சமயத்தில் அமெரிக்க நாட்டு மனத்தத்தவ நிபுணரான வாட்சன் போன்றவர்கள் சூழ்நிலையாலேயே எல்லாம் அமைகின்றனவென்றும், யாருக்கும் எந்த விதமான திறமையையும் உண்டாக்கிவிடலாம் என்றும் முழங்கினார்கள்.

இது சரிதான் என்று பூரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பது வேறு சிலருடைய அபிப்பிராயம். சூழ்நிலையாலும், விடா முயற்சியோடு கூடிய பயிற்சியினாலும் ஒருவன் விருப்பமான துறையிலே ஓரளவிற்குத் திறமையை அடையலாமாயினும், பாரம்பரியமே பெருமையின் எல்லையை வகுக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் சூழ்நிலையும் பயிற்சியும் உதவி புரியாவிடில் பாரம்பரியத்தால் அமைந்த எந்தத் திறமையும் அதன் முழு அளவுக்கு மலராது என்பதையும் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

பாரம்பரியம் (Heredity), சூழ்நிலை (Environment) ஆகியவற்றின் இயல்புகளை விரிவாகச் சோதனை செய்து காண்பதற்காக ராக்பெல்லர் ஸ்தாபனம் நீண்ட காலத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. அமெரிக்காவில் உள்ள ஜாக்சன் ஞாபகார்த்த ஆராய்ச்சிச் சாலையிலே ஏராளமான பொருட் செலவில் இதுபற்றிய சோதனை நடந்து வருகிறது. மனித வர்க்கம் விரைவிலே பெருகுவதில்லை ஆதலாலும், மக்களைச் சோதனைக்குட்படுத்துவது எளிதல்ல ஆதலாலும் நாய் முதலிய பிராணிகளைக் கொண்டே ஆராய்ச்சி நடைபெறுகிறது. அந்த ஆராய்ச்சிச் சாலையின் அதிபரான டாக்டர் விட்டில் என்பவர் கூறுகிறார்: "பாரம்பரியமோ, சூழ்நிலையோ மற்றதன் உதவியின்றித் தனித்து நின்று சிறந்த பயனை அளிக்காது. ஒவ்வொன்றும் மற்றதைச் சார்ந்தே நிற்கிறது. அவை இரண்டின் கலப்பில் விளைந்ததே நாம் காணும் மனித வாழ்க்கையாகும்."

பொதுவாகக் கூறினால் பாரம்பரியமாக உடல் உறுப்புக்களும் நிறமும் தலை முடியின் தன்மையும் அமைகின்றன எனலாம். இதழ்களின் அமைப்பு, கண்களின் வடிவம், பற்களின் வரிசை, தாடை எலும்புகள் எல்லாம் பெற்றோர்

தந்தவை. காதுகளின் வடிவங் கூடப் பாரம்பரியமாகக் கிடைக்கிறது என்று பேராசிரியர் விட்னீ கூறுகிறார். கண்களின் நிறமும் அவ்வாறுதான்.

என் நண்பர்களில் ஒருவர் சிறந்த வைத்தியர்; மற்றொருவர் புகழ் பெற்ற எழுத்தாளர். ஆனால் இவர்கள் இருவருடைய பெற்றோர்களும் சாதாரண விவசாயிகளே. அவர்களுடைய குடும்பத்திலே யாருக்காவது அதிகமான கல்வியோ, வேறு கலைத் திறமையோ இருந்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும் இவர்களிருவரும் இரு கலைகளில் உயர்ந்து விளங்குகிறார்கள். இவர்களுடைய கலைத் திறமைக்கும் பாரம்பரியத்துக்கும் உள்ள சம்பந்தத்தை ஆராய்வது லேசல்ல.

உடல் அமைப்பிலுங்கூட மேலே கூறியவாறு எளிதாகக் குழந்தைகள் அனைவரிடத்திலும் பாரம்பரியச் சாயலைக் காண்பது கடினம். தந்தை கறுப்பாகவும், தாய் தங்க நிறமாகவும் இருந்தால் குழந்தை எந்த நிறத்தோடு இருக்கும் என நிச்சயமாகக் கூற முடியாது. தந்தையைப் போலக் கறுப்பாக இருக்கலாம்; அல்லது தாயைப் போலத் தங்க நிறமாக இருக்கலாம். அந்த இரண்டு நிறங்களுக்குமிடையே பல வகையான கலவைகளாகவும் இருக்கலாம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு மெண்டல் என்ற கிறிஸ்துவத் துறவி ஒருவர் (1822 - 1884) ஐரோப்பாவில் பிரன் என்ற இடத்திலுள்ள மடத்தில் இருந்துகொண்டு தாவரங்களிலே வேறினச் சேர்க்கையால் ஏற்படும் பலன்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். எட்டு வருஷங்கள் அவர் பல சோதனைகள் செய்து பாரம்பரியத் தன்மைகள் ஓர் ஒழுங்கான முறையில் அமைகின்றன என்று கண்டுபிடித்தார். அவருக்குப் பின் பலர் இதே துறையில் ஆராய்ச்சிகள் நடத்தி அவர் கூறுவது சரியென்று கண்டிருக்கிறார்கள்.

அந்தி மல்லிகையில் சிவப்பு நிறமாகப் பூக்கும் ஓர் இனமும் வெள்ளை நிறமாகப் பூக்கும் ஓர் இனமும் இருக்கின்றன. மெண்டல் அவற்றை எடுத்துக்கொண்டார். அந்த இரண்டு இனங்களையும் சேர்த்தால் என்ன ஆகிறது என்று அவர் சோதனை செய்யலானார்.

பூவிலே மகரந்தத் தூள் இருக்கிறது. அந்தத் தூளிலே ஆண் தன்மை உடையதும், பெண் தன்மை உடையதும் உண்டு. அவை இரண்டும் சேரும்போது பூ காயாக மாறுகிறது. ஒரு பூவிலேயே இரண்டு தன்மைகளையுடைய மகரந்தமும் இருப்பதுண்டு. அவை கலப்பதற்குத் தேனீக்கள் ஒரு காரணமாக இருக்கின்றன. தேனீயின் வேலையை மெண்டல் தாமே மேற்கொண்டார். சிவப்பு நிறமுள்ள பூவிலிருந்து மகரந்தத் தூளை எடுத்து வெள்ளை நிறமுள்ள பூவிலே போட்டார். வெள்ளை நிறமுள்ள பூவிலுள்ளதைச் சிவப்புப் பூவில் தூவினார். வேறு பூக்களிலுள்ள மகரந்தம் இந்தப் பூக்களில் சேராதபடியும் கவனித்துக்கொண்டார். காய் காய்த்தது. அது முதிர்ந்து விதையும் கிடைத்தது. அந்த விதையை ஆவலோடு பாத்தியிலிட்டுத் தண்ணீர் ஊற்றினார். அப்படி முளைக்கவைத்த புதிய செடி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பருவமெய்தி அரும்பிப் பூத்தது. அதன் பூக்கள் முற்றும் சிவப்பாகவுமில்லை; வெள்ளையாகவு

மில்லை. சிவப்பையும் வெள்ளையையும் கலந்தால் உண்டாகும் வெண்சிவப்பாக இருந்தன! துறவியார் தம் ஆராய்ச்சியை அதோடு நிறுத்திவிடவில்லை. வெண்சிவப்புப் பூக்களை ஒன்றோடொன்று சேருமாறு செய்தார். வேறு இனங்கள் அவற்றுடன் கலக்காதவாறு கவனித்துக்கொண்டார். மறுபடியும் புதிய விதைகள் கிடைத்தன. அவற்றைப் பயிரிட்டார். புதிய செடிகள் உண்டாகிப் பூத்தன. அவற்றின் பூக்கள் மேலும் விசித்திரமாக இருந்தன. சில சிவப்பாயும் சில வெள்ளையாயும் சில வெண் சிவப்பாயும் இருந்தன!

இம்மாதிரியாக எட்டு வருஷங்கள் ஆராய்ச்சி செய்ததன் பலனாக அவர் சில உண்மைகளைக் கண்டுபிடித்தார். பாரம்பரியத் தன்மைகள் ஒரு குறிப்பிட்ட திட்டப்படி அமைகின்றன என்பது அவர் கண்ட முக்கியமான உண்மை. அவருக்குப் பின் எத்தனையோ ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பாரம்பரியத் தன்மைகளைப்பற்றிச் சோதனைகள் செய்திருக்கிறார்கள். ஒருவர் காரெலிகளையும் வெள்ளெலிகளையும் வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தார். காரெலிக்கும் வெள்ளெலிக்கும் பிறந்த குட்டிகள் கருமை நிறமாகவே இருந்தன. ஆனால் அவை பருவமடைந்து, தமக்குள்ளேயே இன விருத்தி செய்தபோது, காரெலிகளும் வெள்ளெலிகளும் இங்குள்ள படத்தில் கண்டவாறு தோன்றின.

உயிருள்ள ஒவ்வொரு பொருளும் அணுக்களால் (cells) ஆக்கப்பட்டிருக்கிறது. மரம் செடி கொடிகளையும் பிராணிகளையும் போலவே மனிதனும் இந்த அணுக்களாலேயே ஆக்கப்பட்டிருக்கிறான். முதலில் ஓர் அணு இருக்கிறது. அது இரண்டாகப் பிரிந்து இரண்டு அணுக்கள் ஆகிறது. அவை மறுபடியும் பிரிகின்றன. இவ்வாறு அணுக்கள் தாமே பிரிந்து பிரிந்து பெருகுகின்றன. அவற்றின் தொகுதியாகவும், அவற்றால் உண்டாக்கப்பட்ட எலும்பு போன்ற பாகங்களாலும் உயிர்ப் பொருள்கள்



படம் 1.

உருவாகின்றன. அணு மிக நுட்பமான பொருள். ஒவ்வோர் அணுவும் ஜீவ அணுக்களால் (Protoplasm) ஆக்கப்பட்டிருக்கிறது. ஜீவாணுக்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கும் மிக நுண்ணிய பொருள்களால் உண்டானவை. இந்த நுண்ணிய பொருள்களிலும் தனிப்பட்ட ஒரு சிறு பகுதி உள்ளது. அதையே ஜீவப்பரமாணு (Nucleus) என்கிறோம். ஆகவே, ஒவ்வோர் அணுவிலும் ஒரு ஜீவப் பரமாணுவும் சில ஜீவ அணுக்களும் இருக்கின்றன.

பாரம்பரியத்துக்கும் இந்த அணுக்களுக்கும் முக்கியமான தொடர்பு இருக்கிறது. மனித தேகத்தின் நிறம் பிறவியிலேயே அமைகிறது. ஓரளவுக்கு அது சூழ்நிலையால் மாறுபடலாமெனினும் முக்கியமாகப் பாரம்பரியத் தன்மையையே கொண்டிருக்கும். மேல் தோலின் அடிப்பாகத்திலுள்ள சில அணுக்களில், நிறத்திற்குரிய வஸ்து சேர்ந்திருப்பதாலேயே இந்த நிறம் ஏற்படுகிறது. இது போலவே தலை மயிர், எலும்பு முதலியன அமைவதும் அணுக்களைப் பொறுத்தே இருக்கிறது. தேகத்திலுள்ள உறுப்புக்களை உருவாக்குவதில் சுரப்பிகளும் (Glands) உதவி செய்கின்றன. நமது உடம்பிலே பலவேறு பாகங்களில் பலவகையான சுரப்பிகள் இருக்கின்றன. கேடயச் சுரப்பி (Pituitary Gland) என்பது கழுத்திலே இருக்கிறது. அது உடல் வளர்ச்சிக்குத் துணை புரிகிறது. இந்தச் சுரப்பி சரியானபடி வேலை செய்யாவிடில் மனிதனுடைய உயரம் குறைந்துவிடுமாம். இந்த மாதிரி பல சுரப்பிகள் உடல் வளர்ச்சிக்கு உதவி செய்கின்றன; மனிதனுடைய தன்மை, திறமைகளுக்கும் காரணமாகின்றன. என்றாலும், அவைகளெல்லாம் அணுக்களாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சுரப்பிகள் நன்கு வேலை செய்வதும் அந்த அணுக்களைப் பொறுத்தே இருக்கிறது.

உடம்பிலுள்ள அணுக்களெல்லாம் ஓர் அணுவிலிருந்து பிரிந்து பிரிந்து உண்டானவை. அந்த முதல் அணுவையே பூரித்த அண்டம் அல்லது கருமூலம் (Fertilised Egg) என்று சொல்வார்கள்.

ஆணும் பெண்ணும் கூடுவதாலே மனிதக் கரு உண்டாகிறது. அவ்வாறு கரு உண்டாவதற்குக் காரணமாக உள்ளவை பெண்ணிடத்துத் தோன்றும் அண்டமும் (Ovum) ஆணிடத்து உண்டாகும் விந்தணுவுமாகும் (Sperm). அண்டம் சாதாரணமாக மாதத்திற்கு ஒன்றுதான் வெளிப்படுகிறது. அது கருப்பையை (Ovary) நோக்கி வந்துகொண்டிருக்கிற காலத்தில் விந்தணுவோடு கலக்க நேரிட்டால் உடனே பூரித்துக் கருவாக மாறிவிடுகிறது. பூரித்த அண்டமே முதல் அணு; அது பிரிந்து பிரிந்து பல உறுப்புக்களாக உருவடைகிறது.

அண்டத்தையும் விந்தணுவையும் பன்மடங்கு பெரிதாக்கிக் காட்டும் சாதனங்களை உபயோகித்துப் பார்த்தபோது அவற்றிலே கணுக்கோல்கள் (Chromosomes) என்று சொல்லும்படியான நுண்ணிய பொருள்கள் இருப்பதை உணர்ந்தார்கள்.

விந்தணு பருவமடைந்த ஆணிடத்து உண்டாவது; அண்டம் பருவம் அடைந்த பெண்ணிடத்து உண்டாவது. புணர்ச்சியின் போது வெளியாகும் விந்து

வில் லட்சக்கணக்கான விந்தணுக்கள் இருக்கின்றன. இவைகள் முன்னேக்கி மெதுவாகச் செல்லும். விந்தணுவுக்கு ஒரு நீண்ட வால் உண்டு. அந்த வாலைச் சுழற்றுவதால் அதற்கு முன்னல் நகர முடிகிறது. இப்படி நகரும் போது வழியிலேயே பல நசித்துப் போகின்றன. ஒரு சிலதான் கருமூலக்குழாய் வரை செல்லும். அவற்றிலும் சாதாரணமாக ஒன்று தான் அண்டத்தோடு கலந்து கருவுண்டாகக் காரணமாகிறது. கருமூலக்குழாயை அடைந்த விந்தணுக்களுக்குச் சுமார் ஒரு வாரம் வரையிலும் இந்தச் சக்தி இருக்கிறது. அதற்குள் கருமூலத்துடன் கலக்க முடியாவிட்டால் அவை பயனற்றுப் போய்விடுகின்றன.

அண்டம் சூல் பைகளில் உண்டாகிறது. இரண்டு சூல்பைகள் பெண்களின் உடம்பில் இருக்கின்றன. ஒரு மாதத்தில் ஒரு சூல் பையிலும் அடுத்த மாதத்தில் மற்றொரு சூல் பையிலுமாக மாறி மாறி மாதம் ஒன்று வெளிப்படுகிறது. அது கருமூலக்குழாயில் மூன்று நாட்கள் வரை உயிருடன் இருக்கும். அதற்குள் ஒரு விந்தணுவைச் சந்தித்தால் கருவாகிறது. இல்லாவிடில் நசித்துக் கருப்பை வழியாக வெளியே வந்து விடுகிறது. அண்டம் சிறியதாயினும் கண்ணுக்குத் தெரியக்கூடிய அளவுள்ளது; ஆனல் விந்தணுக்கள் கண்ணுக்குத் தெரியா. அவை அண்டத்தைத் தேடி வருகின்றன. அவைகளில் ஏதாவதொன்று அண்டத்தை அணுகினல் உடனே அதற்குள் பாய்கிறது. அப்போது அதனுடைய வால் அறுபட்டுத் தலைப் பாகம் மட்டும் உட்செல்லுகிறது.

இவ்வாறு விந்தணு உள்ளே சென்ற அண்டத்தைப் பூரித்த அண்டம் என்கிருேம். பூரித்தவுடன் அது பல வகையான மாறுதல்களை அடைய ஆரம்பிக்கிறது.

கருவடைந்த அண்டம் சுமார் ஏழெட்டு நாட்கள் வரை மெதுவாக நகர்ந்து கருப்பையை அடைகிறது. ஆனல் அதற்குள்ளே அது பிரிய ஆரம்பித்துக் கருப் பையைச் சேர்வதற்குள் நூற்றுக்கணக்கான அணுக்களாகி அவையெல்லாம் திரண்ட ஒரு பிழம்பு என்று சொல்லும்படியாய் மாறிவிடுகின்றன.

பூரித்த அண்டம் முதலில் இரண்டாகவும் பின்பு நான்காகவும் நான்கு எட்டாகவும் இவ்வாறு பிரிவதோடு ஓர் ஒழுங்காக அமைந்து பந்துபோலத் திரண்டு கருப் பையை அடைகிறது. அங்கே அது ஓர் இடத்தில் ஒட்டிக் கொண்டு, பின்பு தாயின் ரத்தத்தைக் கொண்டு வளர ஆரம்பிக்கிறது.

பூரித்த அண்டம் பிரிந்து பிரிந்து ஆயிரக்கணக்கான அணுக்களாகி அது காரணமாக உடம்பு வளர்ச்சி அடைகிறது. ஒவ்வோர் அணுவிலும் கணுக்கோல்கள் (Chromosomes) இருக்கின்றன. ரப்பரில் மிக நுண்ணிய நூல் இழுத்து அதை நீளமாகவும் குட்டையாகவும் சிறு சிறு துண்டங்களாக வெட்டினல் எப்படி இருக்குமோ அவ்வாறு இந்தக் கணுக்கோல்கள் தோன்றுகின்றன.

ஒவ்வோர் உயிர்ப்பொருளின் அணுவிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள கணுக்கோல்களே உண்டு. ஈயின் அணுவிலே 4 ஜோடியும் எலியின் அணுவிலே 20 ஜோடியும் இருக்கின்றன. சோளத்தின் அணுவிலே 10 ஜோடி;

தக்காளியின் அணுவிலே 12 ஜோடி. மனித அணுவிலே 24 ஜோடி கணுக்கோல்கள் உண்டு.

மனித அணுவிலுள்ள இந்தக் கணுக்கோல்களை 24 ஜோடிகளாகப் பிரித்து வைத்தால் ஒவ்வொரு ஜோடியும் பார்வைக்கு ஒரே மாதிரி உருவமுடையதாக இருப்பது தெரியவரும். ஆண் அணுவில் ஒரு ஜோடி கணுக்கோல்கள் மட்டும் உருவத்தில் வித்தியாசமாக இருக்கும்.

பூரித்த அண்டத்திலேயும் 48 கணுக்கோல்கள் இருக்கின்றன. அவைகளில் 24 ஆணிடத்திலிருந்தும் மற்ற 24 பெண்ணிடத்திலிருந்தும் வந்தவை.

மனித வர்க்கத்தின் ஒவ்வோர் உயிரணுவிலும் 24 ஜோடிக் கணுக்கோல்கள் இருக்கின்றன என்று மேலே சொன்னேன். அதனால் கருவுண்டாவதற்குக் காரணமாகிய விந்தணுவிலும் கருமூலத்திலும் 24 ஜோடிக் கணுக்கோல்களே இருக்குமென்று நீங்கள் நினைப்பீர்கள். உண்மையில் அவ்வாறு இல்லை. அந்த அணுக்கள் முதிராத காலத்தில் 24 ஜோடிக் கணுக்கோல்களைத்தான் கொண்டிருக்கின்றன. ஆனால் அவை வளர்ந்து கருவுண்டாவதற்குத் தக்கவாறு முதிர்ச்சி அடைவதற்குள் மூன்று வகையாக மாறுதல் அடைந்து ஒவ்வொன்றும் 24 கணுக்கோல்களுடன் தான் வெளியாகின்றன.

எந்தச் சமயத்தில் அண்டம் வெளியாகிறதென்பதை நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. கருமூலக்குழாயில் இது வந்துகொண்டிருக்கும்போது புணர்ச்சியால் வெளியான விந்தணுக்களில் ஒன்று இதைச் சந்தித்தால் பூரிக்கிறது. அவ்வாறு பூரித்துக் கருவாகும் அண்டத்திலே பழையபடி கணுக்கோல்கள் 24 ஜோடிகளாய் விடுகின்றன. அவைகளில் பாதி விந்தணுவிலிருந்து வந்தவை. மற்றப் பாதி அண்டத்தில் இருந்தவை. இவ்வாறு பூரித்த அண்டத்திலுள்ள கணுக்கோல்களுக்கு ஆணும் பெண்ணும் சரிசமானமாகக் காரணமாகின்றனர். பாரம்பரியத் தன்மைகள் அமைய வேண்டுமானால் இந்தக் கணுக்கோல்களின் மூலமாகவே அமைய வேண்டும். கணுக்கோல்களில் பாரம்பரியத் தன்மையைத் தாங்கிக்கொண்டிருக்கும் மிக மிக நுட்பமான அங்கங்கள் இருக்கின்றன. அவற்றைத்தான் ஜீனுக்கள் (Genes) என்று சொல்லுகிறார்கள். ஜீனுக்களின் கூட்டத்தாலேயே கணுக்கோல்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஜீனுக்களைத் தனியாகக் காண்பது அரிது.

ஜீனுக்களே பலவகையான தன்மைகளுக்கும், அங்க அமைப்புக்கும் காரணமாக இருக்கின்றன. அவற்றின் இயல்பைப்பற்றி முற்றும் வரையறுத்துக் கூறுவது மிகக் கடினமான காரியம் என்றாலும், அவற்றால் ஏற்படுகிற பல தன்மைகளைப்பற்றி ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள். அதற்கு முக்கிய உதவியாக இருந்தது ஒரு வகை ஈயாகும் (Fruit Fly).

படத்திலே காணப்படுபவை தான் அந்த ஈக்கள். இடது பக்கத்தில் இருப்பது ஆண் ஈ; வலது பக்கத்தில் இருப்பது பெண் ஈ. அவற்றினுடைய உயிரணுக்களிலுள்ள கணுக்கோல்களே இங்கே காண்பிக்கப்பட்டுள்ளவை. ஈயின் விந்தணுவிலும் அண்டத்திலும் நான்கு நான்கு ஜோடி கணுக்கோல்கள் இருக்கின்றன. பெண் ஈயின் கணுக்கோல்களில் ஒவ்வொரு ஜோடியும் ஒரே



ஆண் ஈ. பெண் ஈ.

கண், தலைமயிர் முதலிய வெவ்வேறு உறுப்புக்களுக்கு ஜீனுக்கள் காரணமாக இருப்பது போல நிறத்துக்கும் அவையே காரணம். அந்திமல்லிகைச் செடியின் கணுக்கோல்களில் நிறத்துக்குக் காரணமாக ஒரு ஜீனு இருப்பதாக வைத்துக்கொள்வோம். இந்த ஜீனுவின் முக்கியத் தன்மை என்னவென்றால், அது ஏதாவது ஒரு குறிப்பிட்ட கணுக்கோலில் ஒரு குறிப்பிட்ட பாகத்தில்தான் அமைந்திருக்கும். கலப்பினச் சேர்க்கை ஏற்படும்போது நிறத்துக்கு ஏதுவான ஜீனு என்னவாகிறது என்று இப்போது கவனிப்போம்.

முதலில் கலப்பில்லாத ஒரு சுயமான வெள்ளைப் பூப் பூக்கும் அந்தி மல்லிகையை எடுத்துக் கொள்ளுவோம். அதன் உயிரணுவிலே பல கணுக்கோல்கள் இருக்குமல்லவா? அவற்றையெல்லாம் உருவத்தில் ஒத்திருக்கும்படியான ஜோடிகளாகப் பிரித்து வைக்கலாம் என்பதும் நமக்குத் தெரியும். அப்படி வைத்தால் ஒத்த ஜோடிகளிலே உள்ள இரு கணுக்கோல்களில் ஒன்று ஆண் தன்மையிலிருந்தும் மற்றொன்று பெண் தன்மையிலிருந்தும் கிடைத்தவையாகும். ஒவ்வொரு ஜோடியிலும் ஒரே மாதிரியான தன்மைக்குக் காரணமான ஜீனுக்கள் இருக்கின்றன. அதாவது, ஒரு ஜோடியிலுள்ள இரண்டு கணுக்கோல்களிலும் ஒரே தன்மைக்குக் காரணமான ஜீனுக்கள் ஒரே அளவில் இருக்கும். நிறத்துக்குக் காரணமாக ஒன்றில் ஒரு ஜீனு இருந்தால் மற்றொன்றிலும் ஒரு ஜீனு இருக்கும். ஆதலால் இந்தச் சுயமான வெள்ளை அந்தி மல்லிகையில், நிறத்துக்குக்

மாதிரி வடிவங்கொண்டிருப்பதையும், ஆண் ஈயின் கணுக்கோல்களில் ஒரு ஜோடி மட்டும் மாறுபட்டிருப்பதையும் படத்தில் காணலாம். ஒவ்வொரு வருக்கத்தைச் சேர்ந்த உயிர்ப் பொருள்களின் உயிரணுவிலும் ஒரே எண்ணிக்கையுள்ள கணுக்கோல்கள் உண்டென்றும், அவற்றை ஒரே மாதிரி உருவமுடைய ஜோடிகளாகப் பிரித்து வைக்க முடியுமென்றும், சாதாரணமாக விந்தணுவிலுள்ள ஒரு ஜோடி மட்டும் உருவத்தில் மாறுபட்டிருக்கும் என்றும் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மாறுபட்ட ஜோடி சில உயிர்களிலே அண்டத்தில் இருப்பதுண்டு.

ஈயின் கால்கள் ஜோடியாக வளர ஒரு ஜீனு உதவுகிறது; ஒரு ஜீனு அதன் சிறகுகளின் வடிவத்தை அமைக்கிறது. சில ஜீனுக்கள் கண்ணின் வடிவத்தையும் நிறத்தையும் நிர்ணயம் செய்கின்றன. இன்னும் சில தேகத்தின் நிறத்தைத் திட்டம் செய்கின்றன.

காரணமான ஜீனுக்கள் ஏதாவது குறிப்பிட்ட ஒரு ஜோடி கணுக்கோல்களில் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதம் மொத்தமாக இரண்டு ஜீனுக்கள் இருக்குமென்று நாம் அறியலாம். வெள்ளை நிறத்துக்குக் காரணமான ஜீனுவை **வெ** என்ற எழுத்தால் சுருக்கமாகக் குறிப்பிட்டால் அவை இரண்டையும் **வெ வெ** என்று எழுதிக் காட்டலாம். இதே மாதிரி சுயச் சிவப்புப் பூப் பூக்கும் அந்தி மல்லிகையில் உள்ள நிற ஜீனுக்களை **சிசி** என்று எழுதிக் காட்டலாம். கலப்பினச் சேர்க்கையில் அவை எவ்வாறு அமைகின்றன என்று இனிக் கவனிப்போம்.

விந்தணுவும் அண்டமும் முதிர்ச்சி அடைந்து கருவுண்டாவதற்குத் தகுதியடைகின்ற காலத்தில் அவைகள் ஒவ்வொன்றிலும் முதிர்ச்சி பெறாத அணுவிலிருந்த கணுக்கோல்களில் பாதிதான் இருக்கும். அந்தப் பாதியானது ஒவ்வொரு ஜோடியிலிருந்தும் ஒவ்வொன்றாக வந்து அமைந்தது. ஆதலால், அந்தி மல்லிகையின் உயிரணுவில் வெள்ளை அல்லது சிவப்பு நிறத்துக்கான ஜீனு எது இருந்தாலும் முதிர்ச்சி பெற்ற விந்தணுவிலோ அல்லது அண்டத்திலோ ஒவ்வொன்றுதான் இருக்கும். அவை சேரும்போது வெண்சிவப்பு நிறம் ஏற்படுகிறது. இதை மூன்றாவது படம் நன்கு காட்டுகிறது.



படம் 3.

வெண் சிவப்புப் பூவுள்ள அந்தி மல்லிகையின் கணுக்கோல்களில் ஒரே உருவமுள்ள ஒரு ஜோடியில் பழையபடி நிறத்துக்கான ஜீனுக்கள் இரண்டு இருக்கும். ஆனால் அவைகளில் ஒன்றில் இருப்பது வெள்ளை நிறத்துக்கான ஜீனு; மற்றொன்றில் இருப்பது சிவப்பு நிறத்துக்கான ஜீனு. ஆகவே, வெண் சிவப்பு அந்தி மல்லிகைகள் தமக்குள்ளே ஒரே இனச் சேர்க்கையாகும்போது என்ன வாகும் என்று கவனிப்போம். அவற்றின் உயிரணுக்களில் கரு உண்டாகக் காரணமான அணுக்கள் முதிரும்போது விந்தணுவிலும் அண்டத்திலும் வெள்ளை நிறத்துக்கான ஒரு ஜீனுவோ அல்லது சிவப்பு நிறத்துக்கான ஒரு ஜீனுவோதான் இருக்கும். ஆதலால் அவை சேர்ந்து கருவாகும்போது கீழ்க் கண்டவாறு புதிய பூச்செடிகள் தோன்றுகின்றன. முதிராத அணுவில் உள்ள நிற ஜீனுக்களில் ஒன்று வெள்ளைக்கானது; மற்றொன்று சிவப்புக்கானது. அவற்றை வெசி என்று குறிப்பிடலாம். அணு முதிரும்போது அதில் வெ அல்லது சி மட்டுந்தான் இருக்கும். அப்படி உண்டான விந்தணுவும் அண்டமும் கலந்து எவ்வாறு புதிய செடிகள் உண்டாகின்றன என்பதை 4-ஆவது படத்தில் காணலாம்.



படம் 4.

வெண்சிவப்புப் பூக்கள் இரண்டின் ஒரே இனச் சேர்க்கையால் எவ்வாறு 1:2:1 என்ற விகிதத்தில் வெள்ளை, வெண்சிவப்பு, சிவப்பு நிறப் பூக்களைத் தரும் அந்தி மல்லிகைகள் உண்டாகின்றன என்பதை இந்தப் படம் விளக்குகிறது. இவற்றில் வெவெ ஜீனுவுடைய பூச் செடிகளை அவற்றிற்குள்ளேயே சேர்த்தால் வெள்ளைப் பூவே உண்டாகும். சிசி ஜீனுவுடைய செடிகளைச் சேர்த்தால் சிவப்புப் பூவே உண்டாகும். வெசி வெசி ஜீனுவுடைய செடிகளைச் சேர்த்தால் படத்தில் கண்டவாறு மூவகைப் பூக்கள் உண்டாகும்.

நிறத்துக்குக் காரணமான ஜீனுக்கள் ஒரே மாதிரியான தன்மையோடு இருப்பதில்லை. அந்தி மல்லிகையில் நிறத்துக்கான ஜீனுக்கள் ஒரே அளவான சக்தியைப் பெற்றிருக்கின்றன. வெவ்வேறு நிறமுள்ள இரு ஜீனுக்கள் வந்து சேரும்போது அவை இரண்டின் அம்சங்களும் புதிய பூவில் சமமாக வெளிப்படுகின்றன. ஆனால் எலி



படம் 5.

களின் விஷயத்தில் அவ்வாறு ஏற்படுவதில்லை. எலியிலே கருமை நிறம் ஓங்கி (dominant) நிற்கிறது. அது வெண்மை நிறத்தை மறைத்துவிடும் சக்தி வாய்ந்ததாகக் காண்கிறது. அதனால்தான் கலப்பினச் சேர்க்கையில் காரெலிகளே தோன்றுகின்றன. காரெலியில் நிறத்துக்குரிய கணுக்கோல்களைக் கக என்று குறிப்பிடுவோம். அதே போல வெள்ளெலியில் உள்ளவற்றை வேவே என்று குறிப்பிடுவோம்.

கலப்பினச் சேர்க்கையால் உண்டான எலியின் கணுக்கோல்களில் கருமை, வெண்மை ஆகிய இரண்டுக்கும் உரிய ஜீனுக்கள் இருந்தாலும் (5-ஆவது படம்) கருநிறம் ஓங்கி நிற்பதால் எலி கறுப்பாகவே இருக்கிறது.

ஆனால் வெள்ளை நிற ஜீனு அடியோடு மறைந்தே போய்விடுவதில்லை. முதல் கலப்பினச் சேர்க்கையில் பிறந்த எலிகள் கறுப்பாக இருந்தாலும் அவற்றுக்குள்ளேயே ஓரினச் சேர்க்கை செய்தால் அதனால் பிறந்த குட்டிகளில் சுமார் நான்கில் ஒரு பாகம் வெண்மையாக இருக்கின்றன. 6-ஆவது படத்தைப் பார்த்தால் அது சுலபமாக விளங்கும்.

முதல் கலப்பினச் சேர்க்கையால் பிறந்த காரெலிகளின் அணுக்களில் கருமை வெண்மை ஆகிய இரு நிறத்துக்கான ஜீனுக்களும் இருக்கும். அப்படிப்பட்ட ஆண் அணுவையும் பெண் அணுவையும் எடுத்துக்கொள்ளுவோம். அவற்றில் கருமைக்கும் வெண்மைக்கும் காரணமான கணுக்கோல்களைக் கவே என்று குறிப்பிடுவோம். இந்த அணுக்கள் முதிர்ச்சி அடையும்போது முன்பே கூறியபடி இரண்டிரண்டாகப் பிரிகின்றன. கணுக்கோல்கள் ஒவ்வொன்றும் இரண்டாகப் பிரிவுபடாமல் பாதி ஓர் அணுவுக்கும் மற்றப் பாதி மற்றதற்கும் செல்கின்றன. இவ்வாறு உண்டான அணுக்கள் கலக்கக் கூடிய விதத்தைப் படம் காண்பிக்கிறது. இரண்டாம் கலப்பினச் சேர்க்கையால் பிறக்கும் நான்கு குட்டிகளில் ஒன்றின் கணுக்கோல்களில் கருமை நிறத்துக்குரிய ஜீனுக்களே (கக) உள்ளன. வேறு இரண்டில் கருமை, வெண்மை இரண்டுக்குமுரிய ஜீனுக்கள் (கவே, கவே) இருக்கின்றன. ஆனால் கருமை நிறம்

ஓங்கி நிற்பதால் இந்த இரண்டு குட்டிகளும் முதல் குட்டி போலக் கறுப்பாகவே இருக்கும். நான்காவது குட்டியின் கணுக்கோல்களில் வெண்மை நிற ஜீனுக்களே (வெவெ) இருப்பதால் அதுமட்டும் வெள்ளையாக இருக்கும். இவ்விதமாக அந்த வெண்மை நிறம் இரண்டாவது கலப்பினச் சேர்க்கையின்போது தோன்றுகிறது.

நிறத்துக்குக் காரணமான ஜீனுக்களில் சில எப்படி ஓங்கி நிற்கின்றனவோ அது போலவே இன்னும் வேறு வேறான பல தன்மைகளுக்கான ஜீனுக்களிலும் ஓங்கி நிற்கும் (Dominant) சக்தி உடையவை உண்டு.

எலியின் கணுக்கோல்களில் உள்ள கருமை நிறத்துக்கான ஜீனு ஓங்கி நிற்கிறது; வெள்ளை நிறத்துக்கான ஜீனு பின்தங்கி (Recessive) நிற்கிறது. இப்படிப் பின்தங்கி நிற்கும் ஜீனுக்கள் அடியோடு மறைந்து போவதில்லை. மனிதனுடைய ஜீனுக்களிலும் இவ்வாறு பின்தங்குபவை உண்டு. செவிட்டூமைகளைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் முழுச் செவிடர்களாக இருப்பதால் மற்றவர்கள் பேசுவதைக் கேட்க முடியாது; அதனாலேயே பேசவும் கற்றுக் கொள்ள இயலாமல் ஊமைகளாக இருக்கிறார்கள். இம்மாதிரி செவிட்டூமைகளாக இருப்பதும் பாரம்பரியத் தன்மையே. ஆனால் அதற்கெனவுள்ள ஜீனு பின்தங்குவது. அதனால் செவிட்டூமைப் பெண்ணைச் சாதாரணமான ஒருவன் புணர்ந்தால் அதன் பயனாகப் பிறக்கும் குழந்தைகள் சாதாரணமாகப் பேசக்கூடிய குழந்தைகளாகவே இருக்கும். அவற்றின் காதும் நன்றாகக் கேட்கும். ஆனால் இம்மாதிரி பிறந்த குழந்தை ஒரு செவிட்டூமையுடன் சேர்ந்தாலோ அல்லது தன்னைப் போலச் செவிட்டூமைக்குப் பிறந்தவர்களுடன் சேர்ந்தாலோ பிறக்கும் குழந்தைகளில் சில செவிட்டூமைகளாக இருக்கும்.

மேலே கூறியவாறு ஓங்கி நிற்பதும் பின்தங்கி நிற்பதும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி இருப்பதில்லை. எலியைப் பொறுத்தவரையில் கருமை நிறம் முற்றும் ஓங்கி நிற்கிறது. முதல் கலப்பினச் சேர்க்கையில் காரெலிகளே தோன்றுகின்றன. ஆனால் ஒரே ஜாதியைச் சேர்ந்த வெள்ளைச் சேவலுக்கும் சிவப்புக் கோழிக்கும் பிறக்கிற குஞ்சுகள் வெள்ளையாக இருந்தாலும் சில இறகுகள் மட்டும் சிவப்பாக இருக்கின்றன. இவ்வாறு ஓங்கி நிற்பதிலும் பல



படம் 6.

தரங்கள் உண்டு. சில முற்றும் ஓங்கி நிற்கும்; சில ஓரளவுக்குத் தான் ஓங்கி நிற்கும்.

ஆகவே, இதுவரை ஜீனுக்களின் மூன்று வகையான தன்மைகளைப் பார்த்தோம். சரிசமமாகக் கலப்பது ஒரு வகை. அதற்கு உதாரணம் வெள்ளை, சிவப்பு அந்திமல்லி கைகள் சேர்ந்து வெண்சிவப்புப் பூ உண்டாவது. ஒரு தன்மை ஓங்கி நிற்பது மற்றொரு வகை. காரெலி வெள்ளெலிச் சேர்க்கையில் கருமையே வெளிப்படுவது. பல பல தரங்களில் ஒரு தன்மை ஓங்கி நிற்பது மூன்றாவது வகை. வெள்ளைச் சேவலுக்கும் சிவப்புக் கோழிக்கும் பிறந்த குஞ்சுகள் இதற்கு உதாரணம்.

வெள்ளை நிறமுள்ள ஓர் ஆணுக்கும், கறுப்பு நிறமுள்ள பெண்ணுக்கும் பிறக்கும் குழந்தைகளின் நிறம் பல விதமாக அமைகிறதே, அதற்கென்ன காரணம் கூறுவது? மனிதக் கணுக்கோல்களில் நிறத்துக்குரிய ஜீனுக்கள் மேலே குறிப்பிட்டபடி ஒன்றொன்றுதான் இருக்குமென்பதில்லை; நிறத்துக்கான பல ஜீனுக்கள் இருக்கின்றன. ஆதலால் அவை சேரும்போது ஒவ்வொரு தடவையும் பூரித்த அண்டத்தில் ஒரே அளவில் இருக்குமென்பதில்லை. அவை எந்த விகிதத்தில் சேர்கின்றனவோ அவற்றுக்குத் தக்கபடி குழந்தையின் நிறம் அமைகிறது.

குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ பிறப்பதற்கு அதன் தாய் காரணமல்லவென்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அதோடு குழந்தையின் தகப்பன் தான் அதற்குக் காரணம் என்றால் இன்னும் ஆச்சரியம் அதிகமாகும். உருவ வேறுபாடுள்ள கணுக்கோல்கள் தான் ஆணாவதற்கும் பெண்ணாவதற்கும் காரணம். பெண் அணுவிலுள்ள 23 ஜோடிக் கணுக்கோல்களை உருவ ஒற்றுமைப்படி ஆண் அணுவிலுள்ள 23 ஜோடிகளுடன் பொருத்தி வைக்க முடியும். அப்படி வைத்தால் எது பெண்ணிடத்திலிருந்து வந்தது, எது ஆணிடத்திலிருந்து வந்தது என்று கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு உருவ ஒற்றுமை இருக்கிறது. மீதியுள்ள 24-ஆம் ஜோடியிலும் பெண் அணுவிலுள்ள இரண்டு கணுக்கோல்களும் ஆண் அணுவிலுள்ள ஒரு கணுக்கோலும் ஒரேமாதிரி உருவம் பெற்றிருக்கும். இவற்றுக்கு எக்ஸ் (X) கணுக்கோல்கள் என்று பெயர். உருவத்தில் மாறுபட்டிருக்கும் ஆண் அணுவிலுள்ள மற்றொரு கணுக்கோலுக்கு ஒய் (Y) கணுக்கோல் என்று பெயர்.

அண்டத்தில் எப்பொழுதும் 'எக்ஸ்' கணுக்கோல் ஒன்று இருக்கும். ஆனால் விந்தணுவிலே எப்பொழுதும் 'எக்ஸ்' கணுக்கோல் இருக்குமென்பதில்லை; சிலவற்றில் 'எக்ஸ்'ம், சிலவற்றில் 'ஒய்'யும் இருக்கும். 'எக்ஸ்'ஐக் கொண்ட விந்தணுப் பாய்ந்து அண்டம் பூரித்தால் பெண் குழந்தை பிறக்கும். 'ஒய்'யைக் கொண்ட விந்தணுப் பாய்ந்து அண்டம் பூரித்தால் ஆண் குழந்தை உண்டாகும்.

ஆகவே, ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் காரணமாயிருப்பவன் ஆணே. பெண்ணைக் குறை சொல்லுவது அறியாமை.

நிறக் குருடாவதும் கணுக்கோல்களின் தன்மையாலேயே. இந்தக் குறைபாடு ஆண்களிடமே அதிகமாகக் காணப்படுகிறது. பெண்

களிடம் மிகக் குறைவாகவே தோன்றும்.

உடல் உறுப்புக்களின் பாரம் பரியத் தன்மைகளை அறிந்து கொள்வது ஓரளவு சுலபம்; ஆனால் மனத்தைப்பற்றி அவ்வளவு சுலப மாக அறிந்துகொள்ள முடியாது. காக்காய் வலிப்பு, பைத்தியம் ஆகிய குறைபாடுகள் பாரம்பரியமாக வரு கின்றன. சூழ்நிலையும் இவற்றுக்குக் காரணமாக இருப்பதுண்டு. சாதா ரணமான சில நோய்களும், தொற்று நோய்களும் எதிர்பாராது ஏற்படும் விபத்துக்களும் காக்காய் வலிப்புக்குக் காரணமாகின்றன. போதை வஸ்துக்களும் ஒழுங்கீன மான வாழ்க்கையும் எதிர்பாராத பெரிய அதிர்ச்சிகளும் சித்தப் பிரமையை உண்டாக்கலாம். பாரம் பரியமாகவும் மேற்கூறிய நோய்கள் எவ்வாறு உண்டாகின்றன என்று இப்பொழுது கவனிப்போம். தாய் தந்தை இருவரும் மனத்திடம் அற்றவர்களாக (Feeble-minded) இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் மனத்திடம் இல்லா லாமல் இருப்பார்கள்; சில குழந்தை களுக்குக் காக்காய் வலிப்பும் உண் டாகலாம். கோடார்ட் (Goddard) என்பவர் மனத்திடமற்ற பலரின் குடும்பங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். அவற்றில் இருந்த 470 குழந்தைகள் மனத்திடம் அற்றிருந் தன; ஆறு குழந்தைகளுக்கே அந்தக் குறைபாடில்லை. பெற்றோர்களில் ஒருவர் மனத்திடமற்றும், மற் றொருவர் அந்தக் குறைபாட்டைத் தமது கணுக்கோலில் கொண்டவ ராகவும் இருந்த வேறு சில குடும் பங்களில் 193 குழந்தைகள் மனத் திடமற்றும், 144 குழந்தைகள் குறைபாடில்லாமலும் இருந்தனர். இந்தக் குறைபாட்டைக் கொண்ட தாய் தந்தையர்களடங்கிய 26 குடும் பங்களில் 39 குழந்தைகள் மனத் திடமற்றும் 83 குழந்தைகள் குறைபாடில்லாமலும் இருந்தனர்.

மனத்திடமற்ற தாய் தந்தைகளுக் குப் பிறக்கும் குழந்தைகளில் சில காக்காய் வலிப்புடையவைகளாக இருக்கலாம் என்று முன்பு கூறி னேன். இம்மாதிரி உண்டாவதை விடப் பெற்றோர்களில் ஒருவர் இந்த நோயை உடையவராகவும் மற் றொருவர் மனத் திடமற்றவராக வும் இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளில்தான் அதிக மானவர்கள் இந்த நோயை உடையவர்களாக இருப்பார்கள். பைத்தியமும் இவ்வாறே பெரும் பாலும் உண்டாகிறது. நல்ல திறமைகள் அமைவதிலும் பாரம் பரியத்தின் பங்கை நிர்ணயிப்பதில் சில சிக்கல்கள் தோன்றுகின்றன. பொதுவாகப் பாரம்பரியத்தினால் திறமைகள் அமையுமென்று கூற லாமே ஒழிய அதுவே தான் காரணமாக இருக்க முடியும் என்று வாதிக்க இயலாது. மிகுந்த திறமை சாலிகள் தோன்றிய சில குடும்பங் களின் வம்சாவளியை எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்த்ததில் அப்படிப்பட்ட திறமைகள் அமைவ தில் பாரம்பரியம் காரணமாக இருப்பது தெரிகிறது.

கால்டன் (Galton) என்பவர் 977 பிரமுகர்களையும் 977 சாதா ரணமான மனிதர்களையும் எடுத்துக் கொண்டு அவர்களுடைய சுற்றத் தார்களைப்பற்றி ஆராய்ந்தார். பிரமுகர்களின் சுற்றத்தார்களில் 535 பேர் சமூகத்தில் முக்கிய ஸ்தானம் வகித்து வந்தார்கள்; ஆனால் மற்றச் சாதாரண மனிதர் களில் 4 சுற்றத்தார்களே முக்கிய ஸ்தானம் வகிப்பவர்களாகத் தெரிந்

தது. இதிலிருந்து பாரம்பரியத்தின் பங்கு இன்னதென்று ஓரளவு தெரிந்துகொள்ளலாம். ஆனால் திறமைசாலிகள் தோன்றும் குடும்பங்களிலும் சாதாரண மக்கள் தோன்ற முடியும்; சாதாரணக் குடும்பங்களிலிருந்தும் திறமைசாலிகள் தோன்ற முடியும் என்பதையும் நாம் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். டாக்டர் வெல்மன் (Dr. Welman) என்ற பெண்மணி தம் ஆராய்ச்சியிலிருந்து சூழ்நிலையைச் சரிப்படுத்துவதன் மூலம் அறிவுத் திறமைகளை ஓங்கச் செய்யலாம் என்று கூறுகிறார். ஆனால் அவர் கூறுவது முற்றும் சரியானதல்ல என்று வேறு பல ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இருந்தாலும் அவர் செய்த சோதனைகளிலிருந்து சூழ்நிலையும் முக்கியமானதுஎன்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்டார்ச் (Starch) என்பவர் கூறிய வாசகம் இந்த இடத்தில் மிகப் பொருத்தமுடையது. ஆஸ்திரேலிய அநாகரிகர்களான வேடர்களின் இடையே நியூடன் பிறந்திருந்தால் அவன் ஒரு நல்ல வேடனாக, அதாவது வேட்டையாடுவதில் கெட்டிக்காரனாகத்தான் இருந்திருப்பான்; உலகம் புகழும் விஞ்ஞானியாக இருந்திருக்க முடியாது. நாகரிகம் வாய்ந்த சமூகத்தில் பிறந்ததால் நியூடனுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களும் அநுபவங்களும் பயிற்சிகளும், அநாகரிகமான பழங்குடி மக்களிடையே தோன்றியிருந்தால் அவனுக்குக் கிடைத்திரா. அவனுடைய பெருமையெல்லாம் முடிவாகச் சூழ்நிலையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

பிறப்பால் அமைந்தவை தவிர மற்ற எல்லாவற்றையும் சூழ்நிலை என்ற பொதுப் பெயராலேயே குறிப்பிடுகிறோம். உணவு, வளர்க்கும் முறை, கல்வி, உலக அநுபவம் முதலியன எல்லாம் இதில் அடங்கும். சுரப்பிகளால் ஏற்படும் மாறுதல்களைக்கூடச் சிலர் சூழ்நிலையிலேயே சேர்த்துப் பேசுவார்கள்.

சூழ்நிலை ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அதி முக்கியமானது. அதனால் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. சீதோஷ்ண நிலைமை கூட நம்மைப் பாதிக்கிறது. சாதாரணமாக ஈக்களுக்கு மூன்று ஜோடி கால்களே உண்டு. ஆனால் அவற்றை மிகக் குளிர்ந்த பிரதேசத்தில் வளர்த்தால் அவற்றுக்கு ஆறு ஜோடி கால்கள் உண்டாகின்றன. ஹிமாலய முயல்கள் வெண்மையான ரோமமுடையவை. ஆனால் அவற்றை மிகக் குளிரான பிரதேசத்தில் வளர்த்தால் உரோமம் கறுப்பாக மாறிவிடுகிறது.

மனிதனைப் பொறுத்த வரையில் இன்னுமொரு முக்கிய விஷயத்தைக் கவனிக்க வேண்டும். கருமை நிறத்துக்குள்ள ஜீனுவே ஒரு பூரித்த அண்டத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது குழந்தையின் நிறம் கருமையாகவே இருக்கும். இதை மாற்ற முடியாது. ஆனால் ஒருவன் கணக்கிலே மிகுந்த திறமைக்குக் காரணமான ஜீனுவைப் பெற்றிருப்பதாகக் கொள்வோம். அதிலிருந்து அவன் பெரிய கணித சாஸ்திரியாவான் என்று நிச்சயம் கூற முடியாது. அதற்குச் சூழ்நிலையின் உதவி தேவை. ஏற்ற பயிற்சி கிடைக்காவிடில் அந்தத் திறமை வெளிப்படாது போய்விடும்.

ஆகவே, 'பாரம்பரியம் முக்கியமா? சூழ்நிலை முக்கியமா?' என்ற

கேள்விக்கு இதுதான் முக்கியம் என்று ஏதாவதொன்றைச் சொல்லுவது சரியாகாது. இரண்டும் முக்கியம் என்றுதான் சொல்லவேண்டும். மீன் நீந்துவதற்கு அதன் வால் முக்கியமா அல்லது தண்ணீர் முக்கியமா என்றால் எதை முக்கியமென்று சொல்லுவது? இரண்டில் எது இல்லாவிட்டாலும் மீன் நீந்த இயலாது. இவைபோலவே பாரம்பரியமும் சூழ்நிலையும்.

ஒரு குடியானவன் சமையலறைக்குப் பின்புறத்திலே ஒரு பீச் (Peach) கன்று தற்செயலாக முளைத்திருப்பதைப் பார்த்தான். அவனுக்கு அதன்மேல் பிரியம் வந்துவிட்டது. ஜாக்கிரதையாக அதை வளர்க்க ஆரம்பித்தான். அது வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்தது. என்ன அதிசயம்! அந்தப் பழம் அதே இனத்தைச் சேர்ந்த மற்ற மரங்களின் பழங்களைப் போலல்லாமல் ஆழ்ந்த நிறமும், அதிக ருசியும் கொண்டிருந்தது. அதனால் அந்த அமெரிக்கக் குடியானவன் அந்தப் பீச் மரத்திலிருந்து பல கன்றுகள் உண்டாக்கினான். அவையெல்லாம் தாய்ச் செடியைப் போலவே நல்ல பழங்களைத் தந்தன.

லெண்டன் நியூமன் என்ற மற்றோர் அமெரிக்க இளைஞன் தன் தந்தையுடன் ரோஜாச் செடி வளர்ப்பதில் ஈடுபட்டிருந்தான். சீனாவிலிருந்து வந்த ஒரு வகை ரோஜாச் செடியுடன் வேறொரு வகை ரோஜாச் செடியை ஒட்டிப் புதிய செடி ஒன்றை அவன் உண்டாக்கினான். ஒரு நாள் அவன் ரோஜா மலர்களைப் பறித்துக் கொண்டிருக்கும்போது ஒரு செடியில் மட்டும் முள்ளே இல்லாமல் இருப்பதைக் கவனித்தான். அதிலிருந்து 26 பதியங்கள் வைத்தான். அவை ஒன்றில்கூட முள்ளே கிடையாது!

இம்மாதிரி இயற்கையில் ஏற்படுகிற மாறுதல்களெல்லாம் ஜீனு மாறுபாட்டைப் (Mutation) பொறுத்தே இருக்கின்றன. அது எப்படி உண்டாகிறதென்று சொல்ல முடியாவிட்டாலும் இந்த மாறுபாட்டால்தான் நாம் இன்று வளர்த்து வரும் பல செடிகளும் மிருகங்களும் தோன்றியுள்ளன.

ஒரு ஜோடி ஈக்களை ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு வளர்த்து வந்தால் பல தலைமுறைகளைச் சேர்ந்த புதிய ஈக்களைப் பார்த்துவிடலாம். அப்படி வளர்க்கும்போது உடலமைப்பில் மாறுபட்ட புதிய ஈக்கள் தோன்றியதைக் கண்டிருக்கிறார்கள். சிவப்பான கண்களுக்குப் பதிலாக வெள்ளை நிறமுள்ள கண்களையுடைய ஈக்கள் பிறக்கின்றன; இறகே இல்லாத ஈக்கள் தோன்றுகின்றன. இவ்வாறு தோன்றுவதற்கு ஜீனு மாறுபாடே காரணமாகும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

மண்ணின் பெருமை

இந்தப் பூமியை நன்ருகப் பாதுகாத்தால், இது நம் சூரத்தனம் முதலிய குணங்களுக்குத் தக்கபடி, காமதேனுவைப்போல் நமக்கு அறம் பொருள் இன்பங்களைத் தரும்.

இந்தப் பூமியின்மீது சூரர்களும் தர்மார்த்தங்களை அறிந்த அரசர்களும் பெரிதும் இச்சை கொள்கிருர்கள். தனங்களில் அதிக ஆசை கொள்வதால், அந்தப் பலசாலிகள் போரிட்டு உயிரை இழக்கிருர்கள்.

இந்தப் பூமி, யாகத்தால் தேவர்களுக்குங்கூட அன்னம் அளிக்கிறது. மனிதர்களுக்கோ முக்கிய ரட்சணை அளிப்பது இதுவே.

நாய்கள் ஒன்றின் வாயிலுள்ள தீனியை மற்றென்று இழுப்பதுபோல், அரசர்கள் பூமியை அநுபவிக்க விரும்பி ஒருவர் பூமியை ஒருவர் கவர முயல்கிருர்கள்.

இன்பங்களை எத்தனை வருஷம் அநுபவித்தாலும், அப்புறங்கூட எவனுக்கும் திருப்தி உண்டாவதில்லை. அதனுல்தான் கௌரவரும் பாண்டவரும் சாம தான பேத தண்டங்களால் பூமியைக் கவர முயன்ருர்கள்.

தொடர்ந்து நன்ருகப் பூமியைப் பாதுகாத்து வந்தால், அது பிராணிகளுக்குத் தந்தையும் சகோதரரும் மக்களும் சொர்க்கமும் ஆகிறது.

—ஸஞ்சயன், வியாஸ பாரதம்.

August '51 Regd. No. M. 4975

மஞ்சரி

கர – ஆவணி

ஊரும் உலகமும்		1
நாடு கொழிக்கும் திட்டம்	நியூ ஹொரைஸன்	3
க்விஸ்		8
சரளா பேன்	பாரத வர்ஷ	9
பரதனும் ராமனும்		10
மதம் பிடித்த யானை		15
குழந்தைகள் குறும்பு		17
வழி வழி வந்த வசனநடை: கடவுள் செய்ந்நன்றி		19
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	பிலிமிண்டியா	22
கார்ட்டூன் கதம்பம்		24
நீர் காட்டும் குச்சி		26
அருள் நகர்	ரா. ஸ்ரீ. தேசிகன்	29
இந்தியாவின் சீனப் பெயர்கள்	இண்டியன் ரெவ்யூ	33
உலகில் பழைய நடனச் சிலை	அமெரிக்கன் ரிப்போர்ட்டர்	36
படித்த மனிதன்		39
விவேகானந்தர்: வாழ்வும் வாக்கும்		40
குழந்தையின் வயிற்றுப்போக்கு	சௌபாக்கியம்	43
நவீன பஞ்சபாண்டவர்	ஸ்வதந்த்ரா	45
குழந்தை வளர்க்கும் ஆண்	சௌபாக்ய	49
தேதிக் குழப்பம்		52
சாப விமோசனம் (சிறுகதை)	'புதுமைப் பித்தன்'	57
பாரம்பரியம் (புத்தகச் சுருக்கம்)	பெ. தூரன்	65
மண்ணின் பெருமை		மூன்றாம் அட்டை